
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜனவரி 14 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2021
வரு. 90 இல. 12 | Friday 14,January, 2022 | 16 பக்கங்கள் 30/-

## இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள்

## இயற்கையோடு இயைந்த வாழ்க்கையே எமது எதிர்காலத்தை நோக்கிய பயணம்

### தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும்.

விவசாயம் செழிப்படையக் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி நவிலும் தைப்பொங்கல் தினம், இந்துக்களின் சிறப்பு மிக்க கலாசாரம் 06

## தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும்


### வாழ்த்துச் செய்தியில் பிரதமர்



தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இத் தைத்திருநாளானது இன மத பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் 06

## அநீதி தோற்கும்! எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும்

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்



சூரியனுக்கு பொங்கல் படைத்து நன்றிக்கு தலை வணங்கும் பண்பாட்டு நாளாக தைப்பொங்கல் திருநாளை வரவேற்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

சூழ்ந்து வரும் துயர்களை 06

## கெரவலப்பிட்டிய

# லிட்ரோ எரிவாயு முனையத்திற்கு ஜனாதிபதி நேற்று திடீர் விஜயம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

### கப்பலிலிருந்து எரிவாயு கொண்டு வருதல், களஞ்சியப்படுத்தல் வரையிலான செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து அறிவுறுத்தல்களை வழங்கினார்

கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள லிட்ரோ எரிவாயு முனையத்தை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (13) முற்பகல் பார்வையிட்டார்.

முனையத்தில் உள்ள பிரதான செயற்பாட்டுப்பிரிவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கப்பலில் இருந்து எரிவாயு கொண்டுவருதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வரையிலான செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இம்முனையத்தில், தலா 2,000 தொன்களைக் கொண்ட நான்கு களஞ்சியத் தாங்கிகள் உள்ளன. இக்களஞ்சியசாலையில், தினசரி 8,000 தொன் எரிவாயுக் கையிருப்பு பேணப்பட்டு வருகின்றது. லிட்ரோ நிறுவனத்தின் மாதாந்த எரிவாயு விநியோகம் 30,000 தொன்களாகும். இதற்காக, மாதந்தோறும் 07 கப்பல்கள் மூலம் எரிவாயு கொண்டு வரப்படுகின்றது.

பவுசர் ரக வாகனங்கள் மூலம் தொழிற்சாலைகளுக்கு எரிவாயு விநியோகித்தல் மற்றும் கொள்கலன்களுக்கு எரிவாயு நிரப்பல் போன்ற பணிகள், கெரவலப்பிட்டிய முனையத்திலேயே இடம் பெறுகின்றன. 42 விற்பனை முகவர் நிலையங்கள் மற்றும் 12,000 விற்பனை நிலையங்கள் ஊடாக, நாடு முழுவதும் லிட்ரோ எரிவாயு விநியோகிக்கப்படுவதாக அந்நிறுவனம் தெரிவிக்கிறது.

கடந்த சில நாட்களில், தினசரி 70,000 - 80,000வரையிலான எரிவாயுக் கொள்கலன்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்போது நிலவும் எரிவாயுவுக்கான கேள்வியை, எதிர்வரும் நாட்களில் பூர்த்தி 06

## ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம்

### தூரப் பிரதேச சேவைகள் உள்ளிட்ட மேலும் சில ரயில் சேவைகள் ரத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



படம்: வாசித்த பட்டபெந்திகே

ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ள நிலையில் நேற்றைய தினம் சில அலுவலக ரயில்கள் மற்றும் அனைத்து தூரப் பிரதேச ரயில் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ரயில்வே பொதுமுகாமையாளர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் 06

### பரிந்துரை கிடைத்தவுடன்

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம்

### உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன்

(ஷம்ஸ் பாஹிம்)



உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையை திருத்துவது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைப்படி விரைவில் தேர்தல் நடத்தப்படும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் முறை சீர்திருத்தப்பட வேண்டும் என பல தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். அதனால் தான் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் 06

## தைப் பொங்கல் திருநாள் மலையக சமூக மேம்பாட்டுக்கு வழிகாட்டட்டும்

### வாழ்த்துச் செய்தியில் இராஜாங்க அமைச்சர் ஜீவன்



உலகமெங்கும் வாழும் இந்து மக்கள் வருடந்தோறும் தை மாதம் முதலில் கொண்டாடும் மங்களத் திருநாள் தைப்பொங்கலாகும். இந் நன்நாளில் பெருந்தோட்ட மக்களுக்கு இ.தொ.கா அதன் சார்பில் இனிய பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றதென இ.தொ.கா பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான, ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை காலமும் தீர்க்கப்படாத கோரிக்கைகள், 06

## சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவகுமார் காலமானார்



சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரும், முன்னாள் தினகரன் ஊடகவியலாளரும் தினகரன் கட்டுரை பிரதி ஆசிரியர் வாசுகி சிவகுமாரின் கணவருமான சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நேற்று அதிகாலை சுகவீனம் காரணமாக தன் 59ஆவது வயதில் கொழும்பில் காலமானார். யாழ்ப்பாணம் உடுத்துறையை பிறப்பிடமாகக் கொண்ட அவர் அச்சரன், ஆயனன், அனன்யா ஆகிய மூன்று குழந்தைகளின் தந்தையாவார்.

1962ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி தம்பு சிதம்பரம்பிள்ளை அம்பிகாவதி தம்பதியினரின் 06

## நாட்டில் நிலவும் மின் தடையை சீராக்க சீனாவில் இருந்து நிபுணர்!

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின்நிலையத்தில் பழுதடைந்துள்ள ஜெனரேட்டரை ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து நிபுணர் ஒருவர் இலங்கை வரவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஜெனரேட்டரை விரைவில் சீர்செய்து 300 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேர்ப்பதற்கு நம்பிக்கை உள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்டினாண்டோ தெரிவித்தார்.

இதனையடுத்து, மின்சார விநியோகம் தொடர்பிலான தற்போதைய நிலைமை ஓரளவுக்கு தீர்க்கப்படும் என அவர் மேலும் 06

## ஒமிக்ரோனை பழைய தடுப்பூசியால் கட்டுப்படுத்த முடியாது

### WHO எச்சரிக்கை விடுப்பு




புதிய ஒமிக்ரோன் வைரஸ் திரிபுகளை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகளை மீண்டும் செலுத்துவது சிறந்த தீர்வாக அமையாது என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் புதிய Omicron திரிபுகளின் பரவலிலிருந்து சிறந்த பாதுகாப்பை வழங்கும் புதிய தடுப்பூசிகளுக்கும் உலக சுகாதார அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கொரோனா தடுப்பூசிகளின் செயல் திறனை மதிப்பிடுவதற்காக உலக சுகாதார அமைப்பால் 06

## வளமான வாழ்வுக்கு வித்திடும் தைத்திருநாள்

### பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் வாழ்த்து




தைபிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் அந்தவகையில், எல்லோருக்கும்சுபீட்சமான வாழ்வுக்கு வித்திடும் நாளாக இத் தைத்திருநாள் அமைய வேண்டுமென பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி இராமசந்திர குருக்கள் பாபுசர்மா தனது தைத்திருநாள் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"ஓரிரு வருடங்களாக நாட்டில் கொரோனா தொற்று பரவல் காரணமாக தமிழர்களின் சிறப்பு பண்டிகையான தைத்திருநாள் எளிமையான முறையில் கொண்டாட வேண்டிய 06

### காணாமல் போன

## 15 வயது சிறுமி கண்டுபிடிக்கப்பட்டார்



மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் காணாமல் போன 15 வயதுடைய சிறுமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுமியின் விபரங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில், அதனையறிந்த சிறுமி தனது தாயாரை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து குறித்த சிறுமியின் தாய் பொலிஸாருக்கு இது தொடர்பில் அறியப்படுத்தியுள்ளார். 06

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் 1000 தினங்கள் நிறைவு

### தேவத்தை பசிலிகாவில் பேராயர் தலைமையில் இன்று விசேட வழிபாடுகள்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 1000 தினங்கள் நிறைவடையும் நிலையில் அதனையொட்டிய விசேட சமய நிகழ்வுகள் இன்றைய தினம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் தேவத்தை தேசிய பசிலிகா பேராலயத்தில் இன்று நடைபெறவுள்ளன.

பேராயரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் நாட்டின் அனைத்து மறை மாவட்டங்களையும் சேர்ந்த ஆயர்கள் மற்றும் துணை ஆயர்களும் பங்கேற்கவுள்ளனர்.

மேற்படி குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் 06

## எதிர்கொள்ள நேரும் மருந்துத் தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்கு உச்சளவில் நடவடிக்கை

### இராஜங்க அமைச்சர் சன்ன ஜயசுமன

(லோரன்ஸ் செல்வநாயகம்)



மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் பிரசாரம் செய்வது போல் நாட்டில் தற்போது எவ்வித மருந்துத் தட்டுப்பாடும் கிடையாது எனத் தெரிவித்துள்ள அவர், எதிர்காலத்தில் அவ்வாறான தட்டுப்பாடுகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் 06

### விக்கல் வீராச்சாமி



சிங்கள மொழியில இருந்த வாக்குமூல ஆவணத்தில கையெழுத்திட மனோ ஐயா மறுத்தது நல்ல விஷயம்தான் அவர பாராட்டத்தான் வேணும்....

நல்லாட்சியில் மொழி அமைச்சராக இருந்தவர்தானே, ஆனா அப்போ எல்லாம் இப்படி நடந்ததா ஒரு செய்திகூட அடிபடயில்லையே ...!!!

# சர்வதேச செய்திகள்

## வட கொரியா மீது அமெரிக்கா தடை



வட கொரியாவின் ஏவுகணை திட்டத்துடன் தொடர்புபட்ட ஐந்து பேர் மீது அமெரிக்கா கடந்த புதன் கிழமை தடை விதித்துள்ளது. ஹைப்பர்சோனிக் ஏவுகணை சோதனை மேற்கொண்டதாக வட கொரியா அறிவித்து அடுத்த தினமே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாரிய அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் பலிஸ்டிக் ஏவுகணைகள் தொடர்பான திட்டங்களுக்கு வட கொரியாவுக்கு பொருட்களை வழங்குவதற்கு பொறுப்பானவர்களுக்கு தடை விதிக்கப்படுவதாக அமெரிக்க கருவூலத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## ஐ.நா நிலுவையைச் செலுத்தாத ஈரானின் வாக்குரிமை நிறுத்தம்



உறுப்பு நாடுகளுக்கான செலுத்தப்படாத நிலுவை காரணமாக ஈரான், வெனிசுவேலா மற்றும் சூடான் உட்பட எட்டு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் வாக்குரிமையை இழந்துள்ளன.

மொத்தம் 11 நாடுகள் கட்டணம் செலுத்துவதில் தவறி இருப்பதாக செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், கடந்த செவ்வாய்க்கிழமை பொதுச் சபைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா சாசனத்தின்படி, உறுப்பு நாடு ஒன்றின் இரண்டு ஆண்டுகள் செலுத்த வேண்டிய தொகைக்கு இணையாக அல்லது அதற்கு அதிகமான நிலுவை இருக்கும்போது அந்த நாட்டின் வாக்குரிமை இடைநிறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள கடன் “உறுப்பினரின் அப்பால்பட்ட நிபந்தனைகள் காரணமானது” எனக் கருதப்பட்டால், அந்த நாட்டுக்கு தொடர்ந்து வக்களிக்க சபை அனுமதிக்கும்.

இதனடிப்படையில் கொமொரோ தீவுகள், சாவோ டொம் மற்றும் பிரின்ஸ், சோமாலியா நாடுகளுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. எனினும் ஈரான், சூடான், வெனிசுவேலா, அன்டிகுவா மற்றும் பார்படோஸ், கொங்கோ, கினியா, பப்புவா நியுகினி மற்றும் வனுவாட்டு ஆகிய எட்டு நாடுகளின் வாக்குரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் தமது வாக்குரிமையை மீட்டுக்கொள்வதற்கு குறைந்தபட்ச தொகையை செலுத்தும்படி குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார். இதில் ஈரான் 18 மில்லியன் டொலர் செலுத்த வேண்டிய அதேநேரம் சூடான் சுமார் 300,000 டொலர்களும் வெனிசுவேலா சுமார் 40 மில்லியன் டொலர்களும் செலுத்த வேண்டி உள்ளது.

நிலுவைத் தொகையை செலுத்தாததால் கடந்த ஆண்டிலும் ஈரான் வாக்குரிமையை இழந்தது. எனினும் அமெரிக்க பொருளாதாரத் தடையால் குறைந்தபட்சத் தொகையைக் கூட செலுத்த முடியாதிருப்பதாக ஈரான் கூறியது. எனினும் பல மாத பேச்சுவார்த்தைக்கு பின்னர் அமெரிக்க திறைசேரி தடையில் விலக்கு அளித்ததை அடுத்து கடந்த ஜூனில் ஈரானுக்கு மீண்டும் வாக்குரிமை கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோன கட்டுப்பாட்டை மீறிய இங்கிலாந்து பிரதமர் மன்னிப்பு



கொரோனா காட்டுப்பாடுகளை மீறி, ஊரடங்கு காலத்தில் மது விருந்தில் கலந்து கொண்டதற்காக, இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார். கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் அந்நாட்டில் முழு ஊரடங்கு அமுலில் இருந்த போது, லண்டன் டவுனிங் வீதியில் உள்ள தனது அலுவலக தோட்டத்தில் நடைபெற்ற மது விருந்தில் பொரிஸ் ஜோன்சன் கலந்துக்கொண்டார்.

ஊரடங்கு விதிகளை மீறி பிரதமரே இவ்வாறு செய்ததற்கு கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்கள், அவர் பதவி விலக வேண்டுமென்றும் வலியுறுத்தினர். இந்த நிலையில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில் மன்னிப்புக் கோரிய ஜோன்சன், விதிகளை உருவாக்குபவர்களே அதனை சரியாக பின்பற்றாதது குறித்து மக்கள் தன் மீது கொண்ட கோபத்தை புரிந்துக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானின் சிந்தில் பொருளாதார நெருக்கடி



பாகிஸ்தான் சிந்த் மாகாண மக்கள் வறுமை நிலையில் கீழ் மட்டத்தில் இருக்கும் சூழலில் பெரும் சவால்களை எதிர்கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

சிந்த் நாட்டின் வறுமை கொண்ட மாகாணமாக இருப்பதோடு அங்கு மாற்று வேலை வாய்ப்புகளும் இல்லை. ஒருபுறம் நீண்ட மின்சாரத் தடை வர்த்தகச் செயற்பாடுகளை பாதித்திருப்பதோடு அங்கு 80 வீத வேலை வாய்ப்புகளை தரும் விவசாயமும் தற்போது நெருக்கடி நிலைக்கு முகம்கொடுத்துள்ளது.

## தடுப்பூசி பெறாதோருக்கு ஒமிக்ரோன் திரிபு ஆபத்து



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு டெல்டாவை விட கடுமையாக இல்லையென்றாலும், தடுப்பூசி போட்டுக்கொள்ளாதோருக்கு ஆபத்தானது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

செய்தியாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கெப்ரியேஸஸ் இதைத் தெரிவித்தார்.

உலக நாடுகள், மக்கள்தொகையில் 40 வீதத்தினர் தடுப்பூசி போட்டுக்கொள்ள இலக்கு கொண்டுள்ளன. இருப்பினும், 90க்கும் மேற்பட்ட நாடுகள், அந்த இலக்கை எட்டவில்லை என்றார் அவர்.

ஆபிரிக்காவில் 85 வீதத்தினருக்கும் அதிகமானோர் இன்னும் ஒருமுறை கூட தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை. வாராந்த வைரஸ் தொற்று நிலவர அறிக்கையை நிறுவனம் வெளியிட்டது.

கடந்த வாரம், அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்புநோக்க, நோய் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 55 வீதம் அதிகரித்துள்ளது. அதாவது முன்னெப்போதும் இல்லாத அளவில் மேலும் 15 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

உலக அளவில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரில் பெரும்பாலோர் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் என்று கேப்ரியேஸஸ் கூறினார். நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் இன்னொரு வகை கொரோனா வைரஸ் திரிபு உருவாகும் அபாயம் அதிகம் என்று அவர் எச்சரித்தார். அவ்வகை இன்னும் எளிதில் பரவக்கூடும், அல்லது இன்னும் கொடியதாக இருக்கக்கூடும் என்று கேப்ரியேஸஸ் குறிப்பிட்டார்.

## கொவிட்–19: சீனா மீது கடும் குற்றச்சாட்டுகள்



கொவிட்–19 தொற்றின் உண்மையான மூலத்தை அடையத் தவறியதா அல்லது சீனா அதனை வெற்றிகரமாக மூடிமறைத்ததா என்று திபெத் மற்றும் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினருக்கான உலகளாவிய கூட்டணியின் நிறுவனர் ட்செரிங் பசங் சர்வதேச சமூகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

சீனாவின் கடுமையான அரசான சீன கம்யூனிஸ்ட் கட்சி கொவிட்–19 இன் உண்மையான மூலத்தை வெற்றிகரமாக மூடிமறைத்துள்ளது என்றும் அவர் ட்விட்டரில் குற்றம் சாட்டியுள்ளார்.

# லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸின் நாட்காட்டி, தினப்பதிவேடு வெளியீட்டு வைபவம்
























லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸின் நாட்காட்டி மற்றும் தினப்பதிவேடு வெளியீடும் வைபவம் மஜ்லிஸ் தலைவர் எம்.எஸ் பாஹிமின் தலைமையில் லேக்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இவற்றின் முதல் பிரதிகளை தலைவர் பாஹிம் மூத்த உறுப்பினர் எம். எஸ். ஹில்மிக்கு வழங்கினார். அத்துடன் மஜ்லிஸ் செயலாளர் எம்.என்.எம். ரிஸ்வான் விளம்பரப்பகுதி மொழிபெயர்ப்பாளர் எம். ஆர். எம். மஹ்ருப்புக்கும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார், தினகரன் இணையதள ஆசிரியர் ரிஸ்வான் சேகு மொஹிதீனுக்கும் வழங்கி வைத்ததோடு பொருளாளர் எம். ஐ. நிஸாம்டீன் உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்களும் அங்கத்தவர்களுக்கு நாட்காட்டி மற்றும் தினப்பதிவேடுகளை வழங்கி வைப்பதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படங்கள் ருவன் டி சில்வா

# விவசாயப் பெரு மக்களின் வாழ்வு செழிக்கட்டும்

## வாழ்த்துச் செய்தியில் அங்கஜன்



கடினமாக உழைத்து கௌரவமாக வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் வளம் வந்து சேர வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில்;

தைப்பொங்கல் உழவர் திருநாளாகும்.விவசாயமே தமிழர்களின் ஜீவனோபாயத் தொழில்.விவசாயிகள் தமது அறுவடை சிறக்க உதவிய பூமித் தாய்க்கும் சூரிய பகவானுக்கும் நன்றி சொல்லும் நாளாக தைப் பொங்கல் பண்டிகையை தொன்று தொட்டு கொண்டாடி வருகின்றனர்.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் புதிய ஆண்டின் தொடக்க நாளாக இத் தைத்திருநாள் அமைய வேண்டும்.தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை நிஜமாக வேண்டும்.

எமது விவசாயிகள் புதிய முயற்சியில் ஈடுபட்டு பெறுபேறுக்காக காத்திருக்கின்றனர்.மண்ணுக்கும் மனிதனுக்கும் கேடு விளைவிக்கும் இரசாயனத்தை

06

# வீழ்ச்சியடைந்த சுற்றுலாத்துறை விரைவில் மேம்படுத்தப்படும்

## 2030ஆம் ஆண்டில்10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவர்

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலாத்துறையைத் திட்டமிட்ட வகையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டிஆரச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (13) முற்பகல் இடம்பெற்ற "சுற்றுலாவுக்கு அனுமதி" என்ற தொனிப்பொருளிலான ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே

06



# சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே காலமானார்

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே நேற்று முன்தினம் (12) காலை காலமானார். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 49 வயதான அவர், திடீர் சுகவீனமடைந்த காரணமாக கடந்த 05 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

புகழ்பெற்ற சட்டத்தரணியாக திகழ்ந்த துசித் முதலிகே, பணமோசடி மற்றும் சிக்கலான நிதிக் குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதில் நிபுணத்துவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வார சபை அமர்வு;

# சபாநாயகர் தலைமையில் நேற்று விசேட கூட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் ஜனவரி 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

இதற்கமைய

06



# கல்வியியற் கல்லூரிகளை நாளை முதல் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்குப் பணிப்புரை

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்வியியற் கல்லூரிகளை நாளை 15ம் திகதி முதல் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

06

# ஒமிக்ரோன் அலையின் விளிம்பில் இலங்கை

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை!




ஒமிக்ரோன் அலையின் விளிம்பில் இலங்கை இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதன் மூலம் இதனை கட்டுப்படுத்தப்படலாம் என்று தொடர்ந்து நினைவூட்டப்பட்ட போதிலும் பொது மக்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதில் தயக்கம் காட்டுவதாக வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார். இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், பூஸ்டர் டோஸ் பெறும்

06

## புதிய பாதுகாப்பு சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில்;

# எதிர்கால இராணுவ தலைவர்கள் தமது தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் -பாதுகாப்புச் செயலாளர்

(ஸாதிக் ஷிஹான்)

எமது தேசம் எதிர்கொள்ளும் புதிய பாதுகாப்பு சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் எதிர்கால இராணுவத் தலைவர்கள் தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன நேற்று ( 13) தெரிவித்தார். பாதுகாப்பு மற்றும் கௌரவத்தினை தன்னகத்தே கொண்டுள்ள எமது தேசம், அதனது இராணுவத்திடமிருந்தும் முற்றுமுழுதாக நேர்மையையும் சுயகௌரவத்தையும் எதிர்பார்க்கிறது என தெரிவித்த பாதுகாப்பு செயலாளர், "சுயகௌரவம் கொண்ட தலைவர்கள் போலித்தனம் அல்லது பாசாங்குத்தனத்தால் பாதிக்கப்பட மாட்டர்கள்" எனக் குறிப்பிட்டார். கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தின் போது முப்படைகளின் இடைநிலை அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த கருத்தரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் இராணுவத்தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா வரவேற்புரை நிகழ்த்தினார்.



06



கொழும்பு பல்கலைக்கழக வேந்தருக்கான வரவேற்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு கொழும்பு தாமரை தடாகத்தில் நேற்று (13) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமரின் சர்வமத இணைப்பாளர்களான ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கலாநிதி ஹசன் மௌலானா, அருட்தந்தை மற்றும் பௌத்த மதகுரு ஹெலகம தம்பரன்சி தேரர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தபோது...

# ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க தலைவர் உள்ளிட்ட குழுவினர் ரயில் சாரதிகள் மீது தாக்குதல்

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத் தலைவர் உள்ளிட்ட சிலர் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி முதல் 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ரயில் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் வைத்து தாக்கியதாக ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடம்கொட தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

12 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஆரம்பமாகும் ரயில் வேலைநிறுத்தத்திற்கு முகங்கொடுப்பதற்காக புகையிரத பொது முகாமையாளரின் பணிப்புரைக்கமைய செயற்படுகையில் இந்த தாக்குதல் இடம்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் புகையிரதத்தை இயக்குவதற்கு தயாராகும் போதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாவிடின் தமது சங்கம் உட்பட பல தொழிற் சங்கங்கள் இணைந்து கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# பரசூட்டில் பயணித்த ரஷ்ய பிரஜை விழுந்து காயம்

தெல்தோட்டை தினகரன் நிருபர்

பரசூட்டில் பயணித்த வெளிநாட்டவர் ஒருவர் தவறி விழுந்து காயமடைந்துள்ள சம்பவமொன்று கலஹா – லுல்கந்துர பிரதேசத்தில் பதிவாகி உள்ளது. சுமார் 30 அடி உயரமான மரமொன்றில் இருந்து வீழ்ந்த வேளையில் பரசூட் ருலிமங்கொட பகுதியில் தரையிறக்கப்பட்ட போது சுமார் 30 அடி உயரமான மரத்தில் சிக்கியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த வெளிநாட்டு பிரஜை கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு விபத்துக்குள்ளானவர் 35 வயதான ரஷ்ய பிரஜை என தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





பின்னவல யானைகள் சரணாலயத்தில் பிறந்த யானை குட்டிகளுக்கு பெயர்வைக்கும் நிகழ்வு ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தின் தலைமையில் பின்னவலவில் நடைபெற்ற போது.

# சட்டத்தரணிகள் சங்க தலைவராக மீண்டும் சாலிய பீரிஸ் தெரிவு



ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2022 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அவர் மீள தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், ஏற்கனவே கடந்த 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி இலங்கை சட்டத்தரனிகள் சங்கத்தின் 26 ஆவது தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

06




தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் தை மாதம் 01ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 10

## குறள் தரும் சிந்தனை



ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து

கொடுமைகளைக் கண்டும்கூட உறுதி படைத்தவர்கள் அமைதியாக இருப்பது அச்சத்தினால் அல்ல; அது ஆட்டுக்கடா ஒன்று தனது பகையைத் தாக்குவதற்குத் தன் கால்களைப் பின்னுக்கு வாங்குவதைப் போன்றதாகும்.

# சுபிட்சமான எதிர்காலத்துக்கு தைத்திருநாள் வழிகோலட்டும்!

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை இன்று கொண்டாடிக் கொண்டிருக்கும் மக்கள் அனைவருக்கும் தினகரன் தனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. புதிய ஆண்டில் நாட்டு மக்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென்றும், இன்றைய கொவிட் நெருக்கடியில் இருந்து உலகம் விரைவாக மீண்டெழ வேண்டுமென்றும் இன்றைய தைத்திருநாளில் நாம் இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

தைப்பொங்கல் பண்டிகையை தமிழர் திருநாள் என்றும் உழவர் பண்டிகை என்றும் அழைக்கின்றனர். உலகில் உயிரினங்கள் நிலைத்திருக்கவும், உலக மக்களுக்கு உணவளிக்கும் விவசாயம் செழித்தோங்கவும் உதவி புரிகின்ற பூமியின் பிரதான சக்திமுதலான சூரியனுக்கு நன்றி செலுத்துவதே தைப்பொங்கல் பண்டிகையின் தத்துவம் ஆகும். எனவேதான் இன்றைய பண்டிகையை சூரியப் பொங்கல் என்றும் அக்கால நூல்கள் குறிப்பிடுகின்றன.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்கள் மாத்திரமன்றி, இந்துக்களில் அநேகமானவர்களும் தைப்பொங்கல் பண்டிகையை வருடத்தின் பிரதான பண்டிகையாகக் கொண்டாடுவது வழமை. உலகில் வாழ்கின்ற தமிழர்கள் அனைவரினதும் பண்டைய பூர்வீகம் தமிழ்நாடு ஆகும். உலகத் தமிழர்கள் அனைவருமே இந்தியாவில் இருந்துதான் பண்டிகைகள் மற்றும் இந்துசமய கலைகலாசாரங்கள், வாழ்வியல் அம்சங்களைப் பெற்றுக் கொண்டனர். எனவேதான் இந்திய பண்பாட்டைத் தழுவியதாக உலகெங்கும் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

இந்து மதமானது எக்காலமும் கொல்லாமை, நன்றியுணர்வு, ஒழுக்கவிழுமியம், காருண்யம் போன்ற நற்பண்புகளையே போதிக்கின்றது. பிராணிகள் மீதும் அன்பைப் பேணுமாறு இந்து மதம் போதிக்கின்றது. எமது முன்னோர் அவ்வாறுதான் தங்களது வாழ்வினையும் அமைத்திருந்தனர். அதனால்தான் முன்னோர்களின் வாழ்வு மகிழ்வாகவும், நிம்மதியாகவும் அமைந்திருந்தது. ஆனால் காலமாற்றத்தில் அன்றைய வாழ்வியல் கோலங்கள் சிதைந்து போய் விட்டன. எனினும் இந்துக்களின் பண்டிகைகள் மாற்றங்களின்றி காலாகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் தைப்பொங்கல் பண்டிகை ஆகும்.

எமது முன்னோர்களின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். அக்காலத்தில் உணவுக்குப் பற்றாக்குறை நிலவியதில்லை. இயற்கை விவசாயத்தை அக்கால மக்கள் கடைப்பிடித்து வந்ததால் உணவில் நச்சுத்தன்மையும் இருந்ததில்லை. விவசாயத் தொழிலுக்கு பருவம் தவறாத மழையும், பொருத்தமான சீதோஷண நிலைமையும் அவசியம். அவ்வாறான பொருத்தமான காலநிலையை உலகுக்குத் தருவது கதிரவன் ஆகும்.

விவசாயத்தில் மக்களுக்கு உதவி புரியும் மிருகமாக மாடுகள் காணப்பட்டன. உழவு, பசளை, சூடு மிதித்தல், நீரிறைத்தல், வண்டி இழுத்தல் போன்ற அத்தனை விவசாய வேலைகளுக்கும் மாடுகளே உதவி செய்தன. எனவேதான் மாடு என்றால் 'செல்வம்' என்ற அர்த்தமும் கொள்ளப்பட்டது. மாடுகள் இன்றேல் நெற்செய்கை இல்லை என்ற நிலைமைதான் அக்காலத்தில் நிலவியது.

விவசாயத்துக்குக்கு உதவி புரிகின்ற சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டுமென்ற அன்றைய எமது மூதாதையர்களின் வெளிப்பாடுதான் தைப்பொங்கல் பண்டிகை ஆகும். அதே போன்று விவசாயிகளுக்கு தோள் கொடுக்கின்ற மாடுகளுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்ற உணர்வையும் எமது மூதாதையர்கள் கொண்டிருந்தனர். அதனால்தான் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் 'மாட்டுப் பொங்கல்' பண்டிகை நாளை கொண்டாடப்படுகின்றது.

உயிருள்ள ஜீவன்களுக்கு மாத்திரமன்றி, உயிரற்ற கதிரவனுக்கும் நன்றிக்கடன் செலுத்த வேண்டுமென்ற மேன்மையான குணத்தை அன்றைய மக்கள் கொண்டிருந்தனர். அதிகாலையில் கண் விழித்தெழுந்து நீராடி, இறைவணக்கம் செய்து, கதிரவன் உதயமாகும் வேளையில் பொங்கலிட்டு நன்றிக்கடன் செலுத்தும் வழக்கமானது இந்துக்களால் மாத்திரமன்றி, பெருமளவான தமிழர்களால் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய தினம் சிறப்பானது. 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கிணங்க அனைத்து மக்களினதும் சுபிட்சமான எதிர்காலத்துக்கு இன்றைய தைப்பொங்கல் பண்டிகை வழிகோலட்டும் என்று தினகரன் தனது மனம் கனிவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

editor.tkn@lakehouse.lk



# நன்றி மறவாமையின் தத்துவத்தை உலகுக்கு விளக்கும் தைப்பொங்கல்




இம்மாதம் (ஜனவரி) முதலாம் திகதியன்று மலர்ந்த 2022ஆம் வருடம் உலக மக்கள் அனைவராலும் சிறப்பாக வரவேற்கப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் தைத்திங்கள் உதயமாகியுள்ளது. பன்னிரு தமிழ் மாதங்களுள் பத்தாவதாகிய தைமாதம் பல்வேறு வகையிலான சிறப்புகளையும், தனித்துவத்தையும் கொண்டது. சூரிய பகவானின் இராசி மண்டல சஞ்சாரத்திற்கு அமையவே ஒவ்வொரு தமிழ் மாதமும் உதயமாகிறது. அந்த வகையில் மகர இராசியில் சூரியன் பிரவேசம் செய்யும்போது தைமாதம் பிறக்கிறது.

தைமாத பிறப்பின் சிறப்புக்கு மற்றுமொரு காரணமும் உண்டு. பூவுல மக்களுக்குரிய ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒருநாளாக அமைந்துள்ளது. தைமாதம் முதல் ஆனி மாதம் வரையிலான ஆறுமாத காலம் பகற்பொழுதாகும். இது உத்தராயணம் எனப்படுகிறது. ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான ஆறுமாத காலம் இரவுப் பொழுதாகும். இது தட்சணாயணம் எனப்படுகிறது. தேவர்களுக்குரிய பகற்பொழுதின் ஆரம்பமே தைமாதப் பிறப்பாகும். எனவேதான் இந்நாள் பூவுல மக்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.

தைத்திங்கள் பிறப்புடன் இணைந்ததாகவே தைப்பொங்கல் திருநாளும் அமைந்திருப்பது மேலும் சிறப்புக்குரியது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனின் இயக்கம் செம்மையாக அமையப் பெற்றால்தான் உலகில் மனிதகுலம் மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளும், தாவரங்களும் செயற்படக் கூடியதாக இருக்கும். அதாவது உலகம் முழுவதும் உயிர்ப்புடனும், சக்தியுடனும் இயங்குவதற்கு அடிப்படைக் காரணமாகவும், ஆதாரமாகவும் திகழ்வது சூரிய சக்தியாகும்.

உழவுத் தொழிலுக்கு துணையாக அமைந்துள்ள நிலம், நீர், ஆகாயம் எனும் இயற்கைச் சக்திகளின் செயற்பாடுகளுக்கு பேருதவியாக இருக்கும் மிகப் பெரும் சக்தியாகவும், கண்கண்ட தெய்வமாகவும் விளங்கும் சூரிய பகவானை போற்றித் துதிக்கும் வகையில் வருடந்தோறும் நடத்தும் ஒரு வழிபாட்டு நிகழ்வாகவே தைப்பொங்கல் அமைந்துள்ளது.

இன்னொரு வகையில் சொல்வதானால் நன்றி மறவாமையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் பெருவிழாவாகவும் தைப்பொங்கல் சிறப்புப் பெறுகிறது. பயனை அனுபவிக்கும் போது, அந்தப் பயனைப் பெறுவதற்கு உதவிய எவரையும் எதனையும் மறந்து விடலாகாது என்ற உயர்ந்த பண்பையும் தைப்பொங்கல் எடுத்துச் சொல்கிறது.

உழவர் பெருமக்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்கு உதவும் விவசாய செயற்பாடுகளின் போது நிலத்தில் விதைத்து அறுவடை செய்த நெல்லிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தரிசியைப் பயன்படுத்தி சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து தைமாதப் பிறப்பைக் கொண்டாடுவதே தைப்பொங்கல் வரலாற்றின் ஆரம்பமாக அமைந்திருந்தது. இதன் காரணமாகவே உழவர் திருநாள் என்ற பெயரிலும் தைப்பொங்கல் அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இது இந்து மக்களது பண்டிகைகளுள் ஒன்றாக மாறியதால், உழவர் பெருமக்கள் மட்டுமல்ல, அனைத்து இந்து மக்களும் தைமாதம் பிறக்கும் நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது வழக்கமாகி விட்டது.

இந்து மக்கள் அனைவரும் தங்கள் வீட்டின் முற்றத்திலேயே பொங்கல் கருமத்தை செய்வது வழக்கம். பொங்கி முடித்த பின்னர், அதே இடத்திலேயே தலைவாழை இலையில் பொங்கல் சாதத்தை படைத்து வழிபாடு செய்யும் நிகழ்வானது தெய்வ வழிபாட்டின் உன்னத செயற்பாடாகவே அமைந்துள்ளது. இந்த வகையில் பொங்கல் சாதமானது சூரிய பகவானுக்குரிய நைவேத்தியப் பொருளாக சிறப்புப் பெறுவதுடன் அவரது அருளால் பெற்றதை அவருக்கே நன்றியுடன் நிவேதனம் செய்யப்படுவதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

பொதுவாக, மக்கள் அனைவரும் புதிய நம்பிக்கைகளையும், புதிய எதிர்பார்ப்புகளையும் வைத்து புதுவருடப் பிறப்பை வரவேற்பதுபோலவே, இந்து மக்களும் தைமாதப் பிறப்புக்காக ஆவலுடன் காத்திருப்பது வழக்கமாகும். 'தை பிறந்தால் வழி பிறக்கும், தரணி எங்கும் வளம் செழிக்கும்' என்று பலநூறு வருடங்களுக்கு முன்பதாக நம் முன்னோர் சொல்லி வைத்திருப்பதை இந்து மக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகிறார்கள். இந்த வகையில் தங்கள் குடும்பத்தில் இன்பம் பொங்க வேண்டும், செல்வம் செழிப்புற வேண்டும், நோயற்ற வாழ்க்கை அமைய வேண்டும், வாழ்வில் நிம்மதி வேண்டும் என்றெல்லாம் பலவித நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் வைத்து தைத்திங்களை வரவேற்று சூரிய வழிபாடு செய்வது என்பது ஒரு பாரம்பரிய வழக்கமாகவே நடந்தேறி வருகிறது. திருமணம், புதுமனை பிரவேசம், புதிய கல்வி நிறுவனங்கள், புது விற்பனை நிலையங்கள், பயிர்ச்செய்கை உற்பத்தி போன்ற பல்வேறுபட்ட சுபகருமங்களை தைமாதத்திலேயே மேற்கொள்வார்கள். தை மாதத்தில் ஆரம்பிக்கும் கருமங்கள் பெரும் வெற்றியையும் சிறப்பையும் கொடுக்கும் என்பதில் இந்து மக்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் பலவிதமான நோய்களின் தொற்றுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலை முற்றாகவே நீங்கி, எதிர்காலத்தில் அனைவரும் எதுவித நோய் நொடியுமின்றி, மகிழ்ச்சிகரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு உதயமாகும் தைத்திருநாளிலே இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!



அ.கனகசூரியர்...

# இலக்கிய அன்பர்களின் உள்ளம் கவர்ந்தவர் ஊடகவியலாளர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்

"வாழ்க்கையின் மீதான விமர்சனத்திலிருந்தே ஒரு படைப்பு உருவாகிறது. சுயஅனுபவத்தின் மெய்த்தன்மை படைப்பில் தென்படுமானால் அந்தப் படைப்பு வாசகரின் நம்பிக்கையை பெற்று விடுகிறது. நம்பிக்கையைப் பெற்று நம்மை பாதிக்கிறது. இந்தப் பாதிப்பே இலக்கியத்துக்கும் சமூகத்துக்குமான உறவின் அடிப்படையாக அமைகிறது. நல்ல எழுத்து – அனுபவம் சார்ந்து வாழ்க்கையின் சிக்கலைப் பற்றி விவாதிக்கும். வாழ்க்கை இப்படி, இப்படி இருக்கிறது என்று கவனப்படுத்துவதன் மூலம், நமக்கும் வாழ்க்கைக்குமான உறவை ஒழுங்கு செய்ய முயலும், வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான ஒரு சூழலையும் தயாரிப்பையும் உருவாக்கும். மகிழ்ச்சியான தருணங்களும், துயர நிகழ்ச்சிகளும் எல்லோருக்கும் ஒரே மாதிரியானவை அல்ல என்பது உண்மைதான்.

ஒரே நபருக்குக்கூட இவை எப்போதும் ஒரே மாதிரியானவை அல்ல. மற்றவர் வாழ்க்கை அனுபவங்களும் வேறு வேறானவைதான். ஆனால், எல்லா மனிதர்களுடைய சுகதுக்கங்களுக்கும் பொதுவான ஒரு இழை இருக்கிறது. அந்த இழையை உணரச் செய்யும் எழுத்துக்கள் வாசகர் மனதில் பதிந்து வெற்றி பெற்று விடுகின்றன."

இவ்வாறு அர்த்தம் பொதிந்த எழுத்தை எழுதிய எமது அருமை இலக்கிய நண்பர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் அவர்கள் 13. 01. 2012 (நேற்றைய தினம்) கொழும்பில் மறைந்து விட்டார் என்ற துயரச் செய்தி என்னை வந்தடைந்த போது, அதிர்ந்து விட்டேன்.

சிதம்பரப்பிள்ளை சிவகுமார் அவர்களை இறுதியாக கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இலக்கிய நண்பர் நடேசன் ஏற்பாடு செய்திருந்த 'நம்மவர் பேசுகிறார்' மெய்நிகர் அரங்கில்தான் சந்தித்து உரையாடியிருந்தேன்.

குறிப்பிட்ட இந்த அரங்கு எம் அனைவரதும் இனிய இலக்கிய நண்பர் ' மக்கத்துச்சால்வை எஸ். எல். எம். ஹனீபாவுடைய படைப்புலகம் மற்றும் அரசியல் , சமூகப்பணி சார்ந்து நிகழ்ந்த உரையாடல் சந்திப்பு.

ஏற்கனவே ஹனீபாவின் படைப்புலகம் பற்றி மாத்திரமன்றி ஏனைய எழுத்தாளர்களின் படைப்பாளுமைகள் குறித்தும் இலங்கை – தமிழக ஊடகங்களில் எழுதி வந்திருப்பவர்தான் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இரண்டு நாட்கள் நடந்த 49 ஆவது இலக்கியச் சந்திப்பில் அவரை சந்தித்து நீண்டநேரம் பேசியிருக்கின்றேன்.

அச்சந்திப்பிற்கு தமிழ்நாட்டிலிருந்தும் ஐரோப்பா, கனடாவிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல இலக்கிய ஆளுமைகளும் , தமிழக திரைப்பட கலைஞர்களும் வருகை தந்திருந்தனர். இரண்டு நாட்களும் நடந்த கருத்தரங்குகளில் சிவகுமார், தனக்கே உரித்தான பாணியில் தனது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக முன்வைத்தார்.

இந்த அஞ்சலிக் குறிப்பின் தொடக்கத்தில் சிவகுமாரின் பார்வையில் மனித வாழ்வு மீதான சிந்தனை சொல்லப்பட்டது, இற்றைக்கு 19 வருடங்களுக்கு முன்னர்தான்.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த எனது 'பறவைகள்' நாவல் வெளியீட்டு விழாவில் அவர் உரையாற்றிய நாவல் மீதான வாசிப்பு அனுபவத்தின் தொடக்கம்தான் அந்த வரிகள்.

அன்றைய அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான சந்திரசேகரன், மற்றும் பேராசிரியர் சோ. சந்திரசேகரன், மல்லிகை ஜீவா முதலான பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சிவகுமார் மாத்திரமே நாவலைப் பற்றிய பிரதம பேச்சாளர்.

அவுஸ்திரேலியாவிலிருந்த என்னால், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதிருந்த சூழலிலும், என்னைப் பற்றிய எந்தவொரு அறிமுகமும் இன்றி, எனது நாவலைப் பற்றி மாத்திரம் படித்துத் தெரிந்துகொண்டு உரையாற்றிய அவரை, அதன் பின்னர்தான் சில வருடங்கள் கழித்து ஏரிக்கரை ( Lake House ) பத்திரிகை காரியாலயத்தில் சந்தித்தேன்.



## ஆற்றல் மிகுந்த படைப்பாளி ஒருவரின் மறைவு தரும் துயரம்



நீண்ட காலமாக ஊடகத்துறையுடன் நெருக்கமாகவிருந்த அவர், தமிழ்நாட்டின் தரமான இலக்கிய ஏடு கணையாழியிலும் முன்னர் பணியாற்றியிருக்கிறார் என்பது நான் பிந்தியறிந்த செய்தி.

இலங்கை வானொலியிலும், சக்தி வானொலி – தொலைக்காட்சி முதலானவற்றிலும் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருக்கும் சிவகுமார், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'தினமுரசு' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். ஈழத்து எழுத்தாளர்களினதும் புகலிட படைப்பாளிகளினதும் ஆக்கங்களுக்கும் தினமுரசுவில் களம் வழங்கினார்.

பல வருடங்களுக்கு முன்னர் இருதய சிகிச்சைக்குட்பட்டிருந்த அவர், தன்னைப் பற்றி கவனிக்கத் தவறிவிட்டாரோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தமது பெருவாரியான நேரத்தை எழுத்து, சமூகப் பணி என ஒதுக்கிவிடும் பலருக்கு நண்பர் சிதம்பரப்பிள்ளை சிவக்குமார் அவர்களும் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும் என்றும் இந்தக் குறிப்புகளில் சொல்வதில் தவறில்லை எனக் கருதுகின்றேன்.


சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்!

நமக்கும் வாழ்க்கைக்குமான உறவை எழுத்தின் ஊடாகவும், பணிகள் சார்ந்தும் ஒழுங்கு செய்ய முயலும் எழுத்தாளர்கள், சமூகப்பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் தமது சொந்த வாழ்விலும் அதனை கடைப்பிடித்தல் வேண்டும். இம்மாதம் 26 ஆம் திகதி பிறக்கும் போது நண்பர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாருக்கு 60 வயது பிறக்கிறது. மணிவிழா நாயகனாக வலம் வந்திருக்க வேண்டியவர், அற்பாயுளில் எம்மை விட்டு விடை பெற்று விட்டார்.

இலங்கை – இந்திய – புகலிட தேசத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்திருக்கும் சிதம்பரப்பிள்ளை சிவக்குமார் எம்மிடம் விட்டுச் சென்றிருப்பது அவர் பற்றிய பசுமையான நினைவுகள்தான்.

அவரின் மறைவால் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரின் அன்புத் துணைவியார், மற்றும் பிள்ளைகள் நண்பர்களுக்கும் இலக்கியவாதிகள் அனைவரும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அற்பாயுளுக்கும் மேதாவிலாசத்திற்கும் நெருங்கிய உறவு இருக்கிறதோ? என்றுதான் சிதம்பரப்பிள்ளை சிவக்குமாரின் மறைவும் எம்மை சிந்திக்க வைக்கிறது.



லெ.முருகபூபதி...
அவுஸ்திரேலியா

# பொறுமையின் மகத்துவம்

இஸ்லாம் அதிகம் முக்கியத்துவம் அளித்துள்ள விடயங்களில் ஒன்றாக பொறுமையைக் கடைபித்தல் விளங்குகிறது. இதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகளும் பிரதிபலன்களும் அளப்பரியவையாகும். அதேநேரம் பொறுமைக்கு மாற்றமான போக்கு தீமைகளையும் கெடுதல்களையும் தேடித்தரக்கூடியவை. அல்லாஹ்வும் அவனது தூதரும் பொறுமையையே பெரிதும் ஊக்குவித்துள்ளனர்.

அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் பொறுமையின் சிறப்பை 'உண்மையான வீரன் யார்? என்று வினவியபடி இவ்வாறு எடுத்துக்கூறியுள்ளார்கள். அதாவது, ஒரு தடவை அன்னார் 'அடித்து வீழ்த்துபவன் வீரனல்லன்' என்றார்கள். 'அப்படியானால் வீரன் என்பவன் யார் அல்லாஹ்வின் தூதரே?' என மக்கள் வினவ, அதற்கு நபிகளார் 'கோபத்தின்போது தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்பவனே (வீரன் ஆவான்)' என்றார்கள்.

**(ஆதாரம் : முஸ்லிம்)**

இந்நபிமொழி பொறுமையின் சிறப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. பொதுவாக கோபம் மனிதனில் காணப்படக்கூடிய ஒரு துர்க்குணமாகும். அதனை நெறிப்படுத்தி நடப்பது இன்றியமையாததாகும். அதுவே அதிக சிறப்பையும் பிரதிபலன்களையும் பெற்றுத்தரும். அதேநேரம் பழிக்குப் பழி வாங்குவதை விடவும் பொறுமையைக் கடைப்பிடிப்பதே சிறந்தது. இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றான்.

'(சட்டத்தின் மூலமாக) தண்டிப்பதாக இருந்தால் நீங்கள் துன்புறுத்தப்பட்ட அளவுக்குத் தண்டியுங்கள். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்தால் பொறுமையாளர்களுக்கு அதுவே சிறந்தது. பொறுமையைக் கடைப்பிடிப்பீராக, நீர் பொறுமையாக இருப்பது அல்லாஹ்விடமே உள்ளது. அவர்களுக்காகக் கவலைப்படாதீர். அவர்கள் சூழ்ச்சி செய்வதால் சஞ்சலத்துக்கும் ஆளாகாதீர்.

**(அல் குர்ஆன் 16:126127)**

மேலும் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கு முன்னால் வாழ்ந்த நல்லடியாரான லுக்மான் அவர்களின் வாழ்க்கை குறித்து அல்லாஹ், அவர் தன் மகனிடம் இறைவனுக்கு இணைகற்பிக்காமல் அவனை மட்டுமே வணங்க வேண்டும். பெற்றோருக்கு உதவ வேண்டும். பிறரிடத்தில் அழகிய முறையில் நடக்க வேண்டும். நல்லவர்களின் வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டும். தர்மம் வழங்க வேண்டும். நன்மையை ஏவி, தீமையைத் தடுக்க வேண்டும். சோதனைகளின் போது பொறுமையாக இருக்க வேண்டும், பிறரிடத்தில் கண்ணியமாக நடக்க வேண்டும், கர்வமாக நடக்கக் கூடாது என்று மிக அழகான முறையில் அறிவுரை வழங்கியுள்ளார். சகித்துக் கொள்ளுதல் என்ற செயலை மிக சிறப்புக்குரிய காரியமாக அவர்கள் தன் மகனிடம் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

என் அருமை மகனே... தொழுகையை நிலை நாட்டு. நன்மையை ஏவு. தீமையைத் தடு, உனக்கு ஏற்படுவதைச் சகித்துக் கொள். அது உறுதிமிக்க காரியமாகும்.

**(அல் குர்ஆன் 31:17)**

அதேநேரம் யூஸுப் (அலை) அவர்களுடன் பொறுமை தொடர்பில் சம்பந்தப்பட்ட விடயத்தையும் அல்லாஹ் குறிப்பிடத் தவறவில்லை.

'எங்கள் தந்தையே... நாங்கள் போட்டி போட்டு ஓடினோம். எங்கள் பொருளுக்கருகில் யூஸுபை விட்டுச் சென்றோம். அப்போது அவரை ஓநாய் தின்று விட்டது. நாங்கள் உண்மை கூறுவோராக இருந்த போதும் நீங்கள்

**அஷ்ஷெய்க்**
**ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி (காஷிபி)...**

எங்களை நம்புபவராக இல்லை' என்றனர். அவரது சட்டையைப் பொய்யான இரத்தத்துடன் கொண்டு வந்தனர். 'உங்கள் உள்ளங்கள் உங்களுக்கு ஒரு காரியத்தை அழகாகச் சித்தரித்து விட்டன. அழகிய பொறுமையை மேற்கொள்கிறேன். நீங்கள் கூறும் விஷயத்தில் அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்' என்று அவர் கூறினார்.

**(அல்குர்ஆன் 12:1718)**

இதேவேளை அல்லாஹ்தஆலா, 'பொறுமையைக் கடைப்பிடிப்பீராக... நன்மை செய்தோரின் கூலியை அல்லாஹ் வீணாக்க மாட்டான்' **(அல் குர்ஆன் 11:115)** என்றும் குறிப்பிட்டுள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் தன் மகனாரின் மரணத்தை சந்தித்த போது வரம்பு மீறவோ இறைநம்பிக்கைக்கு முரணான வார்த்தைகளைப் பேசவோ இல்லை. மாறாக பொறுமையாக இருந்தார்கள். இது தொடர்பில் அனஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். நபி (ஸல்) அவர்களின் மகன் வபாத்தான சமயம் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் (அவர்களுடைய குழந்தை) இப்ராஹீம் வளர்ந்து வந்த அபூஸைஃப் என்ற கொல்லரின் வீட்டிற்குச் சென்றோம். அவர் இப்ராஹீமின் பால்குடித் தாயாருடைய கணவர் ஆவார். அங்கு நபி (ஸல்) அவர்கள் இப்ராஹீமைத் தூக்கி முகர்ந்து முத்தமிட்டார்கள். மற்றொரு முறை நாங்கள் வீட்டினுள் நுழைந்தோம். அப்போது இப்ராஹீமின் உயிர் பிரிந்துகொண்டிருந்தது. நபி (ஸல்) அவர்களின் கண்கள் நீரைப் பொழியலாயின. இதைக் கண்ட அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரே... தாங்களா (அழுகிறீர்கள்)?' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அவ்ஃபின் புதல்வரே..' என்று கூறி விட்டு தொடர்ந்து அழுதார்கள். பிறகு 'கண்கள் நீரைச் சொரிகின்றன. உள்ளம் கவலையில் துவண்டு கொண்டிருந்தன. ஆன போதிலும் இறைவன் விரும்பாத எந்த வார்த்தையும் நாங்கள் கூற மாட்டோம். இப்ராஹீமே... நிச்சயமாக நாங்கள் உனது பிரிவால் அதிகக் கவலைப்படுகிறோம்' என்றார்கள்.

**(ஆதாரம் : புகாரி)**

ஒரு தடவை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் தம் வீட்டாரில் ஒரு பெண்மணியிடம், 'இன்ன பெண்ணை உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். அப்பெண்மணி, 'ஆம் (தெரியும்)' என்றார். அப்போது அனஸ் (ரலி) அவர்கள், அவள் ஒரு மண்ணறை அருகே அழுதுகொண்டிருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் அவளைக் கடந்து சென்றார்கள். அப்போது, 'அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள். பொறுமையாக இரு' என்று நபிகளார் கூறினார்கள். அப்போது அப்பெண்மணி, 'என்னை விட்டு விலகிச் செல்வீராக. எனக்கேற்பட்ட துன்பம் உமக்கேற்படவில்லை (அதனால்தான் இப்படிப் பேசுகிறீர்)' என்றாள். அப்போது நபி (ஸல்) அவர்கள் (பேசாமல்) அவளைக் கடந்து சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் அவ்வழியே ஒரு மனிதர் சென்றார். அவர், 'நபி (ஸல்) அவர்கள் உன்னிடம் என்ன சொன்னார்? என வினவினார். அதற்கு அப்பெண்மணி, 'எனக்கு அவர் யாரென்று தெரியாது' என்றாள். அச்சமயம் அம்மனிதர் அவர் தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்)' எனக்கூற, அப்பெண்மணி நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாசலுக்குச் சென்றாள். அங்கு அவள் வாயிற் காவலர் யாரையும் காணவில்லை. ஆகவே அவள், 'அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் யாரென்று நான் அறியவில்லை' என்றாள். அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், பொறுமை என்பது துன்பம் ஏற்பட்ட முதல் கட்டத்தில் கைக்கொள்வதேயாகும்' என்றார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

ஸஹாபியொருவர் இப்படி குறிப்பிட்டிருக்கின்றார். ஒரு நாங்கள் நபி (ஸல்) அவர்கள் அருகில் இருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்களுடைய புதல்வியரில் ஒருவர் (ஸைனப் - ரலி) 'தமது குழந்தை' அல்லது 'தம் மகன்' மரணிக்கும் தறுவாயில் இருப்பதால் உடனே வரும்படி நபி (ஸல்) அவர்களுக்குச் செய்தி அனுப்பினார். செய்தி கொண்டு வந்தவரிடம், 'என் மகளிடம் சென்று, கொடுப்பதும் எடுப்பதும் அல்லாஹ்வுக்குரியதே. ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட தவணை உண்டு. அதனால் பொறுமையாக இருந்து நன்மையை எதிர்பார்க்கச் சொல்.' என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

(ஒரு முறை) இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் என்னிடம், 'சொர்க்கவாசிகளில் ஒரு பெண்மணியை உங்களுக்குக் காட்டட்டுமா?' என்று கேட்டார்கள். நான் 'சரி! (காட்டுங்கள்)' என்றேன். அதற்கவர்கள், '(இதோ) இந்தக் கறுப்பு நிறப் பெண்மணிதான் அவர். இவர் (ஒரு தடவை) நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'நான் வலிப்பு நோயால் பாதிக்கப்படுகிறேன். அச்சமயங்களில் (என் உடலிலிருந்து ஆடை விலகி) உடல் திறந்துகொள்கிறது. ஆகவே, எனக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்றார். நபி (ஸல்) அவர்கள், 'நீ நினைத்தால் பொறுமையாக இருக்கலாம். (இதற்கு பதிலாக) உனக்குச் சொர்க்கம் கிடைக்கும். நீ விரும்பினால் உனக்குக் குணமளிக்கும்படி அல்லாஹ்விடம் நான் வேண்டுகிறேன்' என்றார்கள். அப்போது அப்பெண்மணி, 'நான் பொறுமையாகவே இருந்துவிடுகிறேன். ஆயினும், (வலிப்பு வரும்போது ஆடை விலகி) என் உடல் திறந்துகொள்கிறது. அப்படித் திறக்காமலிருக்க அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று சொன்னார். அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் இப்பெண்ணுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்' என்றார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

ஆகவே அல் குர்ஆன் வசனங்களும் நபி மொழிகளும் பொறுமையின் சிறப்பையும் மகத்துவத்தையும் தெளிவாக எடுத்துக்கூறிக் கொண்டிருக்கின்றன. அதனால் வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொறுமையை கடைப்பிடித்து வாழ்வோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்வோம்.

**ஆலமுல் இஸ்லாம்**
மர்லின் மரிக்கார்
aalamulislam.tkn@lakehouse.lk

# உலக வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வோம்

மனிதனில் காணப்படும் ஆசைகளும், பேராசைகளும் அவனை வழிதவறச் செய்திடக் கூடியவையாக மாத்திரமல்லாமல் அவனது அழிக்கும் வழிவகுக்கும் உயிர்க் கொல்லியாகவும் காணப்படுகின்றன. பாவங்களின் முதல் காரணகர்த்தாவாகவும் அவையே திகழுகின்றன. அதன் காரணத்தினால் அவற்றின் நிழல்களைக் கூட அணுக வேண்டாமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மனித வாழ்வு என்பது ஒரு பயணம்தான், எவரும் இவ்வுலகில் நிரந்தரமாகத் தங்கி வாழ்பவர் அல்லர். வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலத்தைக் கொண்டுள்ள இவ்வுலக வாழ்வில் வழிப்போக்கன் போன்று, சில காலம் தங்கி இருந்து விட்டு மறுமை நோக்கி பயணிப்பதுதான் மனித வாழ்வின் நோக்காகும்.

ஆனாலும் இம்மை வாழ்வை விடவும் மறுமை வாழ்வு தான் நிலையானது. அதுவே இஸ்லாத்தின் போதனையாகும். அதனால் மறுமை வாழ்விற்கான முன்னோட்டமாகவே இவ்வுலகவாழ்வு உள்ளது, இவ் உலக வாழ்வு நிரந்தரமற்றது என்பதை இஸ்லாம் உறுதிபடக் கூறி வைத்திருக்கின்றது.

'என்னுடைய சமூகத்தாரே... இவ் உலக வாழ்க்கையெல்லாம் அற்ப சுகம்தான். அன்றியும் நிச்சயமாக, மறுமையோ அதுதான் (என்றென்றுமிருக்கும்) நிலையான வீடு. **(அல் குர்ஆன் 40:39).**

**அபூமதீஹா ...**

உலகில் நீ (தாய் நாடு அல்லது சொந்த ஊர் அல்லாத ஓரிடத்தில் வாழும்) ஓர் அந்நியனைப் போன்று அல்லது ஒரு வழிப் போக்கனைப் போன்று வாழ்வாயாக...' மண்ணறைவாசிகளை போன்று உன்னை நினைத்துக்கொள். உமரின் மகனே. நீ காலைப் பொழுதை அடைந்தால் மாலையை எதிர்பார்க்காதே. நீ மாலையை அடைந்தால் காலையை எதிர்பார்க்காதே. நோயின் பாதிப்புகளுக்கு முன்னால் ஆரோக்கியத்தையும், மரணத்தைச் சந்திப்பதற்காக வாழ்வையும் பயன்படுத்திக் கொள். ஓ... அப்துல்லாஹ், நாளை உன் நிலை என்ன என்பது நீ அறியமாட்டாய்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**(ஆதாரம்: திர்மிதி)**

இந்நபியின் ஊடாக உலகத்தின் மையக் கரு என்ன என்பதை தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இதனை புரிந்து கொண்டவர்களின் வாழ்வு அமைதியான நதியில் மிதக்கும் இலை போன்று வாழ்வு அமையும். இந்த உலகத்தின் சாராம்சத்தை அறிய முற்படாமல் மன இச்சைக்கு அடிமையானால், அலையில் சிக்கிய படகு போன்று நிம்மதியின் கயிறு அறுந்து நிறம் மாறிப்போகும். 'அவர்கள் இந்த உலக வாழ்விலிருந்து (அதன்) வெளித்தோற்றத்தையே அறிகிறார்கள். ஆனால் அவர்கள் மறுமையைப் பற்றி அலட்சியமாக இருக்கிறார்கள்'. **(அல் குர்ஆன்: 30:7)**

இந்த உலகம் வெறும் அலங்காரம் என்பது, வாழும் காலத்தில் நமக்கு புலப்படாது. மரணிக்கும் நேரத்தில் முழுமையாகப் புலப்படும். அப்போது அது பயன் தராது.

அறிந்து கொள்ளுங்கள், 'நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும்; மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும், பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும். (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும். (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகிறது.

ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது கூளமாகி விடுகிறது. (உலக வாழ்வும் இத்தகையதே. எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையான வேதனையுண்டு. (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு. ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை'.

**(அல் குர்ஆன் 57:20)**

ஜனனம், மரணம் இவை இரண்டிற்கும் மத்தியில் உள்ள பயணமே வாழ்க்கை. தீமையான காரியங்களை விட்டு நம் மனதைத் தூரம் போகச் செய்யவேண்டும். இங்கு எதுவும் நிரந்தரமில்லை என்பதை அறிவதில், இம்மை மற்றும் மறுமையின் சந்தோஷங்கள் தொடர்கின்றன.

ஆகவே வாழ்வின் நோக்கத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவோம். அதன் ஊடாக இம்மையிலும் மறுமையிலும் விமோசனமடைந்திட முயற்சிப்போம்.

# அன்பு செலுத்துங்கள், கருணை காட்டுங்கள்

பரந்து விரிந்த இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் படைத்து, பரிபாலனம் செய்பவன் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவன் தான். அவன் எல்லோருக்கும் பொதுவானவன், எந்த தேவையும் இல்லாதவன். அதேநேரத்தில் தேவைகளை வேண்டி தன்னை நாடி வரும் அடியார்களின் தேவையை நிறைவேற்றும் மாபெரும் கருணையாளன் ஆவான். அவனிடம் இருகரம் ஏந்திக்கேட்டால் 'இல்லை' என்று சொல்லாதவன். 'அல்லாஹ் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன்' என்று அல் குர்ஆன் (1:3) எடுத்துக்கூறியுள்ளது.

அத்தகைய சிறப்பு மிக்க இறைவனின் அருளைப்பெற வேண்டும் என்றால் அவன் நமக்கு காட்டிய வழியில் நடக்க வேண்டும். அல் குர்ஆனின் கட்டளைப்படியும், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றியும் நாம் வாழ வேண்டும்.

இறையச்சத்துடன் வாழ்ந்து, கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், மற்றும் ஹஜ் ஆகிய கடமைகளை நிறைவேற்றி வந்தால் அந்த ஏக இறைவனின் திருப்பொருத்தத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் சக மனிதர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? என்பது குறித்து நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

**அப்துல்லாஹ் ...**

அதாவது 'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு இவன் அநீதி இழைக்கவும் மாட்டான். அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான்.

எவர் தம் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றாரோ, அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான்.

எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ, அவரது மறுமை நாளின் துன்பத்தை அல்லாஹ்வும் நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ, அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி).

நம்மில் பலர் வசதி, வாய்ப்புகள் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம். சிலருக்கு அந்த நிலை இல்லாமல் இருக்கலாம். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டும் என்பதையே இந்நபி மொழி வலியுறுத்துகிறது. அவ்வாறு ஒரு முஸ்லிம், சக முஸ்லிம்களின் தேவையை கருணையுடன் நிறைவேற்றினால், அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றுவான், துன்பங்களை நீக்குவான் என்பதை இந்நபி மொழி மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் நாம் ஒருவருக்கு ஒருவர் கருணை காட்டுவதிலும், அன்பு செலுத்துவதிலும் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

'ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறைநம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டுவிடுகிறது'. **(ஆதாரம்: புகாரி)**

அவ்வாறு நாம் கருணையுடன் மற்றவர்களிடம் நடந்துகொண்டால், இறைவனின் கருணைப்பார்வை நமக்கு கிடைக்கும் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.'(படைப்பினங்களின் மீது) கருணை காட்டாதவர், (படைத்தவனால்) கருணை காட்டப்படமாட்டார்'. **(ஆதாரம்: புகாரி)**

'ஒரு முஸ்லிம் மரம் ஒன்றை நட்டு அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது (மற்ற) உயிரினமோ உண்டால் (அதன் காரணத்தால்) ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்காமல் இருப்பதில்லை'. **(ஆதாரம்: புகாரி)**

எனவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப நாம் சக முஸ்லிம்கள் உள்ளிட்ட எல்லா உயிரினங்களுடனும் அன்பு காட்டுவோம், கருணையுடன் நடந்துகொள்வோம்.

# தர்மம் செய்வதை ஊக்குவிப்போம்

மனிதனின் வாழ்வுக்கு இவ் உலகில் இன்றியமையாத தேவைகளாக உணவு உடை உறைவிடம் ஆகியன விளங்குகின்றன. இந்த மூன்றையும் பெற்றுக் கொள்ளாதவர்களின் நிலை கவலையோடும் கண்ணீரோடும் கழிந்து கொண்டிருக்கும். இவர்கள் வறியவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவர்களின் நலன்கள் குறித்து நபி (ஸல்) அவர்கள் அதிகம் அக்கறை செலுத்தியுள்ளாரகள். வறியவர்களின் வாழ்வுக்கு உயிர் ஊட்டவென தான தர்மங்களை செய்யுமாறு அன்னார் நபித்தோழர்களை ஊக்குவித்துள்ளார்கள்.

ஒரு முறை நாங்கள் நபி(ஸல்) அவர்களிடம் இருந்த சமயத்தில் செருப்பில்லாதவர்களாகவும், கழுத்தில் தோலியான மேலாடையை சுருட்டியவர்களாகவும் அவர்களுடைய (தோளில்) வாளை தொங்கவிட்டவர்களாகவும் ஒரு கூட்டம் நபி(ஸல்) அவர்களிடம் வருகை தந்தது. இவர்களில் அதிகமானோர் அல்லது அவர்கள் அனைவரும் ''முள்ர்'' என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர்களாவர். அவர்களின் ஏழ்மை நிலையைக் கண்ட நபி(ஸல்) அவர்களின் முகம் மாறிவிட்டது. உடனே (வீட்டிற்கு) உள்ளே நுழைந்த நபி (ஸல்) அவர்கள், பிறகு வெளியே வந்து பிலால்(ரலி) அவர்களை பாங்கு கூறுமாறு ஏவினார்கள். அவ்வாறே பிலால்(ரலி) அவர்களும் அதான் கூறவே உடனே எழுந்து தொழுவித்தார்கள். பிறகு உரை நிகழ்த்தி ஸூரத்துன்னிஸாவில் முதல் வசனத்தையும், ஸூத்துல் ஹஷ்ரில் பதினெட்டாவது வசனத்தையும் ஓதிகாட்டி, (ஒவ்வொரு) மனிதரும் தன்னுடை தீனாரையோ, தீர்ஹமிலிருந்தோ, ஆடையிலிருந்தோ, கோதுமையில் ஒரு ''ஸாவு'' வோ பேரீச்சம்பழத்தில் ஒரு ''ஸாவு'' வோ தர்மம் செய்யட்டும் என்று குறிப்பிட்டு ஒரு துண்டு பேரீச்சம் பழமாக இருந்தாலும் சரியே என்று கூறினார்கள். உடனே அன்ஸாரி நபித்தோழர்களில ஒருவர் மூட்டையளவு பொருளை கொண்டு வந்தார். பிறகு மக்கள் (ஒவ்வொன்றாக) பின் தொடர்ந்து தான தர்மம் செய்தார்கள். இதனால் அவைகள் இரண்டு மூட்டையளவு உணவு பொருட்கள், ஆடைகளால் நிரம்பி இருந்தன.

அச்சமயம் நான் நபி(ஸல்) அவர்களின் முகத்தை பார்த்த போது அது மலர்ச்சியில் நிரம்பி இருந்தது. இதனால் (முகமே) பொன்னிரமாக மாறிவிட்டதோ (என்று நினைத்தேன்) (பிறகு) நபி(ஸல்) அவர்கள் யார் இஸ்லாத்தில் அழகிய நடைமுறையை ஏற்படுத்துகிறாரோ அதில் அவருக்கு அதனுடைய கூலியும், அவருக்கு பின் அதனை நடைமுறைபடுத்தியவர்களின் கூலியும் அவருக்கு உண்டு. அதனை நடைமுறைப்படுத்தியவர்களின் கூலியிலிருந்து எதுவும் அவருக்கு குறைக்கப்படமாட்டாது. அதேநேரம் யார் இஸ்லாத்தில் ஒரு தீமையை தோற்றுவித்தார்களோ அவருக்கு (அதில்) அதனுடைய பாவமும் அவருக்கு பின் அதனை நடைமுறைப்படுத்தியவர்களின் பாவமும் அவருக்கு கிடைக்கும், அதனை நடைமுறைப்படுத்தியவர்களின் பாவத்திலிருந்து எதுவும் இவருக்கு குறைக்கபடமாட்டாது என்றும் கூறினார்கள். **(ஆதாரம்: முஸ்லிம், நஸாஈ)**

நீண்ட ஹதீஸ் மூலமாக வறியவர்களுக்கு தர்மம் செய்யும் அவசியத்தை வலியுறுத்திய நபி(ஸல்) அவர்கள் அதனுடைய சிறப்பையும் சிலாகித்தது குறிப்பிட்டுள்ளார்கள். எனவே நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின் படி தானதர்மம் செய்வதில் அதிகம் கவனம் செலுத்துவோம்.

## விவசாயப் பெரு மக்களின்... (03ஆம் பக்கத் தொடர்)

தவிர்த்து நோய் நொடியற்ற சுகமான வாழ்விற்கு வழிசமைக்கும் சேதன முறையிலான பயிற்ச்செய்கையே அந்த முதல் முயற்சி.எமது விவசாயிகளின் முதல் முயற்சி அமோக வெற்றியைக் கொடுத்து அதனையே மீண்டும் தொடர இந்நன்நாளில் இறைவனை வேண்டிக்கொள்கிறேன். தமிழ் சமூகத்தின் பண்பாடு,நாகரீகம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடும் அனைத்து உலக வாழ் தமிழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

## வீழ்ச்சியடைந்த... (03ஆம் பக்கத் தொடர்)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க, இந்த ஊடகச் சந்திப்பை வழிநடத்தினார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டிஆரச்சி, சுற்றுலாத்துறையின் வரலாறு காணாத வீழ்ச்சிக்கு உலகளாவிய கொவிட் தொற்றுப்பரவல் ஒரு முக்கிய காரணியாகமாறியிருக்கின்றது என்றும் இது, சுற்றுலாத்துறையில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை இழக்கச்செய்யும் அளவுக்கு பலமிக்கதாக இருந்ததுஎன்றும், அதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குக் கிடைத்துவந்த பாரிய நிதியை நாடு இழந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

"நாட்டுக்கு வெளிநாட்டு நிதி கிடைக்கும் பிரதான மூல காரணிகளில் சுற்றுலாத்துறை மூன்றாவது இடத்தில் காணப்பட்டது. ஏனைய நிதி மூலங்களுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாத்துறையில் இருந்தே நாட்டுக்கு நிகர வருமானம் கிடைத்தது. தற்போதைய சூழ்நிலையை முகாமைத்துவத்துக்குஉட்படுத்தி, சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் வெளிநாட்டுத் தூதுவர் சேவைகளைத் தொடர்புபடுத்தி, நேர்மறையான அணுகுமுறையுடன் பொதுவான இலக்கை நோக்கிச் செயற்பட வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதி மற்றும் முகாமைத்துவத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான நவீன மென்பொருளை எதிர்காலத்தில்அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பொலிஸாரால் நடத்தப்படும் சுற்றுலா பொலிஸ் சேவையைப்புதிய வடிவில் மேற்கொள்வதற்காக அதன் பிரிவுகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களை நிர்வகிப்பதில் அரசாங்கத்துக்குச் சுமையாக மாறாமல், அந்த நிறுவனங்கள் தமக்குத் தேவையான நிதியைத் தாமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலே இதன் நோக்கமாகும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதோடு, அதற்கு அனுமதி அளிப்பதற்கான அடிப்படைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொவிட் தொற்றுப்பரவல் இருக்கும் வரை, இருபது வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் சுற்றுலாத் துறையில் பின்பற்றப்பட்டுவந்தபாரம்பரிய நடைமுறைகளை,உலகளாவிய புதுமைப்படுத்தல்நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பதானது, சுற்றுலாத்துறைஅபிவிருத்தியில் எதிர்பார்க்கும் இலக்குகளை அடைய உதவக்கூடியகாரணங்களில்ஒன்றாகஅமைந்துள்ளது.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை தொடர்பாகச் சர்வதேசத்தில் நிலவுகின்ற நன்மதிப்பை இலங்கையின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது காலத்துக்குப் பொருத்தமானதாகும். இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

## எதிர்கால இராணுவ ... (03ஆம் பக்கத் தொடர்)

மிலேச்சத்தனமான பயங்கரவாத அமைப்பிற்கெதிராக வெற்றிகளை ஈட்டுவதற்கு இராணுவத்தை வெற்றிகரமாக வழிநடத்திய நாட்டின் ஆயுதப் படைகளில் இருந்த தலைசிறந்த தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட பாதுகாப்புச் செயலாளர், எதிர்காலத் தலைவர்கள் எமது தேசம் எதிர்கொள்ளும் புதிய பாதுகாப்பு சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் தமது தலைமைத்துவ பண்பினை வளர்ச்சியடையச் செய்யவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். முப்படைகளின் இடைநிலை அதிகாரிகளது தலைமைத்துவ பண்புகளை தற்கால செயற்பாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு அனைத்து விதங்களிலும் தீர்க்கதரிசனம் செய்யக்கூடிய வகையில் மேம்படுத்திக் கொள்வதற்கு இந்தக் கருத்தரங்கு பயனுள்ளதாக அமையும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

"எதிர்காலங்களில் போர்களை நடாத்துவதற்கு இராணுவத்திற்கு மிகவும் திறமையான தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட அதிகாரிகள் அவசியம்", புதிய தொழில்நுட்பம் மற்றும் தலைமை நிர்வாக முறைகள் முன்னேறி வருவதால், அதிகாரிகள் அதிநவீன யுக்திகளால் மட்டுமே போராடக்கூடிய இராணுவ கலாச்சாரத்திற்கமைய தமது தொழில்வாண்மை விருத்தி பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

## கல்வியியற் ... (03ஆம் பக்கத் தொடர்)

தற்போது பாடசாலைகளை உயர்தரத்தில் தொழில் நுட்பம் பயிலும் மாணவர்கள் அதற்கான ஆசிரியர் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு உள்வாங்கப்படும் வகையில் புதிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிப்பதை விரைவுபடுத்துமாறும் அமைச்சர் அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசியரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் நில நடைமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்து முழு அளவிலான மாணவர்களுடன் பல்கலைக்கழக கல்வி செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

50 வீத மாணவர்களை உள்வாங்கி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து மாணவர்களையும் அழைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கிணங்கவே முழு அளவிலான மாணவர்களுடன் விரைவில் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை பரீட்சைகளை நடத்துதல், இணைய வழி கற்கை நடவடிக்கைகள் மற்றும் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான செயற்பாடுகள் தற்போது பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டத்தரணிகள் ... (03ஆம் பக்கத் தொடர்)

அத்துடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக 2022 2023 ஆம் ஆண்டு தொடர்பில் சட்டத்தரணி இசுரு பாலபட்டபெந்தி தெரிவு செய்யப்ப்ட்டுள்ளார்.

இம்முறை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல்கள் தொடர்பில், தெரிவத்தாட்சி அதிகாரியாக, சொலிசிட்டர் ஜெனரால் இந்திகா தேமுனி டி சில்வா செயற்பட்டார்.

## சபாநாயகர் தலைமையில்... (03ஆம் பக்கத் தொடர்)

ஜனவரி 19ஆம் திகதி முற்பகல் 1.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையும், ஜனவரி 20ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையும் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் பிரேரணையாக சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்களுடன் நேற்று (13) பாராளுமன்ற வளாகத்தில் நடத்திய விசேட கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். ஜனவரி 21ஆம் திகதி பிற்பகல் 10.00 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், பிற்பகல் 4.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கு எதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் (திருத்தச்) சட்டமூலம், சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைத் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை குறித்த இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். அன்றையதினம் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

## ஒமிக்ரோன் அலையின்... (03ஆம் பக்கத் தொடர்)

நபர்களின் சதவீதம் 50 சதவீதமாக இருக்கும் என்று தாங்கள் எதிர்பார்த்த நிலையில், தற்போது அந்த சதவீதம் 20 சதவீதமாக உள்ளதாக தெரிவித்தார். எனவே, கட்டுக்கதைகளை நம்பாது பூஸ்டர் டோஸை கூடிய விரைவில் பெறுமாறு அவர் வலியுறுத்தினார்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்...

நினைவாக பேராயர் தலைமையில் விசேட கூட்டுத்திருப்பலி நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வுகள் தொடர்பில் பேராயர் இல்லம் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று 1000 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதி இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

அதேவேளை நாட்டில் நிலவும் சமூக, பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் இறைவனிடம் மன்றாடுவதற்காக தேசிய மட்டத்தில் செப வழிபாடு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்றையதினம் 14ஆம் திகதி தேவத்தை பசிலிக்காவிலுள்ள மாதா கெபியின் அருகிலிருந்து ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் விசுவாசிகள் கலந்துகொள்ளும் செபமாலை தியான பவனி நடைபெறவுள்ளது..(ஸ)

## எதிர்கொள்ள நேரும் மருந்துத்...

உச்சளவிலான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக எதிர்காலத்தில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில் உச்சகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அமைச்சின் முக்கிய அதிகாரிகளுடன் மருந்து கொள்வனவு தொடர்பில் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளார். அதன் போது எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான மருந்துகள் தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை தமக்குப் பெற்றுத்தருமாறு அமைச்சர் அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ)

## வளமான வாழ்வுக்கு...

நிலைமை காணப்பட்டது. எனவே, இன்றைய நாளில் கொரோனா தொற்று பரவலை கருத்திற்கொண்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சகல வளங்களையும் பெறுவதற்காக சூரிய பகவானையும் குலதெய்வத்தையும் பிரார்த்திப்போம்.

## இயற்கையோடு இயைந்த...

மற்றும் மத ரீதியிலான பண்டிகையாக விளங்குகின்றது. உலக வாழ் இந்துக்களுடன் இணைந்து இப்பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர இந்து மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தைபொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும்,...

தைப்பொங்கல் தினப் பாரம்பரியக் கொண்டாட்டங்களைக் கலாசார ரீதியாகச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம், எதிர்காலத்தில் வளமான பயிர் அறுவடைக்கு சூரிய பகவானின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் கிடைக்கின்றன என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

சுபீட்சத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடும் வகையில் இந்துக்களினால் முன்னெடுக்கப்படும் சடங்குகள், காலங்காலமாக இலங்கைச் சமூகத்துடன் பின்னிப்பிணைந்திருக்கின்றன. விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்துடன் இணைந்த அனைத்து இலங்கையர்களும், தைப்பொங்கல் தினத்தை மிகுந்த மரியாதையுடன் எதிர்பார்க்கின்றனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். இது, பசுமை விவசாயத்துக்கான தேசிய கொள்கைக்குப் பலன் தரும் என்பதே பெரும்பான்மையானோரின் நம்பிக்கையாக இருக்கின்றது. அதற்கான நோக்கத்துக்கு இந்தத் தைப் பொங்கல் கொண்டாட்டம் மிகுந்த உற்சாகத்தைத் தருவதாக நான் நம்புகிறேன்.

இந்த வருடமும், சுகாதாரத் துறையின் ஆலோசனைப்படி உங்களதும் உங்கள் அன்புக்குரியவர்களதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே தைப் பொங்கலை அனைவரும் கொண்டாட வேண்டும்.

## தைப் பொங்கல் திருநாள்...

மலையக சமுதாயத்தின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குத் தக்க பரிகாரம் காண இப்பொங்கல் பெருநாள் வழி சமைக்குமென்ற நம்பிக்கையோடு இவ் வருடத்தில் மலையக மக்களுக்கு மிகவும் நன்மையான காரியங்கள் கிட்டுமெனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஏர்பூட்டு உழவனின் எழுச்சிப் பொங்கல் எல்லார் வாழ்விலும் மலர்ச்சியையும் மங்களத்தையும் ஏற்படுத்த வேண்டுமென பழைய எண்ணங்கள் சிந்தனைகள் யாவற்றையும் களைந்து பொறுப்புள்ள பிரஜையாக வாழவும் வரும் நாட்களெல்லாம் சுறுசுறுப்பான நாட்களாக நகரவும் சகல சௌபாக்கியங்களும் அனைவருக்கும் சமமாக கிட்டவும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டுமென்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர்...

மகனாகப் பிறந்த இவர் கிருஷ்ணகுமார், அம்பிகுமார், உதயகுமார், நந்தகுமார், உமா குமாரி, பாமா குமாரி, மீனா குமாரி, சுகுமாரி ஆகியோரின் சகோதரராவார். உடுதுறை மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்ற அவர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டருந்த அவர் வாசிப்பிலும், தமிழ் இலக்கியத்திலும் மிகுந்த ஆர்வமும் அத்துறையில் தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

லேக்ஹவுஸ் வெளியீடாக வெளிவந்த அமுது மாதச் சஞ்சிகையின் இணை ஆசிரியராக விளங்கிய அவர் பின்னர் தினமுரசு நாளிதழின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். கவிஞராகவும் இலக்கிய பேச்சாளராகவும் அறியப்பட்டிருந்த சிவகுமார் கொழும்பு கம்பன் விழா மேடைகளில் தவறாமல் காணப்படும் முக்கியஸ்தர்களில் ஒருவர். அவரது பூதவுடல் பொரளை ரேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகளுக்காக மாலை 5.30அளவில் பொரளை கனத்தைக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

## நாட்டில் நிலவும் மின் தடையை...

குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு தடையின்றி நிலக்கரி விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது கையிருப்பில் உள்ள நிலக்கரி இந்த ஆண்டு மே மாதம் வரை போதுமானதாக இருக்கும் என்றும் இலங்கை மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

நுரைச்சோலை அனல் மின்நிலைய ஒரு பகுதி பழுதடைந்ததால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதோடு மின்வெட்டு அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 10 நாட்கள் வரை இந்த நெருக்கடி நிலை இருக்கும் என அரசு அறிவித்துள்ளது.

## ஒமிக்ரோனை பழைய தடுப்பூசியால்...

உருவாக்கப்பட்டுள்ள நிபுணர் குழு, அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இதனை வலியுறுத்தியுள்ளது. தற்போது கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் அதிகரித்து வருவதனால் செயலூக்கி தடுப்பூசியை மீண்டும் மீண்டும் செலுத்துவது சிறந்த வழியாக அமையாது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தற்போது 149 நாடுகளில் Omicron வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடுமையான நோய் தாக்கங்கள் ஏற்படுவதைத் தடுப்பது மாத்திரமின்றி தொற்று உறுதியாவதை தடுப்பதற்கான தடுப்பூசிகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 15 வயது சிறுமி...

அதன்படி, சம்பவம் தொடர்பில் பொலிஸார் சிறுமியிடம் வாக்குமூலம் பெற உள்ளனர்.இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## லிட்ரோ எரிவாயு முனையத்திற்கு...

செய்ய முடியும் என்றும் அந்நிறுவனம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்குச் சொந்தமான ஹம்பாந்தோட்டை முனையத்தின் செயற்பாடுகள் மற்றும் எரிவாயு ஆராய்ச்சிக்கான நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்தல் போன்ற பணிகள், இந்த வருடம் முன்னெடுக்கப்படும் என்று, எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார்.

எரிவாயுக் களஞ்சியத் தாங்கி வளாகம் மற்றும் எரிவாயு நிரப்பும் நிலையத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி , நிறுவனத்தின் ஊழியர்களிடம் கலந்துரையாடியதுதோடு, விபரங்களையும் கேட்டறிந்துகொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டீ. சில்வா ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

அண்மைக்காலமாக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு மற்றும் எரிவாயு தட்டுப்பாடு என்பன காரணமாக லிட்ரோ நிறுவனத்தின் மீது பாரிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதன் தலைவர் மாற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையிலே ஜனாதிபதி அங்கு சென்று நிலைமைகளை நேற்று ஆராய்ந்ததோடு தேவையான பணிப்புரைகளையும் வழங்கியுள்ளார். இதே வேளை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் என காணப்பட்ட எச்சரிக்கை நிலை நிவர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 14 தினங்களுக்கு எரிபொருள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வருவதாகவும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மூன்று கப்பல்களில் நாட்டுக்கு எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கான கடன் பத்திரத்தை திறப்பதற்கு காலதாமதமானதால் இந்த மாதத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் எச்சரிக்கை நிலை காணப்பட்டது. எனினும் நேற்றுப் பிற்பகல் அதற்கான கடன் பத்திர விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அந்த எச்சரிக்கை நிலை தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எரிபொருள் கொண்டு வரப்பட்டுள்ள கப்பல்களில் 37,000 மெற்றிக் தொன் பெற்றோல் இரண்டு கப்பல்களில் 70,000 மெற்றிக் தொன் டீசல் ஆகியன நாட்டுக்கு கிடைத்துள்ள நிலையில் அதில் பெற்றோல் 12 தினங்களுக்கும் டீசல் 14 தினங்களுக்கும் போதுமானதாக உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள்...

எவ்வாறாயி னும் நேற்றைய தினம் 80 அலுவலக ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ரயில் நிலையப் பொறுப்திகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 24 மணித்தியாலய அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்வதாக ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது தொழிற்சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு தொடர்ச்சியாக தீர்வு காணப்படவில்லை. ரயில்வே கால அட்டவனையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆசன முன்பதிவு பெற்றுக்கொண்டுள்ள நிலையிலும் சில மணித்தியாலங்களுக்கு முன்பதாக குறித்த ரயில் சேவை ரத்து செய்யப்படுதல் போன்ற கோரிக்கைகள் இதில் உள்ளடங்குவதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் சேவைகள் நேற்று நடைபெறாமையால் பெருந்திரளான ரயில் நிலையங்களில் மக்கள் அவதிப்பட்டதோடு அலுவலகங்களுக்கு வரும் ஊழியர்கள் அலுவலகம் செல்ல முடியாது பாதிக்கப்பட்டனர். நீண்ட வார இறுதி விடுமுறைக்காக தூர இடங்களுக்கு செல்வதற்காக வந்த பயணிகள் ஏமாற்றுத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர்.இதே வேளை நேற்று பிற்பகல் முதல் ரயில் நிலைய வாயில்கள் பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்ததோடு மக்கள் பஸ் நிலையங்களில் திரண்டிருந்ததாக அறிய வருகிறது.

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த...

அமை ச்ச ரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த குழு செயற்பட்டு வருகிறது.

வேறு பல காரணங்களினால் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. முடிந்தளவு விரைவாக உள்ளூராட்சி தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

த ம்புள்ள நகர சபை புதிய அலுவலக வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனக பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், தற்போதைய உள்ளூராட்சி தேர்தல் முறை தொடர்பில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் காணப்படுகின்றன. அதனால்தான் இது தொடர்பில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொவிட் நிலைமை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் உள்ளூராட்சி சபைகளினால் செயல்பட முடியவில்லை. திட்டமிட்டபடி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. இதனாலேயே உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இழந்த இந்த இரண்டு வருடங்களுக்கு நியாயமான கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான மூன்று சட்டங்களினூடாகவும் குறிப்பிட்ட காலத்திற்கு தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் அவற்றை நியாயமான காரணங்களுக்காக பயன்படுத்தியுள்ளேன்.

ஆனால் கடந்த அரசாங்கம் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வித நியாயமான காரணமும் இன்றி ஒத்திவைத்தது. அரசாங்கமாக நாம் மக்களின் ஜனநாயக உரிமைகளை எப்போதும் மதித்து வருகிறோம்.ஆனால் தற்போது நாட்டு மக்கள் தேர்தல் நடத்துமாறு கேட்கவில்லை. பொருளாதார நெருக்கடி நிலையை சீர் செய்யுமாறு தான் கேட்கின்றனர்..

நாட்டு மக்கள் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சரியான பதில் வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (பா)

## தேசமெங்கும் முழுமையாக...

தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும். தைத்திருநாள் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் மத, கலாசார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். தமிழர்கள் தம் வாழ்வில் கொண்டாடி மகிழ்கின்ற பண்டிகைகளில் உன்னதமானதோர் நிகழ்வு இந்த தைத்திருநாளாகும். உழவர் பெருமக்கள் தங்களின் கடின உழைப்புக்கு பயன் நல்கிய இயற்கைக்கு, தமது நன்றியுணர்வினைத் தெரிவிக்கும் திருநாளாக இத்தைத்திருநாள் விளங்குகின்றது. அதனால் இத்தைப்பொங்கல் திருநாளிலே அனைவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர். இயற்கையின் பெருமைக்கு முக்கியத்துவம் நல்கும் இத்திருவிழா, நன்றி மறவாத உன்னத பண்பினை நம் அனைவருக்கும் எடுத்தியம்பி நிற்கிறது.

இனம், மதம், மொழி ஆகியவற்றினால் நம் தேசம் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்று சொல்வதிலே பெருமை கொள்வோம். நம் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாக அமைவதே இத்தேசத்தின் சுபீட்சத்துக்கான அத்திவாரம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கு" என்ற உன்னத இலட்சியத்துடன் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறிக்கொண்டிருக்கிறோம்.இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தைத்திருநாளானது இன மத பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும். அனைத்து மக்களும் நிறைந்த சௌபாக்கியத்துடன், அமைதியும் சமாதானமும் நின்று நிலைக்கும் வகையில், மகிழ்வோடு வாழ இந்த நன்னாளிலே எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இந்த மகிழ்ச்சியான நன்னாளிலே, தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்துகொண்டிருக்கும் எம் சக உறவுகளாகிய தமிழ் உறவுகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்வதாகவும் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அநீதி தோற்கும்! எமது மக்களின்...

உடைத்து சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவில் வென்றெடுப்போம் எனவும் அநீதி தோற்கும்! எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த வாழ்த்து செய்தியில், "நன்றிக்கு தலை வணங்குதல் என்பது தொன்று தொட்டு நிலவி வரும் தமிழர் பண்பாட்டு வழிமுறையாகும். உழுதுண்டு வாழும் உழவர் மக்களின் விளை நிலங்கள் யாவும் செழித்து வளர உதவிய சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதோடு மட்டுமன்றி, எமது மக்கள் தம் வாழ்வெங்கும் தம்மோடு கூடவே இருந்து தம் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவோர்க்கும், அறம் சார்ந்த, அவலங்கள் இல்லாத யதார்த்த வழிமுறையில் தம்மை வழி நடத்தி செல்வோருக்கும் நன்றி செலுத்தும் பண்பாட்டையும் இன்னமும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும்,.. வழி பிறந்தால் தம் வாழ்வு செழிக்கும்,.. இதுவே எமது மக்களின் ஆழ்மன நம்பிக்கை. ஆனாலும், நம்பிக்கைகளும் அதற்கான வேண்டுதல்களும் மட்டும் இருந்தால் போதாது.

குறையிலா உயிர்கள் வாழும் மகிழ் காலத்தையும் தமது எதிர் காலத்தையும் எமது மக்கள் தாமே உருவாக்கும் தீர்மானங்களை தம் கைகளில் எடுக்க வேண்டும். உங்கள் இலட்சியத்தில் தோற்றீரானால் சூட்சுமத்தை மாற்றுங்கள், இலட்சியத்தை அல்ல என்ற கீத தர்ம உபதேசங்களை ஏற்று, எமது மக்கள் தமது கனவுகளை எட்டுவதற்கு இதுவரை முயன்று தோற்றுப்போன வழிமுறைகளை கைவிட்டு,

நாம் சொல்லும் நடை முறை சாத்தியமான நற்சிந்தனைகளை இன்னமும் ஏற்று நடந்தால், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ நீதியின் உரிமை நோக்கி வெற்றியின் நம்பிக்கையோடு நடக்க முடியும்.

உலக நாடுகளெங்கும் சூழ்ந்திருக்கும் கொடிய நோயின் தாக்கங்கள் இலங்கை தீவையும் சூழ்ந்திருக்கிறது,. சூழ்ந்து வரும் துயர்களை உடைத்து சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவில் வென்றெடுப்போம்!அறம் காப்போரை அறம் காக்கும்!அறம் வெல்லும்,. அநீதி தோற்கும்! எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும்!

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எதிர்கால நம்பிக்கையோடு தைப்பொங்கல் திருநாளை கொண்டாடி மகிழும் சகல மக்களுக்கும் புது வாழ்வு பூக்கட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# நகர்வலம்



# தோட்ட தொழிலாளருக்கும் 5,000 ரூபா கொடுப்பனவு

**வழங்குமாறு வடிவேல் சுரேஷ் எம்.பி கோரிக்கை**



அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ள 5000 ரூபா கொடுப்பனவு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் கட்டாயமாகப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 5000 ரூபாவை வழங்க முடியாது என பெருந்தோட்ட நிறுவனங்கள் அறிவித்துள்ளதாகத் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் குறித்த தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்த வேண்டும் எனவும் இந்த விடயத்திலிருந்து பெருந்தோட்ட நிறுவனங்கள் வெளியேற முடியாதெனவும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

# சமுர்த்தி பெறுநர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு விசேட வேலைத்திட்டம்

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

முழு நாட்டிலுமுள்ள 17 இலட்சத்துக்கும் அதிகமான சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இன்று முழு உலகத்திலும் பரவியுள்ள கொடூர நோயான கொரோன தொற்றினால் எமது நாடு மற்றுமல்ல அனைத்து நாடுகளினது பொருளாதாரமும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அப்படியான ஒரு இக்கட்டான நிலைமையிலும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கும் நிவாரணங்களை சிறிதளவும் குறைக்காது தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கின்றது என்றார்.

குறைந்த வருமானம் பெறும் மற்றும் சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்களை அநுராதபுரத்தில் வழங்கும் நிகழ்வென்றில் கலந்துகொண்டு உரை நிகழ்தும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்துகையில்,

நாட்டில் 17 இலட்சத்து அறுபதாயிரம் பேர் வரையில் சமுர்த்தி பயனாளிகள் காணப்படுகின்றனர். அவற்றில் 72000 பேர் அநுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றனர். நாடு பூராகவும் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதன் மூலம்



அவர்களது பொருளாதாரத்தை விருத்தி செய்து கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பை வழங்க முடியும். அதற்காகவே அரசாங்கம் தற்சமயம் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது என மேலும் தெரிவித்தார்.







ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தில் நடைபெற்ற மர்ஹூம் கலீபதுல் குலபா மௌலவி ஜே. அப்துல் ஹமீத் பஹ்ஜியின் 3ம் நாள் கதமுல் குர்ஆன், ஹழரா மஜ்லிஸில் சீனன்கோட்டை பள்ளி சங்க தலைவர் ஏ.எச்.எம்.முக்தார், உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்டோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

## பிறந்தநாள் வாழ்த்து



பேருவளை பன்னிலை ரீஸ்மி ரஷப் சயனிபூவைச் சேர்ந்த மொஹமட் ரொஷான் அக்தர், ஜென்னதுல் இஷ்பா தம்பதியினரின் செல்வப் புதல்வன்

**அப்துர்ரஹீம் ரொஷான்**

தனது இரண்டாவது பிறந்த நாளை (15-01-2022) தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை உம்மா, குவைட்டிலிருந்து வாப்பா, களுத்துறையைச் சேர்ந்த அப்பா, வாப்பும்மாமார், மாமி, சாச்சாமார், பேருவளையைச் சேர்ந்த பத்தும்மா, உம்மும்மாமார், அப்பாமார், பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், சாச்சிமார், சாச்சா, ராயித் நானா, இயாத் தம்பி, ஸஹ்ரா தங்கச்சி, கொழும்பைச் சேர்ந்த மாமா, மாமி, ரஸீல் பச்சான் ஆகியோர் அல்லாஹ்வின் கிருபையுடன் நபிவழியில் நீடூழி வாழ பிரார்த்திக்கிறார்கள். ஆமீன், ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

# கதம்பம் நேரலை நிகழ்வு



சுவாமி விவேகானந்தர் கலாசார மையம் (SVCC),இந்திய உயர் ஸ்தானிகராலயம்,கொழும்பு ஆகியன இணைப்பில் பிரபல பரத நாட்டியக் கலைஞரும் அறிஞருமான, கலாநிதி சுபாஷினி பத்மநாதன், விரிவுரை மற்றும் பரத நாட்டிய நிகழ்ச்சியை, கதம்பம் என்ற தலைப்பில், நேரலையில் நடத்துகின்றார்.

இன்று (தைப்பொங்கல்) பண்டிகையை குறிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. பார்வையாளர்கள் இந்த நிகழ்ச்சியை மாலை 6.00 மணிக்கு கீழ் வரும் இணைப்பினூடு கண்டு களிக்கலாம்.

SVCC, Colombo FACEBOOK பக்கத்தில் https://www.facebook.com/ICCRSriLanka

# குழியொன்றில் விழுந்து குழந்தை உயிரிழப்பு

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியொன்றில் விழுந்து பெண் குழந்தை உயிரிழந்த சம்பவமொன்று ஹபரனை பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஹபரனை ஹத்தரஸ் கொட்டுவ பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கல்ஓய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரனை மஹமொறகந்த , ஹதறஸ் கொட்டுவ பகுதியில் ஒரு வயதும் பத்து மாதமுமான குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த குழந்தையின் தாய், குழந்தையை பார்த்துக் கொள்ளுமாறு உறவினர் ஒருவரது வீட்டில் ஒப்படைத்துவிட்டு தேவை நிமித்தம் ஹபரனை பகுதிக்கு சென்றுள்ளார். இதன்போது முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை, வீட்டுத் தோட்டத்திலுள்ள பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியில் விழுந்து உயிரிழந்ததாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

# திறப்பனை பிரதேச சபை உபதலைவர் முஜிபுர் ரஹ்மான் நேற்று காலமானார்

*கல்நேவ தினகரன் விசேட , திறப்பனை தினகரன் நிருபர்கள்*



அனுராதபுரம், திறப்பனை பிரதேச சபையின் உப தலைவர் வை.முஜீபுர் ரஹ்மான் திடீரென நோய்வாய்ப்பட்டு அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று (13) அதிகாலை மரணமடைந்தார்.

அனுராதபுர , முறியாகடவளை, பமுனுகமவைச் சேர்ந்த யூசுப் முஜீபுர் ரஹ்மான் நீண்ட காலமாக திறப்பனை பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்ததுடன் இறக்கும் போது உப தலைவராக பதவி வகித்தார்.

இவரது தந்தையார் மர்ஹூம் யூஸுப் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் திறப்பனை பிரதேச சபையின் தலைவராக இருந்து சாதனை படைத்தவர். தந்தையைப் போலவே தனயனும் உறுதியான அரசியல்வாதியாகவே இருந்து வந்தார். தந்தையும் மகனும் எப்போதுமே மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி உண்மையான மக்கள் தொண்டர்களாகவும் இருந்து மக்களால் நேசிக்கப்பட்டார்கள். இரண்டு பிள்ளைகளின் தந்தையான அன்னார் இன மத கட்சி பேதமின்றி சேவை புரிந்து சகல இன மக்களினதும் நன்மதிப்பை பெற்ற ஒருவராவார்.


**திகதி 12.01.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk**

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4645
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,126,820.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 9 5 8 4 0 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,572,663.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2940
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,340,660.00
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 17 29 44 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,839,480.00

**Mega POWER மெகா பவர் கோடி 10** — சீட்டிழுப்பு இலக்கம் 993
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,093,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 166,906,944.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: L — சுப்பர் இலக்கம்: 18 — வெற்றி இலக்கங்கள்: 46 49 64 76

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 675
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,060,540.00
ஆங்கில எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 26 31 49 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,347,660.00

**ஜாதிக சம்பத** (JATHIKA SAMPATHA) — சீட்டிழுப்பு இலக்கம் : 1197
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,167,860.00
வெற்றி இலக்கினம்: கடகம் — வெற்றி இலக்கங்கள்: 5 1 6 2 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,712,648.40

**சுபிரி வாசனா** — சீட்டிழுப்பு இலக்கம் :1665
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,653,200.00
சுப்பர் இலக்கம்: 07 — வெற்றி இலக்கங்கள்: 01 14 28 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,524,124.40

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 சனவரி 19ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 97,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122D229 | LKA18222G229 | LKA36423A208 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 27,000 | 35,000 | 97,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 சனவரி 19 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 சனவரி 21 |
| வழங்கப்படும் திகதி | : 2022 சனவரி 21 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 சனவரி 19, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.**

## மக்கள் வங்கி - காத்தான்குடி கிளை

## பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில், காத்தான்குடி நகர சபை எல்லைக்கு உட்பட்ட, காத்தான்குடி 03-165 ஆம் இலக்க கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில், காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள, கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு இது, மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் இல.M0026/04 ல் பதியப்பட்டுள்ளது.

**மேலே கூறப்பட்ட காணித்துண்டு, மீள் அளவை செய்யப்பட்டு, உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.ஏ.சிங்கராஜா அவர்களால் 2017 டிசம்பர் 14 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட AS/2017/320 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு, காத்தான்குடி நகர சபை எல்லைக்கு உட்பட்ட, காத்தான்குடி 03-165 ஆம் இலக்க கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில், காத்தான்குடி 03 ஆம் வட்டாரத்தில் ஹுதா ஒழுங்கையில் வரி மதிப்பு இல.81 இல் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு.ஏ.சிங்கராஜா அவர்களால் வரையப்பட்டதுமான, 2017 டிசம்பர் 14 ஆம் திகதியிடப்பட்ட AS/2017/320 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : றூ-00 : ப-06**
**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி புதன்கிழமை மக்கள் வங்கியின் காத்தான்குடி கிளை வளாகத்தில் மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2019 ஒக்டோபர் 17ஆம் திகதிய டெயிலி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணிக்கு செல்வதற்கான வழி**
காத்தான்குடி மக்கள் வங்கிக் கிளையிலிருந்து, கல்முனை வீதி வழியாக மட்டக்களப்பு நோக்கி சுமார் 850 மீற்றர் வரை சென்றதும், இடதுபுறமாக காணப்படும் மெத்தை பள்ளி வீதிக்கு திரும்பி அங்கிருந்து சுமார் 225 மீற்றர் சென்றதும் மெத்தைப்பள்ளி ஒழுங்கையைக் காணலாம். அந்த வீதி வழியாக சுமார் 85 மீற்றர்கள் வரை சென்றதும் மெத்தைப்பள்ளி ஜும்ஆ மஸ்ஜித் உள்ளதை அவதானிக்க முடியும். அதைத் தாண்டி ஹுதா ஒழுங்கை வரை சென்று பின்னர் அங்கிருந்து வலது புறமாகத் திரும்பி சுமார் 125 மீற்றர்கள் வரை சென்றதும் குறித்த ஆதனம் இடது பக்கத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) நொத்தாரிசு கட்டணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரியும்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம், இல.25/1, கோவிங்டன் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் செலுத்தப்படல் வேண்டும்.

தொலைபேசி : 065 2222652, 065 2222653

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*
**130 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகமும் காட்சியறையும்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

**இணையதளம்: www.sandslanka.com**

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜனவரி 14
வெள்ளிக்கிழமை

# கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பொதுசந்தைகள்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தைகள் யாவும் மூடப்பட்டு இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழுகின்ற ஒரு பிரதேசமாக இது காணப்படுகின்றது. குறித்த பிரதேசத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் வினைதிறனற்ற வகையிலேயே காணப்படுவதாக பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் திறன்பட இயங்கி வந்த பாண்டியன்குளம் பொதுச்சந்தை. நட்டாங்கண்டல் பொதுச் சந்தை. பாலிநகர் பொதுச் சந்தை, விநாயகபுரம் பொதுச்சந்தை, கொள்ள விளாங்குளம் பொதுச் சந்தை. பனங்காமம் பொதுச்சந்தை ஆகிய பொதுச்சந்தைகள் முழுமையாக செயலிழந்து காணப்படுகின்றன. எந்த சந்தைகளும் இதுவரை



இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக கடந்த காலங்களில் 300ற்கும் மேற்பட்டவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக சந்தைகள் கடந்த 2013ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் கோடிக்கணக்கான நிதிகளைச் செலவிட்டு புனரமைக்கப்பட்டு புதிதாக திறந்து வைக்கப்பட்டவையாகும். எனினும் அந்த சந்தைகள் அத்தனையுமே கடந்த நான்கு ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் கால்நடைகளின் உறைவிடங்களாக காணப்படுகின்றன.

இவ்வாறு பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தைகள், மீன்கடைகள், இறைச்சி கடைகள் முழுமையாக மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமையால் மக்கள் தங்களுடைய அடிப்படை தேவைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதாக துணுக்காய் மற்றும் மல்லாவி ஆகிய பிரதேசங்களுக்கு சென்று தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

பிரதேச சபையின் வினைதிறனற்ற செயற்பாடு காரணமாகவே கடந்த காலங்களில் இயங்கிய சந்தைகள் முழுமையாக செயலிழந்து போயுள்ளன. ஆகவே குறித்த சந்தைகளை இயக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பொங்கல் பொருட்கள் வழங்கி வைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் பகிர்ந்து உண்போம் எனும் தொனிப்பொருளில் பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் வள்ளிபுனம் தேவிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களின் பங்குபற்றுதலுடன் நேற்று மாலை இடம்பெற்றது. தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்து உண்போம் எனும் தொனிப்பொருளில் பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டனர்.

# ஐயா! இனி ஆருளார், எமக்கு?

புலவராகவும் புரவலராகவும் இருந்த புண்ணியர். வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாத வள்ளல். நேர்படப் பேசும் நேர்மையர். ஒருவரைப் பற்றி ஒருவருக்கு உரைக்காத உண்மையர்.தன்னைத் தானே செதுக்கிய சிற்பி. திறந்ததோர் பல்கலைக்கழகமாய்த் திகழ்ந்த தீரர். தன் சந்நிதியை 'சங்கப் பலகை'யாய் சாற்றியவர். உங்கள் உரக்கடை தமிழுக்கு 'உர'க்கடை. தங்கள் பசளைக் கடை திருமுறைகளுக்கு 'பசளை'க் கடை. சொற்களின் வேர் தேடியாராய்ந்து எம்மை சொக்கவைக்கும் சுந்தரர். தமிழின் ஆங்கிலத்தின் சுவையறிவிப்பார் முன் தலைசாய்க்கும் சுவைஞர்.தாழ்வில் தாங்கியும் உயர்வில் உடனுமிருந்த உற்றார். இந்து மாமன்றத்தை எண்ணற்ற ஆண்டுகள் எழிலுற இயக்கிய ஏந்தல். அங்கு நடந்த நூற்றைக் கடந்த விழாக்களில் மட்டுமல்ல பௌர்ணமி. அப்போது உங்கள் முகத்திலும் பௌர்ணமிகள்தான். இந்த மண் வியக்கும்படி மாண்புற நடந்த மணி விழா, பவள விழா, அமுத விழாக்கள் உங்களுடையதே! வாழும்போது வைரமாக



வாழ்ந்த வள்ளலே! வானுலகிலும் அப்படியே வாழ்வீர். 'ஆறாம்(ன்) நம்பர்' நீங்கள். அதைச் சொல்லி சொல்லி எத்தனைதரம் ஆனந்தப் பட்டிருப்பீர்கள்? வெத்திலைத் துப்பல் தெறிக்க நீங்கள் திருப்புகழ் சொல்லும் அழகு சாகும்வரை கண்ணில் நிற்குமே! "அருகுநுனி பனியனைய சிறிய துளி, பெருகியொரு ஆகமாகிய பாலரூபமாய்".. எத்தனை தரம் நீங்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்! நீங்கள் இல்லாத வவுனியா இனி என்றுமே, பச்சைப் பசுமை இல்லாத மருதமே! இந்த இடைவெளி இனி என்றும் அடைபடாத இடைவெளியே! பார்த்துப் பழகிய கண்கள் இனி பசார் வீதியில் ஈசன்பசளைக் கடையில் தன்னிச்சையாக உங்களைத் தேடுமே? என் செய்வேன்? முருகனை நாடிய ஈசனானீர். உலகம் மட்டுமல்ல. அன்பிற்கு முன் அண்டமும் சிறியதே! ஒருநாள் சந்திப்போம்.

**தமிழருவி த.சிவகுமாரன்**

# நாட்டின் நிதி நிலமை மிகமோசமான கட்டத்தினை அடைந்துள்ளது

**புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்**

நாட்டின் நிதி நிலமை மிகமோசமான கட்டத்தினை அடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் தேவிபுரம் பகுதி மக்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (12.01.2022) மாலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாங்கள் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படப்போவதாக முன்பே அறிவிப்பினை செய்துள்ளோம். அப்போது அரசு அதனை மறுத்தது.



சில மாதங்களுக்கு முன்னர் விவசாய அமைச்சின் செயலாளர் இதனை சொன்னபோது அவரை பதவியில் இருந்து விலக்கினார்கள். இப்போது அரசாங்கமே அதனை சொல்ல ஆரம்பித்து விட்டது.

விவசாய அமைச்சர் தன்னுடைய 32 வருட அரசியல் வாழ்க்கை பாழாய் போய்விட்டுள்ளதாக சொல்கின்றார். நாட்டின் நிதி நிலைமை மிக மோசமடைந்துள்ளது. இது இந்த மாத முடிவிற்குள் இன்னும் மோசமான நிலையினை அடையும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

வடக்கிலும் கிழக்கிலும் எங்கள் மக்கள் நிலத்தினையும் கடலினையும் நம்பி வாழ்பவர்கள். அதன் காரணமாகவோ என்னவோ நாட்டில் மற்றப்பிரதேசங்களை விட எங்களுக்கு இதன் தாக்கம் என்பது சற்று தாமதித்து வரலாம். ஆனால் ஏற்கனவே ஏனைய மாகாணங்களில் மக்கள் பட்டினியின் விளிம்பிற்கு வந்துவிட்டார்கள்.

எங்கள் மாவட்டங்களில் அது வருகின்ற பொழுது வரப்போகும் பஞ்சகாலத்தில் எங்களிடம் இருக்கும் அனைத்தினையும் அனைவரிடத்திலும் பகிர்ந்து உண்கின்ற நிலை வந்துள்ளது. அதனால்தான் பகிர்ந்து உண்போம் என்கின்ற தொனிப்பொருளை மக்களிடத்தே கொண்டுசெல்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசம்பர் 19ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீனவர்கள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து நேற்றைய தினம் வியாழக்கிழமை மூன்றாவது தவணையாக வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மீனவர்களின் விளக்கமறியலை ஜனவரி 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# கோஸ்ட் துணி வயிற்றுக்குள் பழுதடைந்து பெண் மரணம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

கரவெட்டியில் வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் திடீர் என உயிரிழந்துள்ளார். 60 வயதுடைய யாக்கரு வீதி கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மனோன்மணி குல வீரசிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் வயிற்றுக்குள் கோஸ்ட் துணி பழுதடைந்து கிருமித்தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை(10) வாந்தி எடுத்தமையால் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் இரவு திடீர் என உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் அவரின் வயிற்றுக்குள் கோஸ்ட் துணி பழுதடைந்து கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணுக்கு கருப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அதனை அகற்றுவதற்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.

யாழில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி பெண்நோயியல் சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவரினால் பெண்ணின் கருப்பையை அகற்றும் அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.

அப்பெண்ணுக்கு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி தனியார் மருத்துவமனையொன்றில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் அச்சத்திரசிகிச்சையின் போதே பெண்ணின் உடலுக்குள் 50 சென்ரிமீற்றர் நீளம் 10 சென்ரிமீற்றர் அகலமுள்ள துணி ஒன்று வைத்து தையலிடப்பட்டமை கண்டறியப்பட்டது.

அவரது உயிரிழப்புக்கு அந்த துணியினால் ஏற்பட்ட கிருமித்தொற்றே காரணம் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தொலைபேசியில் அறிமுகமான காதலனால் இளம் பெண் பாலியல் துஷ்பிரயோகம்

**யாழ்.விசேட , கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 18 வயது யுவதியொருவர் பல இளைஞர்களால் பாலியல்துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தவறுதலான தொலைபேசி அழைப்பின் (miss Call) ஊடாக அறிமுகமான காதலனை நம்பி சென்ற 18 வயது யுவதியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், தெரியவருவதாவது,

தொலைபேசிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வந்திருந்த தவறுதலான தொலைபேசி அழைப்பின் ஊடாக அறிமுகமான இளைஞனுடன் நட்பு ஏற்பட்டு பின்னர் அது காதலாக மாறியுள்ளது.

இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காத நிலையில் காதலித்து வந்துள்ளனர்.

அந்நிலையில் செவ்வாய்க்கிழமை இளைஞன், யுவதியை திருமணம் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், வீட்டை விட்டு வெளியேறி தன்னுடன் வருமாறும் கூறியுள்ளார், அதுமட்டுமின்றி வீட்டில் இருந்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை எடுத்து வருமாறும் கூறியுள்ளார்.

இளைஞனின் ஆசை வார்த்தையை நம்பிய யுவதி, தன்னுடைய சங்கிலி உள்ளிட்ட சொற்ப நகைகளையும், 40 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் எடுத்துக்கொண்டு நேற்று காலை இளைஞன் கூறிய இடத்திற்கு வந்துள்ளார்.

அங்கிருந்து இளைஞன் அந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் ஐஸ்கிறீம் கடை ஒன்றுக்கு அழைத்து சென்றுள்ளார்.

அதன்பின்னர் காலை 10 மணியளவில் இளைஞன் யுவதியை தன்னுடைய தாய்க்கு அறிமுகம் செய்து வைப்பதாக , வடமராட்சி திக்கம் பகுதிக்கு அழைத்து சென்றுள்ளார்.

அங்கு ஆள் நடமாட்டம் அற்ற பகுதி ஒன்றுக்கு யுவதியை அழைத்து சென்று ஆசை வார்த்தைகளை கூறி உறவு கொண்டுள்ளார். பின்னர், தண்ணீர் வாங்கி வருவதாக கூறி அவ்விடத்தில் யுவதியை தனியே விட்டு விட்டு சென்றுள்ளார்.

இளைஞன் சென்று சில நிமிடங்களில் மூன்று இளைஞர்கள் அவ்விடத்திற்கு சென்று யுவதியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளனர்.

பின்னர் யுவதியிடமிருந்த 40 ஆயிரம் ரூபாய் பணம், நகைகள், தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்த பின்னர், யுவதியை அழைத்து வந்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்று யுவதியின் கிராமத்திற்கு அருகிலுள்ள வீதியில் இறக்கி விட்டு தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் யுவதியினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் இடம்பெற்ற பகுதி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியென்பதால் முறைப்பாட்டை நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய துன்னாலை பகுதியை சேர்ந்த நான்கு இளைஞர்களை அடையாளம் கண்டுள்ளனர்.



# யாழில் விடுதலைப்பொங்கல்

**யாழ். விசேட நிருபர்**

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி விடுதலைப் பொங்கல் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முற்றவெளியில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.

"உலகெங்கும் வாழும் தமிழர்கள் தைப்பொங்கல் திருநாளை கொண்டாடவிருக்கின்ற வேளையிலேயே தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் இரத்தக்கண்ணீர் வடித்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும், இந்த விடுதலைப் பொங்கல் ஏற்பாடு செய்யப்பட்டதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் தெரிவித்தார். அத்துடன், அரசியல் கைதிகளின் உறவுகள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். கடந்த காலத்தில் ஒருசில அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட்டு அவை பெரியளவில் காட்டப்பட்டன. ஆனால் அதற்குப் பின்னர் எதுவும் நடக்கவில்லை .

கடந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை புதிய ஆண்டிலாவது இடம்பெற வேண்டும் என்றார்.

# தைப்பொங்கல் சிறப்புமலர்



# தமிழர் வாழ்வில் நிலைத்து நிற்கும் சூரிய வழிபாட்டு பாரம்பரியம்

இந்துக்களின் தனிப் பெரும் பண்டிகை தைப்பொங்கல்ஆகும்.தைப்பொங்கல் பண்டிகை பொங்கல் திருநாள், உழவர் திருநாள் அறுவடைத் திருநாள் எனவும் கூறப்படுகின்றது.

எமது சமய நூல்கள் தைப்பொங்கல் திருநாளை மகர சங்கராந்தி என்றும் கூறுகின்றன. சூரியன் தெற்கிலிருந்து வடக்காக பூமத்திய ரேகையை கடக்கும் போது தனு ராசியிலிருந்து மகர ராசிக்கு இடம்பெயர்வு இடம்பெறுகின்றது. இந்த இடப்பெயர்ச்சியே மகர சங்கராந்தி எனப்படும். இதனை உத்தராயண சங்கராந்தி எனவும் கூறுதல் வழக்கம். உத்தரம் – வடக்கு அயனம் செல்லல். எனவே சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலத் தொடக்கத்தினை உத்தராயண சங்கராந்தி ஆகும். தை தொடக்கம் உழவர்களுக்கு சாதகமானதாக அதாவது அறுவடைக்கு ஏற்ற கால ஆரம்பமாக அமைவதனால் முதல் நாளினை பண்டிகை திருநாளாக இந்துக்கள் வழக்கப்படுத்திக்கொண்டனர்.

சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் தை மாதம் முதலாம் திகதியாகிய பொங்கல் தினத்தில் இந்துக்கள் அதிகாலையில் துயில் எழுந்து நீராடி புத்தரியில் பொங்கலிட்டு விசேட சமய வழிபாடுகளில் ஈடுபடுவர்.

தமிழ் மொழியானது சூரியக் கடவுளிடமிருந்து தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. இதன் பின்னர் முருகக் கடவுள் அகத்தியருக்கு அருளச் செய்தார். சிவபெருமான் தமிழை அகத்தியருக்கு சொன்னார். இந்த மரபு ரீதியான 2 புரான தத்துவப்படி முருகன், சிவன் என்னும் பெயர்கள் ஞாயிற்றுக் கடவுளை (சூரியன்) குறிக்க வழங்கிய பெயர்கள் என அறிய முடிகின்றது.

தமிழ்மொழி சிவனோடும் முருகனோடும் சைவத்தோடும் பிரிக்க முடியாத தொடர்பினை கொண்டது எனலாம்.

தமிழ் மாதங்களில் மார்கழியும் தையும் ஹேமந்தருது என அழைக்கப்படுவது இதில் தை மாதத்திற்கு ஒரு தனி சிறப்புண்டு. இது சூரியனை மையப்படுத்தி கணக்கிடப்படும் ஆண்டின் முதல் தொடக்கம்.

இந்த உலகத்தில் உயிரினம் வாழ சூரிய ஒளி மூலப் பொருளாக உள்ளது. கதிரவன் இவ்வுலகை காக்கின்றான். "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" என்று சங்க நூல் பத்துப்பாட்டில் முதல்பாட்டு அமைந்திருப்பது நோக்கத்தக்கதாகும். மேலும் ஆதி சங்கரர் வகுத்த சண்மதங்களில் சௌரம் – சூரிய வழிபாடு ஒன்றாக விளக்குகின்றது.

உழவனால் அறுவடை செய்துகொண்டு வரப்பட்ட புத்தரிசியுடன் புதிதாக விளைந்த கரும்பு மூலம் பெறப்பட்ட பாணியையும் பயறு மற்றும் மரமுந்திரிகை விதைகளையும் சேர்த்து பால் ஊற்றி தயாரித்த பொங்கலையும் செய்கரும்பையும் மங்களம் தரும் மஞ்சள் கிழங்குடன் கதிரவனுக்கு படைப்பது பொங்கல் நாளின் சிறப்பம்சமாகும்.

சூரிய வம்சத்தில் இராமனாய் அவதரித்தபோது சூரிய வழிபாடு செய்த மஹா விஷ்ணு தன் அடுத்த அவதாரமான கிருஷ்ணவதாரத்திலும் சூரியனை வணங்கி அதன் சிறப்பினை உலக மாந்தருக்கு எடுத்தியம்பியுள்ளார். மந்திரங்களில் உயர்ந்தது காயத்திரி மந்திரம். அந்த மந்திரமும் சூரிய பகவானைத் தான் போற்றுகின்றது. இந்த மந்திரம் விசுவாமித்திர முனிவரால் தை முதல் நாளில் எடுத்துச் சொல்லப்பட்டதாக புராண செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

கதிரவனை வணங்கும் வழக்கம் புராண காலம் முதலாக இருந்து வந்துள்ளது. சூரிய வழிபாடு ரித் வேதத்தில் தோன்றியதாக புராணங்களும் கூறுகின்றன.

இன்று ஆரம்பமாகும் உத்தராயண காலம் ஒரு புண்ணிய காலமாகும் இது தேவர்களுக்கு பகல் பொழுதாகவும் கருதப்படுகின்றது. பாரதப் போரில் மரணப்படுக்கையிலிருந்த பீஷ்மர் உத்தராயணத்தில் உயிர் பிரிய வேண்டும் என்று விருப்பப்பட்டு இக்காலத்தில் உயிர் நீத்து மோசமடைந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

தைப்பொங்கல் பண்டிகை என்பது ஏனைய பண்டிகைகள் போன்று அமையாது எமது உயிர்வாழ்வில் உதவி செய்த அத்தனை ஜீவராசிகளையும் நினைத்து நன்றி செலுத்தும் திருநாளாகவே அமைந்துள்ளது. தமிழர்களின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்வது பொங்கல் பண்டிகை. உழைப்பின் உயர்வை மதிக்கும் நாளும் இதுவேயாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு "சோறும் தண்ணீரும் இரு மருந்தெனப்படும்" எனக் கூறுகின்றது. இதனுடன் இணைந்ததாக 'தீப்பசி மாக் கட்டுச் செழுஞ்சோற்றுப் பாத்திரமேந்திய பாவை' என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது.

இதிலிருந்து தமிழர்களின் முக்கிய உணவாக அரிசிச் சோறே இருந்து வந்துள்ளது எனலாம்.

இதனை உற்பத்தி செய்யும் உழவர்கள் வாழ்வு வளமுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவுமே அக்காலத்தில் இருந்திருக்கின்றது. அன்று விவசாயிகள் இயற்கையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டனர். இயற்கை பொய்க்கவில்லை. உணவு உற்பத்தியில் தமிழர்களே சரித்திம் படைத்துள்ளனர் என்பது வரலாற்று உண்மை. இதனுடன் இணைந்ததாக பண்டிகைகளை செம்மையாக மகிழ்வுற கொண்டாடிய பெருமையும், இந்து ஆலயங்களை வானுயர கட்டி அழகுபார்த்த பெருமையும் தமிழினத்தையே சாரும். இன்று இவை எல்லாம் வரலாற்று நிகழ்வாக பதிவுகளாக மாறி வருவது கவலை தரு விடயம் எனலாம்.

பண்டிகை என்னும்போது மக்களின் ஒன்றுகூடலும் வீரதீர விளையாட்டுகள் காதல் களிப்பூட்டும் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

எனவே பொங்கல் தினத்தில் பழையதனை அழித்தொழித்தது தீய எண்ணங்களை போக்கி மங்களமும் சௌபாக்கியமும் பொங்க உறுதிபூண வேண்டும் என்பது பெரியோர் வாக்கு, பொங்கலோ பொங்கல் நாட்டுக்கும் மக்களுக்கும் வளங்களை கொண்டுவரட்டும்.

**ஆர். நடராஜன் ...**
(பனங்காடு தினகரன் நிருபர்)

# நல்லுறவுக்கான பாலமாக திகழும் பொங்கல் பண்டிகை

தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாள் பிறந்ததும் 'தைப்பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். இலங்கை உட்பட உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் முக்கிய திருநாள் தைப் பொங்கலாகும்.

மார்கழி மாதம் பிறந்து 30 நாட்கள் முடிந்த பின்னர் மறுநாள் தை மாதம் பிறக்கின்றது. தமிழர்களின் முக்கியமான திருநாளில் தைமாதம் முதல் இடத்தைப் பிடிப்பதோடு, முழுக்க முழுக்க இது சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகவே கருதப்பட்டு வருகின்றது. சோதிட ரீதியாக பார்க்கும் போது சூரிய பகவான் புதிய ராசியில் பிரவேசித்தல் தைத்திருநாளின் முக்கியத்துவம் என்று கூறப்படுகின்றது.

உலகத்திலுள்ள மக்களின் அன்றாட தேவைகளுள் உணவு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. உலகிலுள்ள ஜீவராசிகளின் தேவையும் உணவாக இருக்கின்றது. எமது மக்கள் உயிர் வாழ்வதற்கு நெல் அரிசிச்சோறு தேவைப்படுகின்றது. இதன் நிமித்தம் உழவன் என்பவன் தன் உடம்பை வருத்தி உலக மக்களுக்கு உணவை வழங்குகின்றான். எனவே தைத்திருநாளை உழவர் திருநாள் என்றும் கூறலாம். உழவன் என்பவன் இல்லை என்றால் உலகமே பட்டினியாகும். அந்த விவசாயம் செழிக்க இயற்கை ஒத்துழைக்க வேண்டும். இயற்கை என்னும் போது சூரியபகவான் ஒளியூட்ட வேண்டும்.

வீடுகளில், ஆலயங்களில் 30 நாட்கள் மார்கழிக் கோலம் போடுவார்கள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நீராடிய பெண்கள் வீட்டு வாசலில், ஆலயங்களில் இந்த மாக்கோலத்தைப் போடுவார்கள். அந்த கோலத்தின் நடுவில் பசுவின் சாணம் கொண்டு பிள்ளையார் செய்து அதன் மேல் மலர் ஒன்றும் வைத்து பூஜை செய்யப்படும்.

அதாவது தூபதீபம் காட்டி சூரியனுக்கு காட்டப்படும். இது 30 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும். முப்பதாவது நாளில் சாணம் மூலம் செய்யப்பட்ட முப்பது பிள்ளையார் உருவங்கள் காணப்படும். தை பிறக்கும் நாளன்று இந்து வீடுகளில் அதிகாலையிலேயே துயில் எழுந்து விடுவார்கள். அதிகாலையில் ஐந்து மணியளவில் பசுவின் சாணத்தைப் பெற்று வீட்டின் முன் வாயிலில் பரவலாக பூசப்பட்டு செப்பனிடப்படும். அதன் மீது புள்ளிக்கோலத்தைப் போடுவார்கள்.

தைத்தினத்தன்று பொதுவாக புள்ளிக் கோலம் இடுவது வழக்கமாகி வருகின்றது. கோலம் இடுவது ஊர்வன, எறும்பு போன்றவைகளும் உணவு பெற்றுக் கொள்வதற்கு வழியாகும். வீட்டில் கோலத்தைச் சுற்றி நான்கு புறங்களிலும் கரும்பு போன்றவற்றை நிறுத்தி அதில் மாவிலை, தோரணம் போன்றவற்றைத் தொங்க விடுவார்கள். பின்னர் நிறைகுடம், இரு மருங்கிலும் மங்கள விளக்கு போன்றவைகளும் அங்கு வைக்கப்படும்.

சூரியன் உதயமாகிக் கொண்டு இருக்கும் போதே பொங்கல் பானை அடுப்பில் ஏற்றப்படும். இந்த பொங்கல் அரிசி, பயறு, சீனி, சர்க்கரை, நெய் போன்றவை சேர்க்கப்பட்டு பாற்சோறாக முழுமை பெறும். இந்த சர்க்கரைப் பொங்கல் தயார் செய்யப்பட்டு படையல் செய்யப்படும். அந்த படையலுடன் பழவகைகளும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். அதிகாலையில் சூரிய உதய வெளிச்சத்தைக் காணும் போது தீபாராதனை காட்டப்படும். அன்று எல்லோரும் சூரிய பகவானை அந்த இயற்கைக் கடவுளை நன்றியோடு வணங்குவார்கள். இந்நிகழ்வை சூரிய பகவானுக்குரிய திருவிழா என்றே கூற வேண்டும். அதே நேரம் உலகிற்கு ஒளியூட்டுபவன் என்ற வகையில் உலகில் வாழும் இந்துக்களால் வணங்கப்படும் தெய்வம் என்றே கூறலாம். உழவர்களின் முக்கிய திருவிழாவாக இது கொண்டாடப்படுவதுடன் உழவர்களினால் சேர்த்து வைக்கப்பட்ட புத்தரிசி இட்டு புது மண்பானை வாங்கப்பட்டு பொங்கலிடப்படும். இதன் போது வயலிலும் பொங்கல் வைப்பார்கள்.

வயல்களில் நெல் அறுவடையின் போது நெல்லானது மனிதனுக்கும் வைக்கோலானது பசுவிற்கும் போய்ச் சேருகின்றது. நிலமும் ஏங்கக் கூடாது அதனாலேயே நெல்லின் அடிப்பாகம் நிலத்தோடு காணப்படுகின்றது. இது வரலாற்று ரீதியாக பேசப்பட்டு வருகின்றது. தைத்திருநாளன்று படைக்கப்பட்ட பண்டங்கள் அயல் வீட்டுக்காரர்களுக்கும் வழங்கப்படுகின்றன. மற்றையோரும் வந்து தங்களின் வீடுகளிலும் இந்த உணவை உண்பார்கள். இப்படியாக சொந்தங்கள் வந்து உணவைப் பரிமாறிக் கொள்வார்கள். அன்று சைவ உணவு என்பதுடன் தமது குடும்பம் சகிதம் கோவிலுக்குச் செல்வது இந்துக்களின் முக்கிய கடமையாகும். புதிய ஆடை தரித்து அர்ச்சனைத் தட்டுக்களுடன் குடும்பம் சகிதம் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கும். அன்றைய தினம் நாட்டின் இந்துக் கோவில்களில் விஷேட பூஜைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்.



தைப்பிறந்து மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவார்கள். அதாவது இந்து மக்கள் தாய்க்கு அடுத்தபடியாக பசுவை ஏற்றுக் கொள்கின்றார்கள். இதனால் தான் 'கோமாதா என் குலமாதா' என்கின்றோம். ஆகவே இந்து மக்கள் அதை தாய்க்கு நிகராக ஏற்றுக் கொள்கின்றார்கள். எமது நாட்டைப் பொறுத்தவரை கிராமங்களுக்குக் கிராமம் இந்தத் திருவிழா வித்தியாசப்படும்.தமிழ்நாட்டின் சில கிராமங்களில் 'போகிப்பண்டிகை' என்று கொண்டாடுவார்கள்.

தைப்பொங்கலுக்கு முதல்நாள் இது இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினத்தில் சில இடங்களில் பழைய புடவை எரித்தலும் மற்றும் சில இடங்களில் மறைந்த தமது முன்னோர்களின்ஆத்மசாந்திக்காகவும் இது கொண்டாடப்படுகின்றது. இதை தென்புல வழிபாடு என்று குறிப்பிடுகின்றனர்.

**சாமஸ்ரீ க.மகாதேவன் ...**
உடப்பூர்

தைப்பொங்கல் சிறப்பு மலர்

# நன்றி மறவாத நற்பண்பின் அடையாளம் தைத்திருநாள்

பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை பொங்கல் பண்டிகை, உழவர் திருநாள், உழைப்பின் உயர்வை எடுத்துக் கூறும் திருநாள், அறுவடைத் திருநாள் என்றெல்லாம் போற்றுவர். தை மாதம் முதலாந் திகதி பொங்கற் பண்டிகை நாளாகும்.

தமிழ் மக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் மிகச் சிறந்து விளங்குவது தைப் பொங்கல் பண்டிகையாகும். தேவைகளை நிறைவேற்ற உழைப்புத் தேவை. அவ்வுழைப்பின் உயர்வை எடுத்துக் காட்டும் பண்டிகையாகவும் பொங்கல் பண்டிகை அமைகிறது.

தேவைகளுள் அடிப்படையான தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்பர். அவற்றில் எல்லாம் தலையாயதும் அதி அத்தியாவசியமுமானதும் உணவுத் தேவையேயாகும். அவ்வுணவை உற்பத்தி செய்யும் உழவர் திருநாளாக உழைப்பின் திருநாளாக இப்பண்டிகை போற்றப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கு உதவிய இயற்கை சக்திகளுக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா இது. உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப் பொங்கல் ஆகும். நிலமும், விதையும், மாடும் மட்டும் இருந்து விட்டால் விவசாயம் செய்து விட முடியாது. நீரும் வெயிலும் இன்றியமையாதவை. ஐ அந்த நீரைத் தருவது மழை. ஆனால் அந்த மழையைத் தருவது சூரியனே. ஆறு, குளம், கடல் போன்ற நீர் நிலைகளிலுள்ள நீரை ஆவியாக்கி மேலெழச் செய்து அங்கிருந்து மழையாகப் பெய்யச் செய்து வளம் தருபவன் சூரியனே. இதனை உணர்ந்த மக்கள், அச்சூரியதேவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நாளாகப் பொங்கலிட்டு வழிபாடு செய்யும் நாளாக இப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள்.



> *மக்கள் உள்ளங்களில் தீய எண்ணங்கள் போக்கப்பட வேண்டுமென்பதனாலேயே போகிப் பண்டிகை (போக்கி) என்ற பெயர் வந்தது*

பண்டிகைகள் ஒரு இனத்தின் கலாசார மேம்பாட்டைப் புலப்படுத்துவன. அவற்றைப் பேணிக் காப்பன என்றும் கூறலாம். அவற்றில் ஒரு சமுக நோக்கு இருப்பதையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்திர விழா என்ற பெயரில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் இந்திரனை ஆயர்கள் வழிபட்டு வந்தனர். ஆகவே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அறிவுரைப்படி ஆயர்களுக்கும் அவர்தம் ஆநிரைகளுக்கும் வளங்கள் தரும் கோவர்த்தன மலைக்கு ஆயர்கள் மரியாதை செய்தனர்.

இதனால் கோபமுற்ற இந்திரன் புயலாலும், மழையாலும் ஆயர்களை துன்புறுத்தினான். கோவர்த்தன மலையை குடையாய் பிடித்து இந்திரனிடமிருந்து ஆயர்களையும் அவர் தம் ஆநிரைகளையும் ஸ்ரீ கிருஷ்ணர் காத்தருளினார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கோவர்த்தன மலையை குடையாய் பிடித்து இந்திரனிடமிருந்து ஆயர்களையும் அவர் தம் ஆநிரைகளையும் காத்த நாளே சூரிய நாராயண பூஜையாகும். இந்திரன் தன் தவறை உணர்ந்து கண்ணனிடம் தன்னையும் மக்கள் வழிபட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதால் தை 1ம் நாள் முன்தினம் இந்திர வழிபாட்டை (போகி பண்டிகை) ஆயர்கள் கொண்டாடினர். தை 1ம் நாள்சூரியபகவானை சூரியநாராயணராக பாவித்து வழிபட்டனர். அதன் மறுநாள் தங்களின் ஆநிரைகளுக்கு விழா (மாட்டுப்பொங்கல்) எடுத்து தங்களின் உணவுகளை அவைகளுக்கு படைத்தும், காளைகளுடன் விளையாடியும் (ஜல்லிக்கட்டு) விழாவை கொண்டாடினர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் கொண்டாட்டமாக மாறியது. பொங்கல் பண்டிகையைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் விவசாயம் சம்பந்தப்பட்டதாகவே இருந்து வருகிறது. பொங்கல்

கே.பைரவன் ...✍
மன்னம்பிட்டி

விழா சில இடங்களில் நான்கு நாட்களாக கொண்டாடப்படுகிறது. போகி, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும்பொங்கல்.

போகி தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று அதாவது பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுவதாகும். இந்நாள் பழையவற்றையும் உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது. பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிகையைப் 'போக்கி' என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி 'போகி' என்றாகி விட்டது.

அன்றைய தினம் வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள் தேவையற்றபொருட்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும்.

வீடு மட்டுமல்ல மனதில் இருக்கும் தீய எண்ணங்களும் தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும். இதையொட்டியே பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகுபடுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப்படும். இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும். பொங்கல் திருநாளைத் தொடர்ந்து வரும் மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இது பட்டிப் பொங்கல் என அழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காக பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

**'நன்றிமறப்பது நன்றன்று'** என்றும் **'எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றிகொன்றமகற்கு'** என்று வள்ளுவர் கூறும் வாக்கைத் தம்முடைய வாழ்க்கை நெறியாகக் கடைப்பி டித்தொழுகும் தமிழ் மக்கள் தமது உழவுத் தொழிலுக்கு உதவி புரிவதோடு உரமும் தந்து உதவும் மாடுகளுக்கும் தைப்பொங்கலுக்கு மறுநாள் பொங்கலிட்டு வழிபட்டு மகிழ்வதைக் காண்கின்றோம். சூரியதேவனுக்கு முதலிடமும் மாடுகளுக்கு இரண்டாம் இடமும் கொடுத்து அடுத்து வரும் இருநாட்களில் தைப்பொங்கலும் மாட்டுப்பொங்கலும் கொண்டாடப்படுவது இப்பண்டிகைகள் நன்றிக் கடனாகவே கொண்டாடப்படுவதை மேலும் வலியுறுத்துகின்றன.



# உணவும் நீரும் தருகின்ற கதிரவனை தெய்வமாக கருதிய எமது முன்னோர்

சூரிய பகவான் தெட்சாயணம் என அழைக்கப்படும் தனது தென்திசைப் பயணத்தை மாற்றி உத்தராயணம் எனும் வடதிசைப் பயணத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கும் முதல் நாள் தைப்பொங்கல் திருநாளாகும். உத்தராயண காலம் தேவர்களின் பகற் பொழுதாகவும் மிக உயர்ந்த புண்ணிய காலமாகவும் கருதப்படுகிறது. இதன் காரணமாகத்தான் தேவர்களில் உயர்ந்தவனும், பகற்பொழுது தோன்றுவதற்குக் காரணனுமாகவுள்ள கதிரவனுக்குப் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடுவதை எமது முன்னோர் வழக்கமாகிக் கொண்டனர்.



ஆடி மாதத்தில் நெல் விதைப்பில் ஈடுபட்ட உழவர் பெருமக்கள் மார்கழி மாத முடிவில் நெல்லை அறுவடை செய்கின்றனர். வயலில் நெல்மணிகளை விளையச் செய்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்துவதற்காக தை முதலாம் நாளில் வீட்டிலே பூரண கும்பம் வைத்து, மங்களவிளக்கேற்றிப் புதிதாக அறுவடை செய்த நெல்மணிகளிலிருந்து பெறப்பட்ட அரிசியில் பொங்கல் பொங்கி வழிபடுவது தொன்று தொட்டு நிலவி வரும் மரபு. நாம் உயிர் வாழ்வதற்குச் சோறும், நீரும் மிக முக்கியம் .இந்த இரண்டையும் தருகின்ற சூரியபகவானை எமது முன்னோர்கள் தெய்வமாகவே கண்டனர்.

தமிழர்களின் தனித்துவ பண்டிகையான தைப்பொங்கலுக்குச் சிலநாட்களுக்கு முன்னரே கிராமங்களில் பொங்கல் பண்டிகை களைகட்ட ஆரம்பித்து விடும். வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை மக்கள் துப்புரவு செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பொங்கல் திருநாளுக்குத் தேவையான புதுப்பானை உட்படப் பொங்கலுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவர்.

தைப்பொங்கலன்று அதிகாலை எழுந்து தலைமுழுகி நீராடி வீட்டு முற்றத்தில் சாணத்தால் மெழுகி கோலமிடுவர். வாழை, மகர தோரணங்கள், மாவிலைகள் போன்ற மங்களப் பொருட்களால் வீட்டை அலங்காரம் செய்வர். கோலத்தின் நடுவே மூன்று கல் வைத்து அதன் மேல் நீர்வார்த்த புதுப்பானை வைப்பார்கள். புதுப்பானையில் கழுத்தில் மூன்று அல்லது ஐந்து மாவிலைகள் கட்டுவார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் சூரிய பகவானுக்கு வணக்கம் செலுத்தியவாறு இரு கைகளாலும் புத்தரிசியைக் கோலி அள்ளிப் புதுப்பானையில் இடுவர். அதன் பின்னர் பால், பயறு, சர்க்கரை,தேன், முந்திரி வற்றல் முதலியன கலந்து பொங்கலிடுவார்கள். பொங்கல் பொங்கி வர சிறுவர்கள் வெடி கொளுத்தி மகிழ்வார்கள்.

கரும்பு, இஞ்சி, மஞ்சள் போன்றவையும் பொங்கல் பண்டிகையில் பங்குபெறுகின்றன. வாழ்க்கை இனிமை நிறைந்ததாக அமைய வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக சர்க்கரை பொங்கலுடன் கலக்கிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கு எம்மத்தியில் பல்வேறு பொருள்கள் கொள்ளப்பட்டாலும் இந்த முதுமொழிக்குப் பொருத்தமான காரணமொன்றுமுள்ளது. நல்ல கணவர் தமக்கு வாழ்க்கைத் துணையாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கும் கன்னிப் பெண்களுக்குத் தை பிறந்த பின்னரே சுப செய்திகள் தேடி வரும் என்பதுவும், வெற்றிகரமான அறுவடை அமைய வேண்டும் என எதிர்பார்க்கும் உழவனுக்குத் தை பிறந்த பின்னரே அறுவடை அமையும் என்பதாலும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' எனவும் கொள்ளப்படுகிறது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது மக்கள் புலவன் மகாகவி பாரதியாரின் பொன் வாக்கு. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தக் கஷ்டப்பட்டு உழைக்கும் தமிழர்கள் தமது உழைப்பிற்கு உறுதுணையாக அமைந்த சூரியபகவான், பூமி முதலான இயற்கைச் சக்திகளுக்கும், தம்மோடு சேர்ந்து உழைக்கும் கால்நடைகளுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் விதமாகவே தை மாதம் முதலாம் நாளில் காலம் காலமாகப் பொங்கல் பொங்கி வழிபாடாற்றி வந்துள்ளதாக அறிய முடிகிறது. இதன் மூலம் தமிழ்மக்களின் தொன்மை மரபாக நன்றியுணர்வு இருந்து வந்துள்ளமையும் தமிழர்களின் தனித்துவத்திற்குத் தக்க சான்று.

தைத்திருநாள் தமிழ்மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும்,பாரம்பரிய சம்பிரதாயங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் ஒரு பண்டிகை. தமிழ்மக்களின் பண்பாட்டின் செழுமைக்கு உறுதுணையான திருநாள்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நன்னாள். கணனி யுகமான தற்காலத்தில் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடும் முறைகளில் பல இடங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கிராமங்களில் மண் வாசனை மாறாத பொங்கல் பண்டிகை இன்று வரை கொண்டாடப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

மனித மனங்களில் தீய எண்ணங்கள் நிறைந்திருந்தால் மனிதனால் துன்பத்தைத் தவிர இன்பத்தை அனுபவிக்க முடியாது.

எம்.பாலகிருஷ்ணன் ...✍
யாழ்ப்பாணம்



# உழவர் பெருமக்களின் பெருமைமிகு கலாசாரம்



தைப்பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. பொங்கல் என்பதற்கு பொங்கல் ஆகாரம் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வந்தது இந்தப் பண்டிகை ஒன்று ஒரு கூற்று உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப்படுகிறது என்று இன்னொரு கூற்றும் உள்ளது. சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு 'புதியீடு' என்று பெயர் இருந்தது. அதாவது ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில் அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

> *விவசாயத்துக்கு துணை புரியும் அனைத்துக்கும் நன்றி கூறுவது தமிழர் மரபு*

பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை,சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல்வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று அதிகாலையில் அனைவரும் எழுந்து குளித்து வீட்டில் உள்ள தேவையற்ற பழையை பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டுக் கொளுத்துவார்கள்.

'அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

2 வது நாளான பொங்கல் விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி புதுப் பாலில் புது அரிசியிட்டு வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள்.

வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து பொங்கி வரும் போது பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும் நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

3வது நாள் விழா மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கல் விமரிசையாக கொண்டாடப்படும். வீடுகள் புதுப் பூச்சு காணும். மாடுகள் பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூச்சி நன்கு குளிப்பாட்டி அவற்றை அலங்காரம் செய்து மாட்டுப் பொங்கல் தினத்தின் போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள். பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. இத்தினத்தின் போது மாடுகளுக்கு ஒரு வேலையும் தர மாட்டார்கள். கழுத்தில் புது மணி கட்டி கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். இந்த இடத்தில்தான் ஜல்லிக்கட்டு தோன்றியிருக்கிறது. மாட்டுப் பொங்கலின் போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

நான்காவது நாள் காணும் பொங்கலாக கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார் உறவினர் நண்பர்களைக் கண்டு வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும் பொழுதுபோக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம்.

ஆர்.மகேஸ்வரன் ...✍
நூலகர், பேராதனை பல்கலைக்கழகம்


சுபீட்சத்தின் பாதைப் புரட்சி
அத்துகல்புர நுழைவு
மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டம்
மீரிகம தொடக்கம் குருணாகல் வரையான பகுதி
நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர்
ஆர்.டபிள்யூ.ஆர். பேமசிறி அவர்களின்
அழைப்பில்
நெடுஞ்சாலைகள் அமைச்சர்
கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவர்கள்
மற்றும்
கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்
கௌரவ நிமல் லன்சா அவர்களின்
பங்கேற்புடன்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர்
கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்
மற்றும்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி
அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின்
தலைமையில்
2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பி.ப. 4.00க்கு மீரிகமவில் மக்கள் உரிமையாக்கப்படவுள்ளது. அன்றைய தினம் பி.ப. 5.00க்கு குருணாகல் யக்கபிட்டியவில் மக்கள் சந்திப்பு இடம்பெறும்.
• இரண்டாம் கட்ட தூரம் 40.91 கி.மீ. • பாதை 04 • நிர்மாணச் செலவு – 149 மில்லியன் ரூபா
• 5 இடைமாற்று நிலையங்கள் (மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருணாகல், யக்கபிட்டிய)
• உள்நாட்டு ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
MINISTRY OF HIGHWAYS
Road Development Authority
State Ministry of Rural Roads & Other Infrastructure

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற அரச அதிகாரிகள் முன்வர வேண்டும்

## திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்

(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)



சேவையை நாடிவரும் மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைப்பதற்கு முடியுமான முயற்சிகளை மேற்கொள்ள, அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன்தர்சன பாடிகோராள தெரிவித்தார்.

பட்டதாரி பயிலுனர்களாக நியமிக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்றுக்கான நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (12) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், அரச சேவையில் நியமனம் என்பது எல்லோருக்கும் கிடைக்கப் பெறாத ஒரு விடயமாக காணப்படுகின்றது. கிடைக்கப் பெற்ற நியமனத்தை சரியாகவும் நேர்த்தியாகவும் மேற்கொள்ளல் வேண்டும். மக்களுக்கு அவசியமான ஒரு சேவையாக அரச சேவையை மாற்றியமைக்க வேண்டும். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்படும் தாங்கள் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்து அவற்றை சிறப்பான திட்டங்களாக மாற்றியமைக்க ஆவண செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்திற்கு என மொத்தமாக 84 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கின் குரல்



டெங்கு நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் முகமாக விசேட வேலைத்திட்டம் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இடம்பெற்று வருகிறது. அந்த வகையில் கல்குடா,கண்ணகிபுரம் மற்றும் மீராவோடை போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள குடியிருப்பாளர்களின் வீடுகள் அடையாளப்படுத்தப்பட்டு களப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது.

படம்; பாசிக்குடா நிருபர்



ஓட்டமாவடி பாத்திமா பாலிகா தேசிய பாடசாலை மாணவிகளுக்கு "பைசர்" தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை (11) ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், பல் வைத்திய நிபுணர் திருமதி ஏ.எல். ஹஸீனா, பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

படம்; கல்குடா தினகரன் நிருபர்

## மாணிக்கமடுவில் பொங்கல் பொதிகள் வழங்கி வைப்பு

காரைதீவு குறூப் நிருபர்

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இறக்காமம் , மாணிக்கமடு கிராமத்தில் வசதி குறைந்த மக்களுக்கு, பொங்கல் பொங்குவதற்கான புத்தரிசி தொடக்கம் சட்டி, பானை வரையிலான பொங்கல்பொதிகள் வியாழக்கிழமை (13) இலவசமாக வழங்கப்பட்டன.

கனடாவைச் சேர்ந்த கிருஷேந்திரா பேரின்பமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு, தமிழுக்கும் சைவத்திற்கும் தமது குடும்பத்தினால் இந்த உதவி வழங்கப்படுகின்றது. தைத்திருநாளுக்கான தமிழர்களுடைய கலை, கலாசாரம் பாரம்பரியங்களை வசதிகுறைந்த மக்களும் கொண்டாடும் வகையில் இந்த உதவி வழங்கப்பட்டது. இதனை காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரும், சமூக சேவையாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் வழங்கி வருகிறார்.

அம்பாறை மாவட்டத்தில் மிகவும் வறுமையில் இருக்கக்கூடிய குடும்பங்களுக்கு, தங்களுடைய குடும்ப நினைவு தினத்தையும் பொங்கலையும் சிறப்பிக்கும் முகமாகவும் 100 குடும்பங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் பரவலாக இந்த அரிசி பானை பொங்கலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அவர்களுடைய குடும்பம் சார் உறவுகள் வழங்கி இருக்கின்றார்கள்.

### தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில்

## பேராசிரியர் அல்லாமா உவைஸிற்கான நூற்றாண்டு விழாவும் நினைவு மாநாடும்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேராசிரியர் அல்லாமா மா.மு.உவைஸிற்கான நூற்றாண்டு விழாவும் நினைவு மாநாடும், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெறவுள்ள இந்நிகழ்வின்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அளகப்பெரும மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் பிரபல்யம் மிக்க இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் தந்தை என போற்றப்படும் பேராசிரியர் அல்லாமா மஹ்மூத் முகம்மது உவைஸ் நினைவாக இடம்பெறும் இந்நிகழ்வின்போது, நினைவு முத்திரை வெளியீட்டு வைக்கப்படவுள்ளதோடு, நூற்றாண்டு 'மர்கஸி' ஞாபக மலரும் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின் ஆய்வு மாநாடு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, பேராசிரியர் அல்லாமா உவைஸ் பற்றியதான அறிமுக உரையினை நிகழ்த்தவுள்ளார்.

## மலைச்சாரல்



கண்டி மாநகர சபையின் தமிழ் உறுப்பினர்களால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா நேற்று காலை மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே, மாநகர மேயர் கேசர டி சேனநாயக்க ஆகியோர் தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# பிரவுண்ஸ்வீக், புளும்பீல்ட் தோட்ட குடியிருப்பில் 'தீ'

ஹற்றன் சுழற்சி நிருபர்



### ஒரு வீடு முழுமையாக சேதம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுண்ஸ்வீக் தோட்டம் புளும்பீல்ட் பிரிவில் தோட்ட குடியிருப்பில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 2 வீடுகள் கொண்ட குடியிருப்புகளில் ஒரு வீட்டிற்குள் ஏற்பட்ட தீயினால் குறித்த வீடு முற்றாக எரிந்துள்ளது.

தீ ஏற்பட்ட போது வீட்டில் யாரும் இல்லையெனவும், அயலவர்கள் கூச்சலிட்டதையடுத்து, ஏனையவர்கள் ஓடி வந்து மற்றயை வீட்டிற்க்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன. இதேவேளை இது தொடர்பாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்திற்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவயிடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருவதோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றது.

## தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாளாக அமைய வேண்டும்

தலவாக்கலை குறூப் நிருபர்



தைத் திருநாளாம் தைப்பொங்கல் கோலாகலமாக கொண்டாடும் அனைத்து இந்து பெரு மக்களுக்கும் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள தைத்திருநாள் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் பொங்கி வருகின்ற போது நாம் அனைவரும் சௌப்பாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்லுகின்றது. தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டும். மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனை பிராத்திப்போம். இன்றைய சூழ்நிலையில் கொவிட் 19 கொரோனா தொற்றிலிருந்து எம்மையும் எமது உறவினர்களையும் நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்றும் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

## இல்லங்களில் புது மகிழ்ச்சி பொங்கிட வேண்டும்

### செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்து



எமது மக்களின் இல்லங்களில் புது மகிழ்ச்சி பொங்கிடும் என்ற பெரு நம்பிக்கையோடு பிறந்திருக்கும் தைப்பொங்கல் திருநாளை அகம் மகிழ்ந்து வரவேற்போம் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உபத் தலைவரும் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், உழவர் திருநாள் என்றும் தமிழர் பெருநாள் என்றும் தைப் பொங்கல் தினத்தை கொண்டாடி வரும் எமது மக்கள் இயற்கையை வணங்கிய எமது முன்னோர்கள் வழி நின்று தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக காலந்தோறும் பாதுகாத்து வருகின்றனர். உலக வாழ் தமிழ் மக்கள் தொன்று தொட்டு மேற்கொண்டு வரும் மனிதன் சூரிய பகவான் மீதான வழிபாட்டின் வெளிப்பாடாக தைப் பொங்கல் இருந்து வருகின்றது. இந்த தை திருநாளில் தமிழ் மக்களுக்கும் நாட்டின் ஏனைய இன மக்களுக்கும் நாட்டிற்கும் சௌபாக்கியமும் மகிழ்ச்சியும் கிடைக்க எனது நல் வாழ்த்துக்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கண்டி புகையிரத நிலையத்தில் பதற்றம்; ஜன்னல்கள் உடைப்பு



எம்.ஏ.அமீனுல்லா

புகையிரத நிலைய அதிபர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக கண்டி பாதையில் புகையிரத சேவைகள் மேற்கொள்ளப்படாமையால் ஆத்திரமடைந்த மக்கள் நேற்று (13) காலை கண்டி புகையிரத நிலையத்தில் கலவரத்தில் ஈடுபட்டதால் ஜன்னல்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் பதுளை மற்றும் கண்டி பகுதிகளுக்கான அனைத்து ரயில்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தாக்குதலின் போது சுமார் 500 பேர் புகையிரத நிலையத்தில் திரண்டிருந்த நிலையில் அவர்களை கட்டுப்படுத்த கண்டி பொலிஸ் அதிகாரிகள் குழு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ்வாறு புகையிரத நிலையத்தில் திரண்டிருந்த இக்குழுவினரை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் மூலம் அவர்களது இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

# மத்திய மாகாணம் 2 - ஜனவரி 2022

## மின் பொறியியலாளர் பிரதேசம் : கினிகத்தேனை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மஸ்கெலிய

2022-01-30 08:00-17:00
**மொத்த மற்றும் விநியோகம்** : முர்ரே எஸ்டேட்
**விநியோகம்** : வன பங்களா, வல்லாடோலிட்

2022-01-30 12:00-16:00
**மொத்த மற்றும் விநியோகம்** : முர்ரே எஸ்டேட்
**விநியோகம்** : வன பங்களா, வல்லாடோலிட்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : நோட்டன்

2022-01-16 08:00-17:00
**விநியோகம்** : ஹகரபிட்டி ஆர்.இ., ஜம்புத்தேனா, கொல்ஹேனா, வாகமாமா ஆர்.இ.

2022-01-18 09:00-17:00
**மொத்த** : தியாகலா நீர் வாரியம், லோனார்ச் கிரீன் ஹவுஸ்
**மொத்த மற்றும் விநியோகம்** : லோனாச் எஸ்டேட்
**விநியோகம்** : அபாதீன், அர்சலினா, பென்னாச்சி II, டெஹிகாஸ்டென்னா, கலாவெல்டேனியா, மவுலானா சந்தி, டாப்லோ (காலனி), டாப்லோ ஆர்.இ.

2022-01-20 09:00-14:00
**மொத்த** : கூல்பான் தேயிலை தொழிற்சாலை
**விநியோகம்** : அபகமுவா எண் 2 கிதுல்கோட், அபகமுவா ஆர்.இ., கூல்பான் 2, நாகொல்ல ஆக்ரா ஓயா

2022-01-22 09:00-17:00
**மொத்த** : கூல்பான் தேயிலை தொழிற்சாலை, மாலிபன் ஆடை, புதிய திட்ட அலுவலகம் பிராட்லேண்ட் ஹோரசிங் திட்டம்
**விநியோகம்** : அபகமுவா எண் 2 கிதுல்கோட், அபகமுவா ஆர்.இ., அலகலா, பாகத்துலுவ, கருப்பு நீர், Black Water St. Clive Scheme, கூல்பான் 2, தாகம்பிட்டி, டயலொக் டெலிகாம், கினிகாதேனா ஏஜிஏ அலுவலகம், கினிகாதேனா டவுன், ஹோமகம பெரகொல்லா, கடவலவத்தா, கும்பல்மேதியா, மடிலா ஆர்.இ., நாகொல்ல ஆக்ரா, தொலைத் தொடர்பு ஜினிகாதேனா

2022-01-25 09:00-14:00
**மொத்த மற்றும் விநியோகம்** : கெனில்வொர்த் தேயிலை தொழிற்சாலை
**விநியோகம்** : பதுபோலரே, மில்லகாஹமுலா, பிடாவால சமன்புரா ஜனபாதய, ராம்படேனிய

2022-01-27 08:00-17:00
**விநியோகம்** : ஹகரபிட்டி ஆர்.இ., ஜம்புத்தேனா, கொல்ஹேனா, வாகமாமா ஆர்.இ.

2022-01-29 08:00-17:00
**விநியோகம்** : ஆஸ்போர்ன் வட்டா

## மின் பொறியியலாளர் பிரதேசம் : ஹங்குரங்கேத

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ரிகில்லகஸ்கட

2022-01-19 08:30-17:30
**மொத்த** : ஹபுகஸ்தெனிய மெட்டல் கிரஷர்
**விநியோகம்** : அகிரிய (டிக்கல்போட்டே), பம்பரகம, கன்னேவா நியூ (கோஸ்கஹதேபாலா), கன்னேவ உடகம, ஹபுகஸ்தேனியா, ஹபுகஸ்தெனிய கோலனி, மேக்கேம்பே (வாகாமா), மெடெரிபிட்டிய அகப்பலா, பள்ளேபோவாலா

2022-01-22 09:00-17:00
**விநியோகம்** : ஈஸ்ட்லநாடு முகலோயா, ரூக் வூட்

2022-01-25 08:30-17:30
**விநியோகம்** : மெடெரிபிட்டிய அகப்பலா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வலப்பனே

2022-01-18 09:00-17:00
**மொத்த** : பம்ப் ஹவுஸ் - ராகலா
**மொத்த மற்றும் விநியோகம்** : டெல்மர் எஸ்டேட், லிடெஸ்டேல் எஸ்டேட், ராகலா தொழிற்சாலை - i, செயின்ட் லியோனார்ட்ஸ் எஸ்டேட்
**விநியோகம்** : புருக்ஸைட் தொழிற்சாலை, டிக்சன் கார்னர், ஹல்க்ரானோயா, மடவத்த டவுன், மந்திரீதண்ணா, ராகலா டவுன் - பேருந்து நிலையம், ராகலா டவுன் - கிரிமண்டல சாலை, ராகலா டவுன் - நுவரலியா ஆர்.டி, சமகிபுரா, ஸ்டா∴போர்ட் தொழிற்சாலை

2022-01-20 09:00-17:00
**மொத்த** : சந்தனா மெட்டல் கிரஷர் அருகில், வாட்டர் போர்டு வெரெல்லா
**விநியோகம்** : அம்பானெல்லா, டப்பரே, எகோடகண்டா, கோரடியகொல்ல, கலகன்வத்தை, மல்லாகம, மீரியபெத்தா, மிரிஸ்வத்தா, நில்லாண்டஹின்னா சுடுவெல்ல, ரூபே நாயகலே, தேயிலை மாநிலம் - டப்பரே, தெரீஹா சமுர்த்தி வங்கி, தெரிபாஹா கல்கண்டவாலா, திபத்துகொட, உடமதுரா, வாலாஹிந்த இம்புலபதன திட்டம், வெலிஹிந்தா, வெரெல்லபதனா, வெவதென்ன, யாழ்கும்புரா

2022-01-22 08:30-17:30
**மொத்த மற்றும் விநியோகம்** : ப்ரெம்லி எஸ்டேட், எல்மா தொழிற்சாலை, உயர் வன தொழிற்சாலை, மஹாகூடகலா தொழிற்சாலை, மதுரதா தொழிற்சாலை
**விநியோகம்** : அல்மா தொழிற்சாலை, ஆப்பிள் பண்ணை, சேர்லி வாலி பிரிவு, கலாபோடா - துல்கொல்லா - i, க்ளென்டெவன் எஸ்டேட், கோனகலே (ரிகிலகஸ்கட இசிஎஸ்சி), உயர் வன பங்களா, உயர் பனி நகரம், லாரிஸ்டன், மஹாகூடகலா, ரிலாமுல்லா எஸ்டேட்

2022-01-26 08:30-17:30
**விநியோகம்** : கேடகந்துரா, வலப்பனே படகொல்லாகம திட்டம்

2022-01-26 09:00-17:00
**மொத்த மற்றும் விநியோகம்** : வலப்பனே டவுன், வலப்பனே நீர் வாரியம்
**விநியோகம்** : தெலிவல களபுதுவா RE, கேடகந்துரா, கிரிகேகந்தா, கும்பல்கமுவா, கும்பல்கமுவா டயலாக் டவர், கும்பல்கமுவா கந்தா காலனி, கும்பல்கமுவா பள்ளி சாலை, முல்கல்கேல், வலப்பனே படகொல்லாகம திட்டம், வெவால்கலே

## மின் பொறியியலாளர் பிரதேசம் : கேகாலை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கேகாலை

2022-01-17 09:00-17:00
**விநியோகம்** : தீவால பல்லேகம

2022-01-27 09:00-17:00
**விநியோகம்** : தீவால பல்லேகம

2022-01-31 08:00-17:00
**மொத்த** : புதிய பழம், , சூரியபுரா
**விநியோகம்** : , இம்புல்கஸ்டெனிய சந்தி, குருத்துவத்தா (இம்புல்கஸ்டேனியா), ∴போராம்பே, வட்டராம, யதத்தவாலா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மொறெந்தோட்டை

2022-01-25 08:00-17:00
**மொத்த** : ஹல்மேச மர ஆலை , நீர் சுத்திகரிப்பு நிலையம் (நீர் சுப். மொரொன்டோட்டா), நீர் வாரியம் ஹல்மேச
**விநியோகம்** : ரோட்டுவ கெசல்வட்டா மொரொன்டோட்டா & அலபாலவெலா, மொரான்டோட்டா சந்தை, மொரொன்டோட்ட புதிய துணை (ஹெல்மெச சாலை)

2022-01-28 08:00-17:00
**மொத்த** : ஒட்டு பலகை (லக்மேனியர் மீடெனியா)
**விநியோகம்** : அலபலவேலா, ஹப்புவிதா உதகம, ஹெட்டிமுல்லா ஜக்ஷன், மீடெனியா, உடுகம ∴பாண்டேனியா, உடுமகம கிராமம், வதுரா, வதுர அமுன

2022-01-28 09:00-17:00
**மொத்த** : ஹல்மேச மர ஆலை , நீர் சுத்திகரிப்பு நிலையம் (நீர் சுப். மொரொன்டோட்டா), நீர் வாரியம் ஹல்மேச
**விநியோகம்** : அலபலவேலா, ரோட்டுவ கெசல்வட்டா மொரொன்டோட்டா ரூ அலபாலவெலா, மொரான்டோட்டா சந்தை, மொரொன்டோட்ட புதிய துணை (ஹெல்மெச சாலை), வதுரா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : இறம்புக்கனை

2022-01-18 08:00-17:00
**விநியோகம்** : போரலுவா ஆர்.இ (எத்வதேவட்டா), எரியகொல்லா, கோடகண்டேனியா ஆர்.இ., கன்சலகமுவ ஆர்.இ, வாலகோடா ஆர்.இ (மல்மேயா), மீதேனியா இலககம ஆர்.டி., பராப் ii, பரபே கனுகொல்லா, பஹலகம ஆர்.இ, வெனிவெல் கொலோனியா

2022-01-24 08:00-17:00
**விநியோகம்** : தேதுனுபிட்டி (தமுனுபோலா), தேதுனூபிட்டி ஆர்.இ, கோதத்தலேவத்தா, ஹெயின்போவா கூடுதல் எஸ்/ எஸ் ரம்புக்கனா, கலோடுவாவா,

2022-01-30 09:00-17:00
**விநியோகம்** : டயலொக் டவர் - ஹிரிவதுன்னா, தியாகம

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : துல்கிரிய

2022-01-18 09:00-17:00
**விநியோகம்** : கிரிவானா முகானா, உடவல்போலா ஆர்.இ.

2022-01-23 08:00-16:30
**மொத்த** : , மாஸ் ∴பேப்ரிக் ∴பார்க்
**விநியோகம்** :

2022-01-26 09:00-17:00
**விநியோகம்** : கிரிவானா முகானா, உடவல்போலா ஆர்.இ.

2022-01-27 08:00-17:00
**மொத்த** : வாட்டர் பம்ப் வெரபிட்டி
**விநியோகம்** : படுவட்டகேதா, பெலிகலா ஆர்.இ., தேமடனுவ எலிகலா, ஹதகொட பராகஹலியத-01, கும்பல்கம, மகுடலா, மொபிடல் டவர் வெராகோடா, பலபோலுவா, மகுடலா பல்லேவேலா (கல்கடுவா), வடுகட மெத்தியகம

2022-01-29 08:00-17:00
**விநியோகம்** : புருன்னாவா, காஸ்னாவா உதகோட்டாசா, கஸ்னாவ யுவர்னாவட்ட, இஹலா மொராவாக்கா, இம்புலோவிடா புலுகஹட்டண்ணா, பீலகம்புரா, தோலங்கமுவ, உடுகும்புரா, உடுகும்புரா சந்தி, வட்டகோலுவாவா (ஒத்னாபிட்டியா)

2022-01-30 08:00-17:00
**மொத்த** : கிளீன் பாலி பேக்கிங் (பிரைவேட்) லிமிடெட்., கலிகமுவ ஆடை, நெலும்தேனிய தேயிலை தொழிற்சாலை, ரோ லங்கா இண்டஸ்ட்ரீஸ்
**மொத்த மற்றும் விநியோகம்** : யத்தகோடா - 1
**விநியோகம்** : அசல்லா காந்தா ஆர்.இ., படபோடெல்லா, இலககம, , மொபிடல் டவர் மன்பிடா, நெலும்தேனிய துணை 01 (மன்பிட்டிய), , சியம்பலபிட்டியகம, யட்டோகோடா II, கிளீன் பாலி பேக்கிங் (பிரைவேட்) லிமிடெட்.

## மின் பொறியியலாளர் பிரதேசம் : மாவனல்லை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : திப்பிட்டிய

2022-01-18 09:00-17:00
**விநியோகம்** : அரவ்போலா லபுதுவா திட்டம், அஸ்மதாலா, தஸ்வத்தா, டயலொக் டவர் அஸ்மதாலா, எபலாவா லைட் இன்ஜி., கால் அதாரா, கால் அதாரா இலககம, , சுதுகலா, வட்டேகெதரா (மில்லங்கொட)

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ஹேம்மத்தகமை

2022-01-19 09:00-17:00
**விநியோகம்** : அம்படேனியா குர்கலா, சியம்பலவா

2022-01-20 09:00-17:00
**விநியோகம்** : உயன்வத்தை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மாவனல்லை

2022-01-19 08:00-12:00
**விநியோகம்** : வாலகோடா இஹலா கோட்டே

2022-01-20 09:00-17:00
**விநியோகம்** :

2022-01-21 09:00-17:00
**மொத்த** : அதாவுத மெட்டல் க்ரஷர் மாவனெல்லா, எட்னா இன்ஜினியரிங், இலுகோடா மெட்டல் க்ரஷர், ரிவர் வியூ கார்டன் ஹீன்டெனியா - மாவனெல்லா
**மொத்த மற்றும் விநியோகம்** : வெலிகல்லா நீர் வழங்கல்
**விநியோகம்** : அன்வராமா, தனகம கலோனி, இலுகோடா - i, இலுகோடா - ii (புதியது), கிரிங்கடேனியா, கோண்டேனியா, மவனெல்லா மயுரபாத, ரெனகேதுகம மெல்லக்கலே,

2022-01-22 08:00-12:00
**விநியோகம்** : வாலகோடா இஹலா கோட்டே

2022-01-22 09:00-17:00
**மொத்த** : கனோரா தேயிலை தொழிற்சாலை - ஹிங்குலா, கணேதன்னா தேயிலை தொழிற்சாலை, கொடித்துவக்கு மெட்டல் க்ரஷர், நீர் வாரியம் பஹால கடுகண்ணவா, வின்ஸ்லேண்ட் ரியாலிட்டி ∴பார்ம்
**விநியோகம்** : ஹிங்குலா மசூதி, ஹிங்குலோயா தேயிலை தொழிற்சாலை, கோண்டேனியா, மகதவாரா உடுவேவா புதியது, ஹிங்குலாவில் புதிய துணை

2022-01-22 14:00-16:00
**விநியோகம்** : மேகேல்வாலா இலககம

2022-01-27 09:00-17:00
**மொத்த** : அத ரனய டா மெட்டல் க்ரஷர் மாவனெல்லா, இலுகோடா மெட்டல் க்ரஷர்
**விநியோகம்** : தனகம கலோனி, இலுகோடா - i, இலுகோடா - ii (புதியது), கோண்டேனியா, ரெனகேதுகம மெல்லக்கலே

## மின் பொறியியலாளர் பிரதேசம் : நாவலப்பிட்டி

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கம்பளை

2022-01-17 08:00-17:00
**விநியோகம்** : ஹரகோலா

2022-01-23 08:00-17:00
**விநியோகம்** : ஹரகோலா

2022-01-26 08:00-17:00
**விநியோகம்** : ஹரகோலா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : குருந்துவத்தை

2022-01-18 08:00-17:00
**மொத்த மற்றும் விநியோகம்** :

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : நாவலப்பிட்டி

2022-01-25 08:00-17:00
**விநியோகம்** : ராணுவ முகாம் - நவலப்பிட்டிய, முகாம் பகுதி - துணை நிலையம் 1, முகாம் பகுதி - துணை மின்நிலையம் 2, நாயபனா, நுகாவேலா

## மின் பொறியியலாளர் பிரதேசம் : நுவரெலியா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : லிந்துலை

2022-01-28 09:00-13:00
**விநியோகம்** : மேல் கோட்மலே எண் 1

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : நுவரெலியா

2022-01-27 09:00-17:00
**மொத்த** : புதிய ஹவுஸ் காம்லெக்ஸ் - சீதேலிய, பார்க் எஸ்டேட்,
**மொத்த மற்றும் விநியோகம்** : கான்கார்டியா எஸ்டேட், கோர்ட்லோட்ஜ் எஸ்டேட், எஸ்கடேல் எஸ்டேட், வால்ட்ரிம் புதிய தொழிற்சாலை
**விநியோகம்** : போரலண்டா ஆர்.இ., புலுயெல, CEB வீட்டுவசதி திட்டம் மகஸ்டோட்டா, கொழும்பு வணிக நிறுவனம்., கோர்ட்லோட்ஜ் RE, ஏகங்கபுர, வனக் கல்லூரி, கண்டபோலா 6 வது மைல் போஸ்ட், கண்டபோலா எண் 02, கல்பாலமா, கண்டபோலா எண் 03, சம்மர் ஹில், கண்டபோலா டவுன், மூன் விமானம், பார்க் RE, பருத்தித்துறை பண்ணை, சதாதன்னா வீட்டுவசதி திட்டம், சீதா எலியா பண்ணை

2022-01-31 09:00-13:00
**மொத்த** : எடின்பரோ எஸ்டேட்
**மொத்த மற்றும் விநியோகம்** : கால்ஸ் மகா எலியா எஸ்டேட், கிளாரிண்டன் எஸ்டேட், டெஸ்∴போர்ட் எஸ்டேட், ஹேலிஸ் நானு ஓயா
**விநியோகம்** : அபோஸ்ட்லை டெஸ்∴போர்ட், பங்கலஹதா ஆர்.இ., பிளாக்பூல் - i, பிளாக்பூல் - ii, கிளாஸ்கோ எஸ்டேட், நானு ஓயா டவுன், நவ ஜனபடய, பராகம்புரா, ஸ்மார்ட் ∴பேஷன் ராடெல்லா - நானுஓயா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தவலத்தேனை

2022-01-19 09:00-13:00
**விநியோகம்** : ஈடன் எஸ்டேட்

2022-01-25 09:00-13:00
**மொத்த மற்றும் விநியோகம்** : ∴பெர்ன்லேண்ட்ஸ் (கைபுகலா), வடக்கு மேடகம்புரா, வட்டகோடா எஸ்டேட்
**விநியோகம்** : ஹோலிரூட், மடகும்புரா தெற்கு, மேடகம்புரா, வட்டகோடா டெலிகாம், வட்டகோடா டவுன்

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வலப்பனை

2022-01-26 08:30-17:30
**மொத்த மற்றும் விநியோகம்** : வாலபனே நீர் வாரியம், வதுமுல்லா
**விநியோகம்** : கிரிகந்தா, கும்பல்கமுவ, முல்ஹல்கேலே, கீர்த்தி பந்தரா பள்ளித் திட்டத்திற்கு அருகில் நாரந்தலவா ரிதி எல்லா, வாலபேன் டயலொக் டவர்

## மின் பொறியலாளர் பிரதேசம் : பேராதனை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தவுலகல

2022-01-18 09:00-17:00
**மொத்த** : கண்டி ஆடை, தேஹிவத்தா தேயிலை தொழிற்சாலை
**மொத்த மற்றும் விநியோகம்** : தவுலகல பூஸ்டர் பம்ப்
**விநியோகம்** : பட்டுபிட்டியா, தஸ்கரா, எலடத்த (வஹுன்கொடுவ), எலதத்தா மேற்கு - புதியது, ஹபுகாஹா யதாபின்னர், முருதகஹமுலா, உயன்வத்தை, வாகிரியா

2022-01-20 08:30-17:30
**மொத்த** : கலியோயா டெலிகாம்
**விநியோகம்** : கூடுதல் துணை மின்நிலையம் பிதாவலவத்தா, சம்பா பிஸ்கட் (சில்வர்லைன் இன்டென்ஷனல் பள்ளி), எகோடா கலகுமுவ, எல்பிட்டியா புதியது, கெலியோயா, கெலியோயா டவுன் புதியது, கலுகமுவ புதியது, மீகோடா கலுகமுவ புதியது, பல்நோக்கு கட்டிடம் - கெலியோயா

2022-01-21 09:00-17:00
**மொத்த** : கிரீன்வாலி தொழிற்சாலை, உதயகண்ட தேநீர்
**மொத்த மற்றும் விநியோகம்** : ஹம்மீடியா தேயிலை தொழிற்சாலை - கம்போலா
**விநியோகம்** : லி யான்கஹ எஸ்டேட், ராகவல்போல சந்தி வெலம்பொட, வட்டதேனியா - அப்பல்லகோடா, வெலம்போட - 01, வெலம்பொட மசூதி

2022-01-25 09:00-17:00
**மொத்த** : குயிக் பேக் (பிரைவேட்) லிமிடெட்
**விநியோகம்** : எலமால்தேனியா, மீவலதேனியா, முருதகஹமுலா, நிகடென்னா (பெட்டியாகோடா), பேத்தியகோட

2022-01-31 09:00-17:00
**மொத்த** : எலிபடகந்த தேயிலை தொழிற்சாலை, சீவாலி மலை தேயிலை தொழிற்சாலை
**விநியோகம்** : அம்பன்வெலா, தேஹிதியாவத்த, கோதாடிகா எஸ்டேட், குடுமிரிஸ்ஸ, லி யான்கஹவேலா, மாவீகுபுரா, நிகஹதியா, நோனாவட்ட, வாரகவுல்லா, வட்டப்போலா ஆர்.இ., வெம்பிலிவத்த, வெள்ளளிவாத்தா - மை நோனாவட்டா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : இரியகம 2

2022-01-20 08:30-17:30
**விநியோகம்** : அங்குனாவல, கெலியோயா கரமடா, கரமட வடக்கு கோஷின்னா, கோசின்னா, குருண்டுவட்டா II (பெரடேனியா புதியது), விக்கிரமசிங்கவின் பட்டறை கெலிஓயா

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கலஹா

2022-01-21 08:30-17:30
**மொத்த மற்றும் விநியோகம்** :
**விநியோகம்** : மகாமுல்கம ஹுனுகலா, மொராஹேனா,

2022-01-28 09:00-17:00
**மொத்த** :
**விநியோகம்** :

**பிரதி பொது முகாமையாளர், (மத்திய மாகாணம் 02) இலங்கை மின்சார சபை, கல்லுக்குழி வீதி, ஈரியகம பேராதனை.**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

# சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை

பொது

கொழும்பு பொலித்தீன் தொழிற்சாலைக்கு உற்பத்தி பொதியிடலில் உதவியாளர்களுக்கு வெற்றிடங்கள். சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0777893786

001023

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

இல. 27, என்டருதென்ன, நுகவெல எனும் முகவரியில் வசிக்கும் அஸீஸ் ஸாஜிதா பயாஸா ஆகிய நான், கண்டி மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் பணியாற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆக இணைந்து கொள்வதற்காக இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக நொத்தாரிசு 107ஆம் கட்டளைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் இன்றிலிருந்து ஒரு மாத காலத்தில் பதிவாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்

**அஸீஸ் ஸாஜிதா பயாஸா**

**இல. 27, என்டருதென்ன, நுகவெல.**
**13.01.2022**

## நொத்தாரிசு இறுதி பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்

இலக்கம் 10/B, முதல் லேன், கங்கபாத வீதி, வேவல, பிலியந்தலை என்ற முகவரியில் வசிக்கும் சுராணி பியுமலி மண்டிஸ் ஆகிய நான், நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107) பிரிவு 7ன்படி கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்ற வலயத்தில் சிங்கள மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்ற பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**எஸ்.பி. மண்டிஸ்**
**இலக்கம் 10/B, முதல் லேன், கங்கபட சாலை, வேவல, பிலியந்தலை.**
2022.01.10

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின், களனி பொல்ஹேன, இலக்கம் 192 இல் முன்னர் வசித்த வரும், தற்பொழுது இலக்கம் 44-2, Changwon - SI, Gyeongsangnam -do, Korea இல் வசிப்பவருமான Innasige Prasath Susantha (தே.அ.அ.இல. 843060277V) ஆகிய நான்,
இலக்கம் 12, பொல்ஹேன, களனிய வில் வசிக்கும் களுதன்த்ரி லியனகே டொன்யுகன்தி கல்பனி சுபசிங்ஹ (தே.அ.அ.இல. 886251432V) என்பவருக்கு வழங்கப்பட்டதும்,
கம்பஹா பிரசித்த நொத்தாரிசு D.P. வனிகசுந்தர என்பவரினால் 2014 செப்டம்பர் 22ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2742 இலக்க முடையதுமான அற்றோணி தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் மற்றும் தொடர்புடைய ஏனையவர்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் என்சார்பில் அவர் மேற்கொண்டுள்ள, மற்றும் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**INNASIGE PRASATH SUSANTHA**

## தெஹிவளை - கல்கிசை மாநகர சபை

### வாகனங்களை வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக்கோரல் 2022/2023 ஆண்டுகள்

தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின், சேவையில் ஈடுபடுத்துவதற்காக வளிச்சீராக்கியுடன் மற்றும் வளிச்சீராக்கியின்றி வேன், மோட்டார் கார், திரீவீல், லொறி மற்றும் பொருட்களை போக்குவரத்துச் செய்யும் டிரக்டர் வாடகைக்குப் பெறுவதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வாகனங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் விலைமனுக்களை இந் நகர சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி மாதிரிப் பத்திரத்தின் மூலம் அதனுடன் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000/- மற்றும் அரச வரித் தொகையும் செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை வேன் மற்றும் மோட்டார் வாகனங்களுக்காக ரூ. 25000/-,உம் டிரக்டர் இற்கு ரூ. 10,000/- உம் திரீவில் இற்காக ரூ. 10,000/- உம், மற்றும் லொறி இற்காக ரூ. 15000/- உம், செலுத்தி குறித்த கேள்வி மாதிரிப் பத்திரம் மற்றும் அறிவுருத்தல் பத்திரங்கள் 2022.01.18ஆம் திகதி முதல் 2022.02.07 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் நிதித் திணைக்களத்தில் (வழங்கல் பிரிவு)இல் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்த கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 2022.02.08ம் திகதி பி.ப. 2.00 வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.

குறித்த மாதிரிப் பத்திரங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2022.02.08ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு 'மாநகர ஆணையாளர், தெஹிவளை - கல்கிசை மாநகர சபை, தெஹிவளை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது எனது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் சகலதையும் அல்லது ஒன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உரியது.

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும்**
**மாநகர ஆணையாளர்**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**




"நீர் என்பது ஒரு மனித உரிமை - துப்புரவு என்பது ஒரு சிறப்புரிமை"

## நீர் வழங்கல் அமைச்சு

### உலக வங்கி உதவியுடனான, நீர் வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுத் திட்டம் (WaSSIP)

கடன் இல. CR. 5685-lk

## நுவரெலியா மாவட்டத்தின் பிரதான பொறியியலாளர் பதவிக்கான வெற்றிடம்

உலக வங்கி உதவியுடனான, நீர் வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுத் திட்டமானது (WaSSIP) குழாய் நீர் சேவையை பெறுவதை அதிகரிப்பது மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் துப்புரவு ஏற்பாட்டை மேம்படுத்தல் மற்றும் குடிநீர் துறை நிறுவனங்களின் திறன் மேம்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் திட்ட பணிப்பாளரின் அலுவலகம் (PDO) கொழும்பில் நிறுவப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட உதவி பிரிவுகள் (DSU) நிறுவப்பட்டுள்ளன. திட்டத்தின் மொத்த செலவு 223 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் பின்வரும் குறைந்தபட்ச தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

### பிரதான பொறியியலாளர் பதவி (PS 3)

**இடம் :** நுவரெலியா மாவட்டம் (1 வெற்றிடம்)

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

1) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் (IESL) கூட்டு அங்கத்துவம் சகிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமானிப் பட்டத்தைப் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 9 வருட காலம் தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான பொது நிபந்தனைகள்

**வயதெல்லை**

விண்ணப்ப இறுதித் திகதியில் 64 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு**

2019/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் அடிப்படையிலான சம்பளம்

**சேவையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

திருப்திகரமான செயல்திறன் மதிப்பீடு அடிப்படையில், ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்கவாறு ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் அமையும். 2019/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த நியமனத்திற்கு ஏற்புடையதாகும்.

**தேர்வு முறை**

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும். விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதோடு நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் திறமை அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், அனுபவம், கடந்த கால சேவைகள் தொடர்பிலான அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனைத்து சுயவிபரங்களையும் விண்ணப்பதாரர்கள் வழங்குதல் வேண்டும் என்பதோடு அதனை 2022 பெப்ரவரி 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவியை" குறிப்பிடுதல் வேண்டும். அரச/ கூட்டுத்தாபனத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுத் திட்டம்**
**இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,**
**ஜூபிலி போஸ்ட்,**
**நுகேகொட.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கெஸ்பேவ நகர சபை

### மடபாத்தயில் உத்தேச பல்காரிய மண்டபத்தை நிர்மாணித்தல்


### 2021 – 12 – 24ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை விளம்பரத்தில் திருத்தம் செய்தல்

பொறியியல் மதிப்பீட்டின் விலைகள் மற்றும் நிர்மாணக் காலம் 180 நாட்கள் வரையாக திருத்தப்பட்டமையால் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே இருக்கும் வகையில் விலைக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படுதல் மற்றும் ஏற்றுக்கொள்ளும் நாட்கள் பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றது.

1. விலைக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படுதல் 2022-01-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
2. விலைக்கோரல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளல் 2022-01-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை

விலைமனுக்கள் திறக்கப்படுதல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து இடம்பெறும்.

**தலைவர்,**
**கெஸ்பேவ நகர சபை.**




ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

## மத்திய மாகாணம் 1 - ஜனவரி 2022

**மின் பொறியியலாளர் பிரதேசம் : தம்புள்ளை**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : நாவுலை**

2022-01-19 09:00-17:00
**மொத்த :** தலகஹகொடுவ (ராஜ்ஜம்மன), சுகியாம, தொழிற்துறைகளின் படம் (தனியார்) நிறுவனம்., சீக்கியர் எம்.பி.ஐ (தனியார்)
**விநியோகம் :** அம்பானா சந்தி, ஓபல்கல , குபலொலுவ ஜே.சி. அண்டவல (முகலன்யாய), பொல்கஹன்ய, சௌகம, கெடவல, நாகல காலனி, அகரஹடுவ, அண்டவல லிஹினிபிடிய, டெவரடபொல, ராஜமல் உயன, ராஜ்ஜம்மன நீர் வழங்கல், அகரஹடுவ மேடை - II, அண்டவல, பிபி-குறுக்கீடு, ஓபல்கல வட்டா

**மின் பொறியியலாளர் பிரதேசம் : கட்டுகஸ்தோட்டை**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : வத்தேகமை**

2022-01-16 09:00-17:00
**விநியோகம் :** கலதேனியா, துங்கண்டுரா, டோரகமுவ, கலம்பலமா, 1 வது மைல் இடுகை புவக்கஹதேனியா, ஒடிலோவா,
சர்வோதயா

2022-01-18 09:00-17:00
**மொத்த :** கண்டி கடல் உணவு
விநியோகம் : நபனா ஆர்.இ (பட்டியாதென்னா ஜே.சி), நபனா கல்லறை

**மின் பொறியியலாளர் பிரதேசம் : குண்டசாலை**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : கரலியத்தை**

2022-01-18 08:30-17:00
**விநியோகம் :** உடிஸ்பட்டுவ டவுன் - ii

**மின் பொறியியலாளர் பிரதேசம் : மாத்தளை**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : மாத்தளை**

2022-01-16 09:00-17:00
**மொத்த :** இன்டேக் பம்ப் ஹவுஸ் ஓயா பஹலா புதியது, நீர் உட்கொள்ளல், நீர் சுத்திகரிப்பு
**விநியோகம் :** கோங்கவேலா பஸ் ஸ்டாண்ட், ஹாரிசன் ஜோன்ஸ் சாலை, மோலந்தபிட்டி, தராலண்டா, தோளே

2022-01-19 08:30-17:00
விநியோகம் : கலோயா ஆர்.இ.

2022-01-19 09:00-17:00
**மொத்த :** வாரியபோலா மெட்டல் க்ரஷர்
விநியோகம் : வாரியபோலா, வாரியபொல சந்தி, எலிக் சப், கோஹோம்பிலிவேலா - கடைகள் துணை

2022-01-20 09:00-12:00
**விநியோகம் :** புல்லியார் கோவில சாலை

2022-01-20 09:00-16:00
**விநியோகம் :** பூரிஜ்ஜலா, புதிய நோரிடேக் போர். முகம், ரெட்பனகம

2022-01-22 09:00-17:00
**மொத்த மற்றும் விநியோகம் :** மருத்துவமனை மாத்தேல் துணை - 1
**விநியோகம் :** ரோஹன திசாநாயக்க மெகாவாட்

2022-01-25 08:30-17:00
**விநியோகம் :** வாரியபோலா

2022-01-27 08:30-17:00
**விநியோகம் :** கலோயா ஆர்.இ.

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : பல்லேபொல**

2022-01-18 08:30-12:30
**விநியோகம் :** undefined, ஹில்டன் காலனி, undefined, உடுகம,

2022-01-18 08:30-16:00
**விநியோகம் :** அலுத்கம மனாவட்டா, எபாவேலா கினிஹிரியா, கபாலா கோஸ்கஹயாயா

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : வேரகம**

2022-01-18 09:00-16:00
**விநியோகம் :** , வெனிவல்கொல்லா, கௌடா கிராமம், பொல்வத்தகந்தா - i, பொல்வத்தகந்தா - ii

2022-01-18 09:00-17:00
**விநியோகம் :** வெரலுகஸ்தண்ணா

2022-01-24 09:00-16:00
**விநியோகம் :** டிக்கும்புரா-மடகும்புரா, ரத்தோட்டா - ii

2022-01-31 10:00-16:00
**விநியோகம் :** டம்மண்டென்னா திட்டம்

**பிரதி பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் 1), இலங்கை மின்சார சபை, இல. 04, அஸ்கிரிய பாதை, கண்டி.**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இல. :- 2/2/1/143

காணி அமைச்சின் குறிப்பு இல. :- 4-3/17/2018/E/404

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2021.12.20ஆம் திகதிய 2259/4ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாகாணம் | : மேல் மாகாணம் |
| 02. | மாவட்டம் | : கம்பஹா |
| 03. | பிரதேச செயலாளர் பிரிவு | : கம்பஹா |
| 04. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 234, பெண்டியமுல்ல வடக்கு |
| 05. | கிராமம் | : பெண்டியமுல்ல |
| 06. | ஆரம்ப வரைபட இல | : 4265 |
| 07. | துண்டு இல | : 01 |
| 08. | விஸ்தீரணம் | : 0.3280 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்**
**கம்பஹா**

**கம்பஹா பிரதேச செயலகம்**

# காணி எடுத்தற் சட்டத்தின்

**(அத்தியாயம் 460)**

**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல. 11/3/3/1/27E**

**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/9/2017/MV/286**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2259/36 கொண்ட 2021.12.24 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலகப் பிரிவு | : லக்கல |
| கிராம அலுவலர் பிரிவு | : இல. E396 லேல்ஓய பிரிவு |
| கிராமம் | : லேல்ஓய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க) |
| காணியின் பெயர் | : மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி |
| வரைபட இலக்கம் | : பி.ஆ.வ. 13 குறைநிரப்பி 157 பத்திர இல.324 |
| துண்டு இலக்கம் | : 11047, 11049, 11051, 11052, 11054, 11055, 11057, 1058 |
| வரைபட இலக்கம் | : பி.ஆ.வ.13 குறைநிரப்பி 278 பத்திர இல.325 |
| விஸ்தீரணம் | : 0.0796 ஹெக்டயார் |
| துண்டு இலக்கம் | : 11060,11061,11062,11063 |

**எஸ். விஜயகுமார்**
**பிரதேச செயலாளர். லக்கல**

**2021.01.10 ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**




# SCFR 199/20, 200/20, 220/20 மற்றும் SCFR 251/20 கொண்ட உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் வழங்குதல்

**தொலைபேசி செய்தி இல.** RTM 151 (CRTM 269) 2020.06.04ம் திகதி RTM 152 (CRTM 270) 2020.06.04ம் திகதி RTM 159 (CRTM 277) 2020.06.04ம் திகதி RTM 160 (CRTM 278) 2020.06.04ம் திகதி வாசிக்கப்பட்ட RTM 636 (CRTM 1247) 2020.02.19 திகதிகளின் பிரகாரம் பதவி உயர்வு பெற்றுள்ள இலங்கை பொலிசின் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பெண் பொலிஸ் சார்ஜன்ட்களுக்கானது.

அரசியல் யாப்பின் 12(1) மற்றும் 14 (1) (g) யாப்பின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தினால் மனுதாரர்களுக்கு மேற்படி இலக்கம் கொண்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

1ஆம் பிரதிவாதியாக பொலிஸ் மா அதிபராக விநியோகித்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பெண் பொலிஸ் சார்ஜன்ட் பதவியுயர்வை சவாலுக்கு உற்படுத்தி மனுதாரர்களால் தொடுக்கப்பட்டுள்ள மேற்படி இலக்கத்தில் குறிப்பிடப்படும் வழக்கு பற்றி, பதவி உயர்வு பெற்று தற்போது பொலிஸ் சார்ஜன்ட் அல்லது பெண் பொலிஸ் சார்ஜன்ட் ஆக கடமையாற்றும் அதிகாரிகளுக்கு பத்திரிகை மூலம் அவ் வழக்கு பற்றி அறிந்து கொள்வதற்கு, கௌரவ உயர் நீதிமன்றம் மேலும், மனுதாரருக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கு கொழும்பு 12, உயர் நீதிமன்றத்தில் 29.03.2022 திகதி மு.ப. 10.00 இற்கு விவாதத்திற்கு எடுப்பதற்கு உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடுபட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தக் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் இடம்

| | |
|---|---|
| திகதி: 2022/02/01 | இல. 28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு.வவுனியா.<br>இல. 63C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.<br>விக்டோரியா கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.<br>இல. 179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.<br>இல. 103, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.<br>இல. 86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.<br>இல. 140/B, கொழும்பு வீதி, குருணாகல்.<br>இல. 311/J, ரன்வல சந்தி, கேகாலை.<br>இல. 05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.<br>இல. 328, ரஜின சந்தி, தம்புத்தேகம. |
| திகதி: 2022/02/02 | இல. 579, காலி வீதி, வெள்ளவத்தை.<br>இல. 14, மங்கள வீதி, கம்பஹா.<br>இல. 348, காலி வீதி, பாணந்துறை.<br>இல. 837E, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, மாலபே.<br>இல. 173, இரத்தினபுரி வீதி, ஹொரன.<br>இல. 18B, பிலியந்தல வீதி, மஹரகம.<br>இல. 546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.<br>இல. 498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.<br>இல. 64, மாகொல வீதி, கிரிபத்கொடை.<br>இல. 30A, நாவல வீதி, நுகேகொடை.<br>இல. 493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.<br>இல. 106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை.<br>இல. 310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.<br>இல. 49, சிமெண்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| திகதி: 2022/02/03 | இல. 01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.<br>இல. 131, நுவரெலியா வீதி, கம்பளை.<br>இல. 115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.<br>முத்துகுமாரன கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.<br>இல. 46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.<br>இல. 80, கண்டி வீதி, நுவரெலியா.<br>இல. 271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.<br>இல. 18/2, பதியத்தலாவ வீதி, மஹியங்கனை |

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்

**SINGER FINANCE**

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

## பெயர் மாற்றம்

பூண்டுலோயா, பார்லந்ட்ஸ் தோட்டம், மகேந்திரன் காயத்ரி சிவரூபன் ஆகிய நான் பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயரை எம். சிவரூபன் என மாற்றுகிறேன் அத்துடன் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

**- எம். சிவரூபன்**

**Repeat Your Ad For Better Offers**

**ஒன்றிணைத்தல் அறிவித்தல் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**மாஸ் அக்டிவ் (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனம் டீ எம் லங்கா ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்**

மாஸ் அக்டிவ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 2990) ஆகிய நிறுவனம் டீ எம் லங்கா ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 19644) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021 டிசம்பர் 10ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, 2021 டிசம்பர் 10ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றினையும் கம்பனிகள், 2021 டிசம்பர் 10ஆம் திகதியில் இருந்து மாஸ் அக்டிவ் (பிரைவட்) லிமிட்டட் என தொடரும்.

**சபையின் கட்டளைப்படி**
**செயலாளர்கள்**

**மாஸ் அக்டிவ் (பிரைவட்) லிமிட்டட்**

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் ஆகிய நிறுவனம் அக்பார் பார்மசியூடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்**

சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 335) ஆகிய நிறுவனம் அக்பார் பார்மசியூடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 11321) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021 டிசம்பர் 30ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, கீழ் 2021 டிசம்பர் 30ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றினையும் கம்பனிகள், கீழ் 2021 டிசம்பர் 30ஆம் திகதியில் இருந்து சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் என தொடரும்.

**நிர்வாகஸ்தர்**
**சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட்**

# கேள்வி அறிவித்தல்

கெபிதிகொல்லாவ பொது பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வர்த்தக கட்டிடத் தொகுதியில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஆடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 03 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடல்.

2022.03.01 முதல் 2025.02.28 வரை 03 வருட காலத்திற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கெபிதிகொல்லாவ வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்களை விநியோகித்தல் - 2022.01.20 முதல் 2022.02.09 பி.ப. 2.30 வரை**

**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2022.02.10ம் திகதி மு.ப. 10.00 வரை**

**கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2022.02.10 மு.ப. 10.30 இற்கு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.**

**அட்டவணை**

| தொடர் இல. | கேள்வி மேற்கொள்ளப்படும் வர்த்தக உரிமையின் தன்மை | குறைந்த பட்ச கேள்வி (03 வருடங்களுக்கு) | கேள்விப் பிணை வைப்புத் தொகை. ரூ. | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கீழ் மாடியின் கடை அறை இல. 06 | 720,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 02 | மேல் மாடி கடை அறை இல. 16, 18, 24, 25, 26, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 45, 46 | 360,000.00 | 15,000.00 | 2,000.00 |

01. மேற்படி அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு தொகை, கேள்விப் படிவக் கட்டணத் தொகையை கெபிதிகொல்லாவ பிரதேச சபைக்கு காசாக செலுத்திய பின்பு 2021.02.09 பி.ப. 2.30 வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (இவ்வேளையில் தேசிய அடையாள அட்டை அல்லது அதற்குச் சமமான செல்லுபடியாகும் வேறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை குறித்த நேரத்திற்கு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடுவதற்கு அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பிரதேச சபை, கெபிதிகொல்லாவ என்ற முகவரிக்கு அனுப்பலாம்.
03. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறு இரு உறைகளில் இட்டு அவ் உறைகளை பொறியிட்டு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் வர்த்தக உரிமை மற்றும் மூலப் பிரதி நகல் பிரதியென எழுதி அவ்உறைகள் இரண்டையும் மேலும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு, இடது பக்க மேல் மூலையில் விற்பனை உரிமையை குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. விண்ணப்பிப்போர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
05. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படுவர்.
06. கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை கெபிதிகொல்லாவ பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது 025-2298675 என்ற தொ.பே. இலக்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் சம்பந்தமாக கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**2022.01.13ம் திகதி**
**கெபிதிகொல்லாவ பிரதேச சபையில்**

**பீ.எம். டிகிரி பண்டார**
**கேள்விச் சபைத் தலைவர்,**

# பெறுகை அறிவித்தல்

மீரிகம பிரதேச சபைக்குரித்தான பின்வரும் கடை அறைகளை நீண்டகால குத்தகை முறையின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்காக பெறுகை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கடை அறை இல. | அமைவிட விபரங்கள் | சதுரஅடி பரப்பளவு | மாதாந்த வாடகை (ரூபா) | ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | 25 | மீரிகம ப.நோ. கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்னாலுள்ள கடை கட்டிடத்தொகுதி | 11'-0 x 10'x0" | 5750.00 | 862,500.00 (எட்டு இலட்சத்து அறுபத்திரண்டு இரண்டாயிரத்து ஐந்நூறு) |
| 02. | 26 | மீரிகம ப.நோ. கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்னாலுள்ள கடை கட்டிடத்தொகுதி | 11'-0 x 10'x0" | 5750.00 | 862,500.00 (எட்டு இலட்சத்து அறுபத்திரண்டு இரண்டாயிரத்து ஐந்நூறு) |
| 03. | 51/3 | பஸ்யால வீதி, மீரிகம | 36'-0" x 13'x0" | 6000.00 | 900,000.00 (ஒன்பது இலட்சம்) |

| | |
|---|---|
| பெறுகைப் படிவங்கள் வழங்கப்படுதல் | : 2022-01-18ஆம் திகதி முதல் 2022-02-07ஆம் திகதி வரை (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) |
| பெறுகைப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் | : 2022-01-18ஆம் திகதி முதல் 2022-02-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை |
| பெறுகைப் படிவங்கள் திறக்கப்படுதல் | : 2022-02-08ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு மீரிகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் இடம்பெறும். |

**நிபந்தனைகள்**

1. பெறுகை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 1000.00 ரூபா மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் மற்றும் 10,000.00 மீளளிக்கப்படும் வைப்பொன்றை வைப்புச் செய்தல் வேண்டும்.
2. அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத எவருக்கும் பெறுகை விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.
3. ஆகக் குறைந்த கேள்வியை விட அதிக தொகைக்கு பெறுகைக் கோரப்படல் வேண்டும் என்பதுடன், அதற்குச் சமமான அல்லது குறைவான கோரல்கள் நிராகரிக்கப்படும். யாராவது ஒருவர் அவ்வாறு கோரினால் அவரது பிணை வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.
4. இரு பிரதிகளில் பெறுகை விண்ணப்பங்களை வெவ்வேறாகப் பூர்த்தி செய்ததன் பின் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என்பவற்றை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளிலும் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் கடை அறையின் இலக்கத்தைக் குறிப்பிட்டு முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விகளை ''தலைவர், மீரிகம பிரதேச சபை, மீரிகம'' எனும் முகவரிக்கு 2022-02-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் தலைவர், மீரிகம பிரதேச சபை, மீரிகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதானால் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் பெறுகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. வரிகள் மற்றும் திருத்தவேலைகளை கடை உரிமையாளர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
6. தெரிவு செய்து கடை அறைக்கான மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், கடை வாடகை என்பவற்றை விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்.
7. உங்களால் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்படும் கடை அறையை வேறொருவருக்கு குத்தகைக்கு வழங்குதல், வாடகைக்கு விடுதல், ஒப்படைத்தல் கூடாது. அவ்வாறு செய்தால் கடை அறை மீண்டும் சபையால் சுவீகரித்துக்கொள்ளப்படும் எனவும் உங்களால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகை சபைக்குரித்தாக்கப்படும் எனவும் அறியத்தருகின்றேன்.
8. பெறுகைப் படிவங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
9. பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 033-2273206 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு அல்லது நேரில் வந்து விசாரிக்கவும்.

**சரத் நந்தசிறி ரணதுங்க,**
**தலைவர்,**
**மீரிகம பிரதேச சபை.**
**2022-01-10.**

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| இல. | பரீட்சை | பரீட்சை நடைபெறும் திகதிகள் | பரீட்சை நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (I) (2022) | 2022 ஜனவரி 16 | கொழும்பு |
| 02 | இலங்கை கீழைத்தேயக் கல்விச் சங்கத்தின் பரீட்சைகள் - 2020/2021 (2022) கீழைத்தேய பண்டித ஆரம்ப நிலைப் பரீட்சை | 2022 ஜனவரி 19, 20, 21, 24, 25, 26 | பிரதான நகரங்கள் சிலவற்றில் |
| 03 | இலங்கை கீழைத்தேயக் கல்விச் சங்கத்தின் பரீட்சைகள் 2020/2021 (2022) கீழைத்தேய பண்டித இடை நிலைப் பரீட்சை | 2022 ஜனவரி 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 31 | பிரதான நகரங்கள் சிலவற்றில் |
| 04 | இலங்கை கீழைத்தேயக் கல்விச் சங்கத்தின் பரீட்சைகள் - 2020/2021 (2022) கீழைத்தேய பண்டித இறுதிப் பரீட்சை (பொதுப் பட்டம்) | 2022 ஜனவரி 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 31 2022 பெப்ரவரி 01, 02 | பிரதான நகரங்கள் சிலவற்றில் |

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் இத்திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenets.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி : 011-2785230/ 011-2786150
தொலைநகல் : 011-2784232

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**5/5/2/AD/2021**
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2022 ஜனவரி 14ஆம் திகதி**

## கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வெற்றி



(யாழ்.விளையாட்டு நிருபர்)

வட்டக்கச்சி மத்தியகல்லூரியின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டுவரும் 15வயதுப்பிரிவினருக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய வெற்றியைப் பெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 25 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டினை இழந்து 115ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் தமிழின்பன் 38 ஓட்டங்களையும், மதுமிதன் 20 ஓட்டங்களையும், பெற்றனர்.பந்துவீச்சில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி சார்பில் பிரணிகன்3 விக்கெட்டினையும், செம்பியன், கஜீபன், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டக்கச்சி மத்தியகல்லூரிஅணியினர் 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும்இழந்து 95ஓட்டங்களைப் மட்டும் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தமிழின்பன், தெய்வீகன் ஆகியோர் தலா 4 விக்கெட்டினையும், பாநிலவன் 1 விக்கெட்டினையும்,வீழ்த்தினர்.

# ஓய்வு பெறும் முடிவை மாற்றினார் பானுக ராஜபக்ஷ






இலங்கை கிரிக்கெட் வீரர் பானுக ராஜபக்ஷ தனது ஓய்வு கடிதத்தை வாபஸ் பெற்றுள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

தனது தனிப்பட்ட காரணங்களைக்காக பானுக ராஜபக்ச சமீபத்தில் தனது ஓய்வு பெறும் கடிதத்தை இலங்கை கிரிக்கெட்டிடம் கையளித்திருந்தார்.

இந்நிலையில், அவசர முடிவுகளை எடுக்க வேண்டாமென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்ததுடன், இராஜினாமா கடிதத்தை மீளப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இளம் வீரராக நாட்டுக்காக விளையாட இன்னும் கால அவகாசம் இருப்பதால் அவசர முடிவுகளை எடுப்பதை விட சவால்களை எதிர்கொண்டு முன்னேறுவதே முக்கியம் என நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

தமது தனிப்பட்ட காரணங்களுக்காக விளையாட்டிலிருந்து விலகுவதற்கு வீரர்களுக்கு முழு உரிமை உண்டு என சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், நிர்வாகத்தில் பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது அநீதி இழைக்கப்பட்டாலோ தலையிட வாய்ப்பு இருப்பதாக மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தேசிய அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஓய்வு பெற விரும்பும் அல்லது ஓய்வு பெற்றுள்ள வீரர்கள் தொடர்பாக 3 நிபந்தனைகளை விதிக்க இலங்கை கிரிக்கெட் முடிவு செய்துள்ளது.

கடந்த (07 ம்திகதி ) இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு கூட்டத்தில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் ஒரு சில வீரர்கள் தங்களது ஓய்வை அறிவித்து வருகின்றனர் என்பதோடு, இலங்கை கிரிக்கெட்டால் உடற்தகுதி தொடர்பான இறுக்கமான கொள்கைகள் காரணமாக இம்முடிவு எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டென்னிஸ் வீரர் ஜோகோவிச் விசா விவகாரம்; கருத்து தெரிவிக்க மறுக்கும் ஆஸிப் பிரதமர்

அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் , செர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவாக் ஜோகோவிச்சின் விசா நிலையைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ளார்.

அதுபற்றிக் குடிவரவு அமைச்சர் முடிவெடுப்பார் என்று பிரதமர் மோரிசன் கூறினார்.

அந்நாட்டு அரசாங்கம் ஜோகோவிச்சின் விசாவை இரண்டாம் முறையாக இரத்து செய்யுமா என்பது குறித்துக் குழப்பம் எழுந்துள்ளது.

அவுஸ்திரேலியப் பகிரங்க டென்னிஸ் போட்டியின் ஆட்ட விவரங்களின் பட்டியலில் அவரின் பெயர் இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையே குடிநுழைவு அமைச்சர் அலெக்ஸ் ஹாக் ஜோக்கோவிச்சின்விசாவைமீண்டும்இரத்து செய்வது குறித்து யோசித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு அவரின் விசா இரத்து செய்யப்பட்டால், ஜோகோவிச் பெரிய பகிரங்க போட்டிகளில் 21ஆம் முறை வெற்றிபெற்று சாதனை படைப்பதற்கான வாய்ப்பில்லாமல் போகக்கூடும். பார்வையாளர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைப்பு



அவுஸ்திரேலியப் பகிரங்க டென்னிஸ் போட்டியில் பார்வையாளர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்படுகிறது.

நோய்த்தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக, மொத்தமுள்ள பார்வையாளர் எண்ணிக்கையில் 50 வீதத்தினர் மட்டுமே போட்டிகளைக் காண அனுமதிக்கப்படுவர்.

மெல்பர்ன் நகரில் கிருமிப்பரவல் மோசமாகி வருகிறது.

போட்டிகளுக்கு அனுமதிக்கப்படும் அனைவரும், உணவு உண்ணும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயம்.

சமூக இடைவெளிக் கட்டுப்பாடுகளும் அங்கு நடப்பில் இருக்கும்.

நேற்றுமுன்தினம் மெல்பர்ன் நகரில் 37,169 பேருக்குக் கிருமித்தொற்று உறுதியானது. மேலும் 25பேர் மாண்டனர்.

இந்நிலையில் வரும் திங்கட்கிழமை தொடங்கும் அவுஸ்திரேலியப் பகிரங்க டென்னிஸ் போட்டியில், ஆண்கள் பிரிவின் நடப்பு வெற்றியாளர் நோவாக் ஜோகோவிச் பங்கேற்பது குறித்த சர்ச்சை இன்னும் தொடர்கிறது.

கடந்த வாரம் விசா விண்ணப்பத்தில் கோளாறு இருந்ததாகக் கூறி, அவுஸ்திரேலிய எல்லைப் படை அதிகாரிகள் அவரைத் தடுத்து வைத்திருந்தனர்.

இருப்பினும் அவரது வழக்கறிஞர்கள் தொடுத்த வழக்கில் வெற்றிபெற்று, கடந்த திங்கட்கிழமை ஜோகோவிச் விடுவிக்கப்பட்டார்.




மாகாண மட்ட பெட்மின்டன் சுற்றுப்போட்டி:

# புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு பதக்கங்கள்





(புத்தளம் தினகரன் நிருபர்)

வடமேல் மாகாண பூப்பந்து சம்மேளனத்தினால் குருநாகல் மாநகர சபை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற பெட்மின்டன் சுற்றுப்போட்டியில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் மாணவர்கள் பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

இச்சுற்றுப் போட்டியில் 11 வயது, 15 வயது மற்றும் 19 வயது பிரிவினர்களுக்கான பெட்மின்டன் போட்டிகளில் சாஹிரா மாணவர்கள் 2 ம் இடங்களைப்பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

11 வயதின்கீழ் தரம் 06 எம்.ஹவாசம், ஆதீப் அஹமத்,
15 வயதின்கீழ் முஹம்மது
அப்பத், ஏ.எம்.நாமிக், 19 வயதின்கீழ்
எம்.பாசிம், எம்.ஹயாசிம் ஆகியோரே வெற்றிகளை பெற்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். இப்போட்டிக்கு சாஹிரா தேசிய பாடசாலையின் உதவி அதிபரும், பெட்மின்டன் பயிற்றுவிப்பாளரும், தேசிய நடுவருமான எம். என். எம். ஷரீக் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வழிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வளர்ச்சிப் பாதையில் அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம்

( அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

விளையாட்டு, கல்வி, சமூக சேவை போன்ற துறைகளில் அகலக் கால் பதித்திருக்கும் அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் 37 வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து, 38வது வருடத்தில் காலடி வைத்து, வீறுநடை போட்டு வருகின்றது. 1984ம் ஆண்டு விளையாட்டுக் கழகமாகத் தோற்றம் பெற்று, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் விளையாட்டு, கல்வி, சமூகசேவை போன்ற துறைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, பயணித்து வரும் அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகத்தின் நீண்டகால வெற்றிப் பயணமானது இமாலய சாதனை என்றால் அது மிகையாகாது.

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக ஆரம்பகர்த்தாக்கள் இன்று பல்வேறு துறைகளில் உயர்ந்து நிற்கின்றனர். ஆனால், அவர்களது நன்நோக்கம்,முயற்சி வீண் போகாதவாறு கழகத்தின் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு.

விளையாட்டுக் கழகமொன்றை ஆரம்பிப்பது என்பது, இலகுவான காரியமாக இருக்கலாம்.

ஆனால், அதனை அங்கத்தினர்களுக்கும், சமூகத்தினருக்கும்,பிராந்தியத்திற்கும் பயன் மிக்கதாகவும், இலக்கு நோக்கிய பணயத்திலிருந்து விலகிவிடாது வளர்த்தெடுப்பதென்பது கடினமான காரியமாகும்.சுப்பர்சொனிக் கழகம் என்ன நோக்கத்திற்காக அன்று ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திலிருந்து சற்றும் விலகி விடாது, இன்றும் பெருமளவு அங்கத்தினர்களுடன் பயணிக்கின்றது என்றால், அது வரலாற்றுச் சாதனைதான்.ஆரம்பகர்த்தாக்களின் நல்ல நோக்கமே இதற்கு காரணமாக இருக்க வேண்டும். அங்கத்தினர்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்து கொண்டு, கழகமொன்று தன்னை வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொள்வது என்பது இலகுவானதல்ல. ஆனால், சுப்பர்சொனிக் கழகம் அதனை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது என்பதற்கு அதன் அங்கத்தினர்களே சாட்சியாவர்.சுப்பர்சொனிக் கழக அங்கத்தினர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாக மிளிர்வதுடன்,கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் உயர்ந்து நிற்கின்றனர். பலர் பல்கலைக்கழக அனுமதி பெற்று கழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.



மேலும் பலர் விளையாட்டுத் துறையில் சாதனை நிலைநாட்டி கழகத்திற்கும், பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.இவ்வாறான சாதனையாளர்களைக் பாராட்டி கௌரவிக்கும்; 'வர்ண இரவு' விழா, அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் அண்மையில் விமர்சையாக நடைபெற்றது.

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகத் தலைவர் எம்.ஐ.எம்.அஷ்ரஃப் தலைமையில் நடைபெற்ற இவ்விழவில், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

விழாவில், தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைக் குவித்து, அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கும், சுப்பர்சொனிக் விளையாட்டுக கழகத்திற்கும் பெருமை பெற்றுக் கொடுத்த விளையாட்டு வீரர்கள் மற்றும் கல்வித்துறைச் சாதனையாளர்கள் பதக்கம் விருதுவழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.விளையாட்டு, கல்வி, சமூகசேவை போன்ற துறைகளில் சிறந்து மிளிரும் அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக வளர்ச்சிக்காக எதிர்வரும்ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ரூபா 02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். அத்துடன் உதைபந்து விளையாட்டு அபிவிருத்திக்காகவும்பிரத்தியேக நிதி உதவி வழங்கப்படும் என்றார். கழகத்தின் உபதலைவரும், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.எல்.அப்துல் முனாப், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வத்,செயலாளரும் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமானஏ.ஆர்.எம்.சாதீக், பொருலாளர் எம்.எஸ்.ஹம்ஸார், கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள், பெற்றார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.


# கிறிஸ் மொர்ரிஸ் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சு சகல துறைவீரரான கிறிஸ் மொர்ரிஸ் அனைத்துவகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெறுவதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

தற்போது 34 வயது நிரம்பியிருக்கும் கிறிஸ் மொர்ரிஸ் 2012ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற 20க்கு20 போட்டி மூலம் சர்வதேச அறிமுகம் பெற்றிருந்தார். அதன் பின்னர் தனது தாயக ஒருநாள் அணியின் நிரந்தரவீரராக மாறியிருந்த அவர் 2019ஆம் ஆண்டிற்குப் பின்னர் தென்னாபிரிக்க அணிக்காக எந்தவொரு போட்டிகளிலும் ஆடியிருக்கவில்லை. எனினும் கிறிஸ் மொர்ரிஸ் வெவ்வேறு நாடுகளின் 20க்கு20 லீக்குகளில் தொடர்ச்சியாக பிரகாசித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் தனது உத்தியோகபூர்வ இன்ஸ்டாக்கிரம் கணக்கின் மூலமாக தனது ஓய்வினை அறிவித்துள்ள கிறிஸ் மொர்ரிஸ், இனி கிரிக்கெட் பயிற்சியாளராக கவனம் செலுத்தப்போவதாக அறியக்கிடைக்கின்றது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்காக 4 டெஸ்ட், 42 ஒருநாள் மற்றும் 23 200க்கு20 போட்டிகளில் ஆடியுள்ள கிறிஸ் மொர்ரிஸ் அவற்றில் 94 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருப்பதோடு, 773 ஓட்டங்களை குவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதோடு மொர்ரிஸ் தான் விளையாடிய அனைத்து 20க்கு20 போட்டிகளிலும் 290 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.




கிறிஸ் மொர்ரிஸ் இந்திய பிரீமியர் லீக் 20க்கு20 தொடர் வரலாற்றில் அணியொன்று வெளிநாட்டு வீரர் ஒருவருக்காக ஒரு பருவகாலத்தில்“ செலவு செய்திருந்த அதிக தொகையினைப் பெற்ற வீரராகவும் இன்று வரை காணப்படுகின்றார். அந்தவகையில் மொர்ரிஸினை கடந்த பருவகால இந்திய பிரீமியர் லீக் போட்டிகளுக்காக ராஜாஸ்தான் ரோயல்ஸ் அணி இந்திய நாணயப்படி 16.25 கோடி ரூபாய்களுக்கு (இலங்கை நாணயப்படி 44.5 கோடி) கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.